தாளுகண்டம்.

மேல் பறளை தவடையில் மாமிசம் சிலேஷ்ம பிரகோபத்தினுல் தாளுகண்டமுண்டாம். தவடையிலே தான் மேல்பறளையிலேதான் பலாக்காய் முள்போலே தடவிப்பார்த்த கைக்கு சுறசுறவென்றும், குழந்தை வாயிலே இருக்கும். அதனுல் முலைபிடித்து உண்ணுது. உண்ட பாலைக் கக்கும். சற்று முலையுண்டு அடிக்கடி முலையை விட்டுவிடும். வாயில் தினவு கண்டு வாயை மெல்லும். கழுத்தை உயர எடுக்கும். வாந்தி பண்ணும். கன்னம், தாடை குழிந்து இருக்கும். தலை நோகும். மூத்திரம் அடிக்கடி பெய்யும். வயிறு ஓடும்.

இதற்கு மருந்து.

யவக்ஷாரத்தைச் சூரணம் பண்ணி, தேனில் குழப்பி, தவடையிலும் மேல் பறளையிலும் அந்த முள் மடியத் தேய்க்கவும். சுக்கும் சுக்குமாட்டின சாணச்சாற்றில் அரைத்துத் தவடைக்குள் முள் மேல் பூசவும். இந்துப்பு, கடுக்காய், வசம்பு, கோஷ்டம் இவற்றைச் சூரணம் செய்து, தேனுடன் குழப்பி, நாக்கில் தடவ, தாளுகண்டம் தீரும்.

முகதூஷிகையும் அதன் பரிகாரமும்.

முகதூஷிகையில் பரு முள்ளுப்போலே முகத்திலே வெடிக்கும். இது வாதசிலேஷ்ம பிரகோபத்தினுலே குழந்தைகளுக்கு வரும். சீரகமும் அஞ்சனக்கல்லும் சாந்திதளச்சாற்றில் அரைத்து முகத்துக்குப் பூச தீரும்.

அரசு முதலான க்ஷீரவிருக்ஷங்களுடைய பட்டை, அதிமதுரம், கடுக்காய் இவற்றைச் சாந்திதளச்சாற்றில் அரைத்துத் தேனில் குழைத்து பூச, முகதூஷிகை தீரும்.

செவ்வாப்பு குறியும் குணமும் பரிகாரமும்.

இது பித்த விகாரத்தினுல் சிசுவிற்கு உடம்பிலே வெடிக்கும். இராத்திரியில் கருகினுப்போலே அடங்கி இருக்கும். பகலில் அதிகமாம். சிவந்து வீங்கி உடம்புள் துளேக்கும்; எரியும்; தினவு எடுக்கும். பிரம்பைக்கொண்டு அடித்தது போல் தழும்பு உண்டாகும். சிலந்திகள்போலும் கழலேகள்போலும் புறப்படும். இதற்குச் செவ்வாப்பு என்று பெயர் . . . . டான்சாறு, சரளம், கிளிமூக்குக்கிழங்கு, மஞ்சிட்டி, தாமரைத்தாது, நன்னுரி, சிறுகுரிஞ்சான், அறுகம்வேர் இவற்றைப் பாலில் அரைத்து, நெய்கூட்டிக் காய்ச்சி வடித்து, உடம்புக்கும் தடவி உள்ளுக்கும் கொடுக்க, உடம்பு எரிச்சல், வீக்கம் இவை முதலியன தீரும்.

க்ஷீரவிருக்ஷங்களுடைய துளிர்கள், அறுகம்வேர், பர்ப்பாடகம், கோரைக்கிழங்கு, நன்னுரிவேர், இலாமிச்சம்வேர், பெருங்குமிழ்வேர், சந்தனம், இதற்குச் சரிபாதி. . . . கூட்டி காடியில் அரைத்துப் பூச, உடம்புவீக்கமும் வெடித்தலும் எறிச்சலும் தீரும்.

நாபிகுண்டலமும் பரிகாரமும்.

வாதத்தினுலே தொப்புள் தலேயைச்சுற்றி நோகும். வாயிலெடுக்கும். புரளும். சேமுறிக்கும். பாலேக்காய்ச்சி செம்மண்ணேக் கூட்டிப் பிசைந்து, காய்ச்சி ஒற்றிடமிடவும்.

ஆமணக்கெண்ணெய்யும் உள்ளியும் சாறடைவேரும் திரிகடுகும் கூட்டி அரைத்துக் காய்ச்சி வடித்து முலேப்பாலுடன் கொடுக்கவும். வயிற்றுக் கழிதலும், வயிற்றுநோயும் தீரும்.

குண்டாலமும் பரிகாரமும்.

இது வாத பித்த சிலேஷ்மம் என மூன்றுவிதம். முதலில் தலேயிலாவது உடம்பிலாவது சுழலேபோல் திரண்டு கிளம்பும். சிவந்திருக்கும். புறப்பட நாள் சென்றுல் குழி விழும். அதிகமாக நோகும். வாதகுண்டாலத்தில் அதிகமாக நோகும். பித்த குண்டாலத்தில் எரியும். இரத்தம் பாயும். அதிசீக்கிரத்திலே உடையும், மெத்தென்று இருக்கும். சுரமும் உடம்பு எரிச்சலும் உண்டாகும். தாகமும் எடுக்கும். சிலேஷ்ம குண்டாலம் தினவுடன் கடினமாகவும் சீழ்பாய்ந்துகொண்டும் கல்லுப்போல் சிசுக்களுக்கு உபத்திரவம் செய்யும்.

பூவரசம்பஞ்சாங்கத்தைக் கஷாயம் செய்து, கல்கமும் கூட்டி வடித்து, பூச, உள்ளுக்கும் கொடுக்க, குழிப்புண் ஆறும். பூவரசம்பஞ்சாங்கத்தை

உலர்த்திச் சூரணம் செய்து முன்சொன்ன எண்ணெய்யைத் தடவி இந்தப் பொடியையிடவும் குழிப்புண் ஆறும்.

தாமரைக்கிழங்கு அதன் தாது, பூவரசுப்பஞ்சாங்கம் இவற்றைப் பாலில் அரைத்து, நெய், ஆமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் சரிவரக் கூட்டிக் காய்ச்சி வடித்து, உள்ளுக்கு கொடுக்கவும். புண்ணுக்கும் இடவும். குழிப்புண் ஆறும். குண்டால ஊனம் தீரும்.

குழந்தைகள் மண்ணைத் தின்றால் உண்டாகும் குறியும், குணமும், பரிகாரமும்.

வயிறு கட்டிக்கொண்டு வயிறு நோகும். உடம்பு வெளுத்துப்போம். வயிறு சூலைவயிறாக முன்னுக்குத் தள்ளும். வாயில் நீர் வரும். சோறு உண்ணாது, வாயிலெடுக்கும். வயிற்றிலே புழு விழும்.

வட்டத்திருப்பி, விடத்தேர்வேர், அதன் இலை, இருமஞ்சள், முத்தக்காசு, சிறுதேக்கு, சாறடைவேர், வில்வபத்திரிவேர், பஞ்சகோலம், தேள்கடி இவற்றை அரைத்து, நெய்யுடன் காய்ச்சி, ஆட்டுப்பாலுடன் போட, மண் தின்றதனால் வந்த நோய்கள் தீரும். ஆமணக்கெண்ணெய்யில் உள்ளியைக் கூட்டிக் காய்ச்சி வடித்தும் கொடுக்கலாம்.

குழந்தையின் கால் கை இரண்டுக்கும் கழுத்துக்கும் துளைத்த வசம்பைக் கட்ட பிள்ளைக்கு ஆயுள் உண்டாம். புத்தியுண்டாம். வியாதிவராது. பால கிரஹாதி பூதங்கள் சேரா. வசம்பை அவசியம் கட்டவும்.

நாயுருவியிலை இருகூறும், அசமதாகம் ஒரு கூறும் நறுக்கிப் பிழிந்து சாற்றுடன் முலைப்பால், ஒரு துளி எண்ணெய் இவற்றைக் கலந்து கொடுக்க செரியாமை, ஆறுக்கடுப்பு இவை நீங்கும்.

ஆடுதீண்டாப்பாளையை நிழலில் உலர்த்திச் சூரணம் செய்யவும். சிற்று மணக்கெண்ணெய்யைக் காய்ச்சி நறுக்கிய உள்ளி, வசம்பு, மேற்படி பொடி கூட்டிக் காய்ச்சி, இறக்கி, ஆற விட்டு, சருவாங்கமும் இட, கால் கையில் வெடித்தல், தலைப்புண், அசுகுளி, நாற்றம், தினவு, கரப்பான்புண், சிலந்தி, செவ்வாப்பு இவை தீரும். இந்தப் பிரயோகத்தை நெய்யில் கூட்டியும் செய்யலாம்.

ஜலயாரிக்கிழங்கு, கம்பிப்பிசின், கற்றாழைக்கிழங்கு, செண்பகப்பூ, வெண் நொச்சி, கரு நொச்சி, கற்றாழைமடலின்சோறு, புலிதொடக்கிப்பட்டை, செவ்வாப்புத்தழை, சென்றுரைப்பட்டை, கிளிமூக்குக்கிழங்கு, ஆகாசக் கருடன்கிழங்கு, செம்பரத்தைப்பட்டை, செங்கத்தாரிபட்டை இவற்றைச் சூர்ணம் செய்து, வெள்ளைக்குன்றிச்சாறு, கருக்குன்றிச்சாறு இதில் கிடைத்தது—குழிமிட்டான்வேர், செவ்வகத்தித்தழைச்சாறு இதில் விளக்கெண் ணெய்யாவது பசுவின் நெய்யாவது கூட்டி, மேற்படி சூரணத்தைக் கலந்து காய்ச்சி வடித்துக் குழந்தைக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் இட, சிலந்தி, செவ்வாப்பு, கரப்பான் இவை தீரும். இது ஜலயாரித்தைலம், இதனை கர்ப்பிணிக்கு கொடுக்க அவள் பெற்ற பிள்ளைக்குச் செவ்வாப்பு இல்லை.

காவட்டம்புல், நெட்டை, பேய்மிரட்டியிலே, திரிகடுகு, வெங்காயம் இவற்றை நறுக்கி, எண்ணெய்யில் கொதிப்பித்து, பிள்ளைக்கும் தாய்க்கும் வார்க்க, செவ்வாப்பு தீரும்.

கால், கை கடிவாதத்துக்கு மருந்து.

அழிஞ்சில்வேர்ப்பட்டை, எருக்கம்வேர், சித்திரமூலம், நிலாவாரைவேர், செவ்வலரிவேர்ப்பட்டை, தகர விதை, பெரும்புல்லின் வேரும் விதையும், கொன்றையின்பட்டையும் கொழுந்தும் ஆகிய இவ்வெல்லாவற்றையும் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து, விதைவாங்கி, ஊமத்தங்காயில் அடைத்து மணல் மறைவுப்புடமிட்டு எடுத்து, உள்மருந்து வாங்கி, அந்த மருந்தையும், துத்தம், துரிசு, இரசம், கந்தகம், அரிதாரம், மனோசிலே, வங்காளப்பச்சை ஆகிய இவற்றையெல்லாங் கூடவைத்து அரைத்து எண்ணெய்யில் கலந்து, வெயிலிலே ஏழுநாள் வைத்து எடுத்துக்கொண்டு, கால் கை கடிவாதங்களுக்கும் உடம்புச் சிரங்குகளுக்கும் தலைப்புண்ணுக்கும் இடவும். பீஜத்துக்கும் இடவும்.

வேறு.

கால் கை கடிவாதங்களுக்கு, கழுதைவிட்டையை வறுத்துக் கட்ட, கால் கை கடிவாதம் தீரும். பெரியவர்களுக்கும் இஃது உதவும்.

ஜகதிக்கிழங்கு, புலிதொடக்கிப்பட்டை, சங்கதாரிப்பட்டை, ஜலயாரிக்கிழங்கு, உள்ளி, வசம்பு இவற்றை நன்றாக நறுக்கி, பசுவின் நெய்யிலாவது சிற்றாமணக்கெண்ணெய்யிலாவது கூட்டிக் காய்ச்சி வடித்து, உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவும். இதை நீரில் கரைத்துக் கொதிப்பித்துப் பூச, செவ்வாப்பு வீக்கமும், குழந்தைகளுக்குக் கை கால் கழுத்து உடம்பு இவ்விடங்களிலே உண்டான வீக்கமும் தீரும்.

மாந்தமும் ஆமக்கட்டும் அதன் பரிகாரமும்.

குழந்தைகள் வாழைப்பழம் முதலிய பொருள்களைத் தின்றாலும், அவரை கடலை முதலிய குருவான பொருள்களைத் தாயார் தின்று முலைகொடுத்தாலும் மாந்தம் வரும். அதற்கு வயிறு ஊதும். வலிக்கும். கண் நட்டுப்போய் ஜுரம் வரும். இதற்குக் குருட்டிகைத்தாழையை வாட்டி பிழிந்த சாறு ஒரு சங்கு, சுட்ட ஆமையோட்டின்பொடி, வட்டத்திருப்பி, கடுகுரோகணி, வசம்பு, சுட்ட கரி, திரிகடுகு இவைகளைக்கூட்டி அரைத்து, முலைப் பாலும் கூட்டிக்கொடுக்க, கட்டுமாந்தம் தீரும்.

குருட்டிகையைச் சமூலம் குறுக நறுக்கி இடித்து, ஒரு சட்டியில் போட்டு நாலு காசெடை வசம்பு, ஓமம், வட்டத்திருப்பி, திரிகடுகு இவற்றைச் சமமாகப் போட்டு மூடி, கருக்கி, அந்தக் கரியில் அரைப்படி நீர்விட்டு அகப்பைகொண்டு கரியை மையாகத் தேய்த்து ஒரு சங்கு எடை கொடுக்கவும்.

செரியாமல் வயிறு ஊதல், மாந்தம், ஆமவலி, சுரம், ஆகிய சர்வமும் தீரும். முன்னே சொன்ன க்ஷீராலஸகம் முதலான வாய்வு எல்லாம் தீரும்.

குழந்தைகள் கண் அமரத்தினதும் குறியும் குணமும் பரிகாரமும்.

கண் வீங்கும். தினவு தின்னும். கண் எரியும். கண் பீளைகட்டும். சூடு வளரும். நீர் பாயும். இது மூன்று பிறைகண்டாலொழியப் போகாது. இதற்குக் கடுக்காய்ப் பொடியும், நன்ருக நறுக்கின சிறுபுள்ளடிவேரும், ஓர் இரட்டுத் துணியில் கட்டி, கால்படி எண்ணெய்யில் ஊறப்போட்டு, அந்தப் பொட்டணத்தை எடுத்து, குழந்தை கண்ணில் ஒரு நாளைக்குப் பத்துத் தரம் பிழியவும். அந்த எண்ணெய்யைக் கண்ணில் விட விட வீக்கம் வற்றும். கண் சிவப்பு வாங்கும். கண்ணோய் தீரும்.

கடுக்காய்ப்பொடி, சிறுபுள்ளடிவேர் இவற்றைச் சமமாக எடுத்து, எண்ணெய்வார்த்து அரைத்துப் புடவையிலே வடிகட்டி அந்த எண்ணெயுடன் எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பால் இவைகளைச் சமமாகக் கூட்டி. கரண்டியில் வார்த்து, நெருப்பில் காய்ச்ச, கூழ்போல் தைலம் ஆகும். அதனைக் குழந்தையின் கண்ணில் விட, அமரம் கண்ணோய் இவை தீரும்.

சுண்டைமணியும், நிலப்பனைக்கிழங்கும் சேர்த்துக் குழந்தைக்குக்கட்ட அமரம் தீரும்.

கக்குவான் இருமலுக்கு மருந்து.

ஈண்டின்கொம்பு கைப்பருமன், கொம்பின் மேல்நாரை இழைத்துச் சீவி வைக்கவும். குருட்டிகைஇலைச்சாறு படி $\frac{1}{2}$, ஆமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$, இவற்றை கூட்டிக்காய்ச்சி சாறு வற்றியவுடன் சீவிய ஈண்டின் நாரைப் போட்டு, மிளகு, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, அரைத்ததை, முதலைக்கண்டம், தாளிசம் இவற்றைச் சூரணம் செய்து அதில் போட்டு கிளறி இறக்கி வைத்துக்கொண்டு, தினம் காசெடை வீதம் வெள்ளாட்டுப்பாலுடன் கொடுக்க, இருமல், வயிற்றுப்புசம், மலக்கட்டு, வயிறு ஊதுதல், மாந்தவலி, ஆமக்கட்டு, ஈளை, இருமல், இரைப்பு இவை தீரும். இந்தப் பிரயோகத்தை இப்படியே பசுவின் நெய்யில் செய்து குழந்தைகளுக்குக் கொடுக்கவும். விளக்கெண்ணெய்யைத் தவிர, நெய்யிலும் செய்யலாம்.

சூதைக்கொம்புநாரை நறுக்கி அதனுடன் உள்ளி, திரிகடுகும் கூட்டிப் பொடித்து வைத்துக்கொண்டு, ஆமணக்கெண்ணெய்யைக் காயவைத்து அதில் பொடியைப்போட்டுக் கிளறி இறக்கி வைத்துக்கொண்டு, ஆட்டுப் பாலுடன் கொடுக்க, வயிறுகழிதலும் சூமக்கட்டும் தீரும்.

பிராமி கிருதம் செய்யும் முறை.

பிராமிச்சாறு படி 4, நெய் படி 1, பால் படி 1, வசம்பு 65, விளங்கம் 61, கடுக்காய் 61, மஞ்சள் 2, திரிபலை இவற்றை அரைத்துக் கரைத்து பதத்தில் காய்ச்சி முறைப்படி வடித்து எடுக்கவும்.

திரிகடுகு, ஓமம், இருமஞ்சள், இந்துப்பு, அதிமதுரம், கோஷ்டம், திப்பிலிமூலம், சீகரத்துவயம், விடங்கம், திரிபலை, அமுக்கராவேர், வானுளுவை இவற்றைச் சூரணம் செய்து, இதற்குச் சரி பாகம் வசம்புச் சூரணம் செய்யவும். எல்லாவற்றிற்கும் சம அளவு சர்க்கரை எடுத்துப் பாகுசெய்து, முதிர்ந்த பதத்தில் சூரணங்கலந்து இறக்கி, பொன்னின் தகட்டில் வடித்து

வைத்துக் கொண்டு, அதனை மூன்று காசெடை இரு தடவை கொடுக்கவும். பிரகஸ்பதிக்கு உண்டான புத்தியுண்டாம். ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாள்) கொண்டால் மகத்தான புத்தியுண்டாம். உன்மத்தம் தீரும். ஸ்வயம் கவித்வம் வரும். தினம் நூறு சுலோகம் பாடம் வரும். ஏகஸந்தக்ராஹீ யாக இருப்பான்.

சாயுவத கிருதம் செய்யும் முறை.

பிராமிச் சாறு படி 2, வல்லாரைச்சாறு படி 1, சீந்தில்கொடிச் சாறு படி 1, ஆடாதொடைச்சாறு படி 1, கரிசலாங்கண்ணிச் சாறு படி 1, வேளைச் சாறு படி 1, சர்வகந்திரஸம் படி 1, அமுக்கரா வேர்ச் சாறு படி 1, கொட்டைக்கரந்தைச் சாறு படி 1, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு படி 4, இவற்றுடன் 4 படி நெய்யைக் கலந்து அதனுடன் வசம்பு காசெடை 10, ஜோதிஷ் மதி விரை காசெடை 10, கடுகு வராகனெடை, மஞ்சள் காசெடை 2, கொத்துமல்லி காசெடை 2, கோஷ்டம் காசெடை 2, சந்தனம் காசெடை 2, தாமரைக் கிழங்கு காசெடை 2, நெய்தல் கிழங்கு காசெடை 2, திரி கடுகு, ஓமம் வகை காசெடை 2, சீரகத் த்வயம் காசெடை 2, இவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி முறைப்படி வடித்துப் பொன் கரண்டியால் எடுத்து நாக்கின் மேல் தடவ, மஹா ஸரஸ்வதி தேவி நாக்கிலே பிரத்யக்ஷமாக இருப்பாள். ஸரஸ்வதி தேவி நாவில் இருந்தால் வித்தைக்குச் சொல்லவேண்டுமா. ஜோதிஷ்மதிவிதை திர ளாகக் கிடைத்தால் கஷாயமிட்டுக் கூட்டிக்கொள்ளவும். இப் பிரயோகமெல் லாம் கூட்டி நெய் வடித்துக் கொடுக்கவும்.

பிள்ளை இணை.

ருதுவாகிக் குளித்து வருகிறவள் ஏதாவது சாப்பிடுவதற்கு முன்னே குழந்தையைக் கண்டால் அந்தக் குழந்தைக்கு இணை தாங்கும். மீளவும் ஸ்நானம் பண்ணவும். தோஷம் போகும். குளித்து வாராமல் அந்த ருது விலே கர்ப்பமானால் அவளுக்குப் பிள்ளை பிறந்தழியும். அந்தக் குழந்தை க்கு வயிறு கழியும். நிலத்திலே புரளும். வயிறு சூணவயிறு போல் பெருக்கும். தாகமாம். நீர் குடிக்கும். எவ்வளவு பால் குடித்தாலும் திருப்தி இராமல் மேலும் பால் குடிக்கும். அதிகமாக சோறுந் தின்னும்.

பிள்ளை இணைக்குச் சிகிச்சை.

ஆவாரஞ்செடியில் தொங்குகிற புழுக்கூட்டைக் கொண்டு வந்து கன்னிப் பெண் நூற்ற நூலில் குளிசமாடி தூப தீபங் கொடுத்துக் கட்ட இணை தீரும்.

தாய் பிள்ளையுண்டானால் அவள் முலைப்பாலை முன்னணைக் குழந்தை உண்டால் தாய்க்குற்றம் வரும். பிள்ளைக்குச் சவலை தாங்கி வயிறு கழியும். வயிறு சூணவயிருகும். உடம்பு இளைக்கும். தரையில் புரளும். தாக மெடுக்கும். திருப்தி இல்லாமல் கண்டவெல்லாந் தின்னும்.

இதற்குச் சிகிச்சை.

காவட்டம்புல்லும்வேரும் கதிரும் நெட்டைப் பேய்மிரட்டி வேரும். இலையும் திரிகடுகும், வெள்ளுள்ளியும், ஓமமும் இவற்றை அரைத்துக் கரைத்து எண்ணெய்யில் பாகம் செய்து காலையில் பாலுடன் வார்க்க, தாயார் குற்றம் தீரும்.

பல்கடித்தற்குப் பரிகாரம்.

பறையர் சுடலையிலே முளைத்த விடத்தேர் வேருக்கு வேலி இட்டுக் குளி சமாடி கழுத்திலாவது தோளிலாவது கட்ட, பல் கடித்தல் தீரும். இது கிடைக்காவிட்டால் நெட்டைப்பேய்மிரட்டிவேரை இந்தப் பிரயோகத் தில் கொண்டுவந்து குளிசமாடி, கழுத்திலாவது தோளிலாவது கட்ட, பல் கடித்தல் தீரும்.•

சில பேருக்கு, தாயார் வயிற்றில் பிள்ளை நின்றால், அந்தத் தாய் முலைப்பாலைக் குழந்தை உண்டால், முன்னணைக்குழந்தை இளைத்துக் கொண்டே வந்து, தாயார் பிள்ளை பெறும்போது முன்னணைக்கு குழந்தை சாகும். இதற்கு, தாயாருக்குப் பிள்ளை தரித்தவுடன் முன்னணைக் குழந் தை முலையை உண்ண விடக்கூடாது. ஆட்டுப்பால் கொடுக்கவும். தாயா ருக்கு பஞ்சகவ்ய கிருதம் கொடுக்கவும். பிள்ளைக்கும் கொடுக்கலாம்.

சுரத்திற்கு.

பிள்ளையின் காய்ச்சலுக்கு பால சஞ்சீவிக் குளிகையைக் கொடுக்கவும். சகஸ்ரவேதி, செங்கழுநீர், கோஷ்டம், அப்பளாக்காரம், இலவங்கம், திப்பிலி இவற்றையெல்லாம் இளநீரில் வேக வைத்து அரைத்து உண்டை பண்ணி வெந்நீரில் போட, காய்ச்சல் விடும்.

தாபசுரத்திற்கு ஏலாதிக் குளிகை.

பெரும்புல்வேர், கருஞ்சீரகம், நல்லசீரகம், ஏலம், திப்பிலி, பனை வெல்லம் இவற்றை அரைத்து புளிவிட்டு உண்டை பண்ணி முலைப்பாலி லாவது வெந்நீரிலாவது கொடுக்கவும்.

வயிறு ஓடுகிறதற்கு.

துத்திவிதை வராகன் 1, ஆவாரை விதை வராகன் 1, கரிசிலாங் கண்ணி விதை வராகன் 1, சிரட்டைக் கரி வராகன் 1, சுக்கு வராகன் 1, சீரகம் வராகன் 1, இவற்றையெல்லாம் இளம் பருவத்தில் வறுத்துப் பொடி செய்துகொண்டு வெந்நீரிலாவது தண்ணீரிலாவது தயிர் நீரிலாவது கலந்து கொடுக்கவும்.

பாலகிரஹங்கள்.

இவை புருஷக் கிரஹம், ஸ்திரீக் கிரஹம், நபுஞ்சகக் கிரஹம் என மூவகை. இவைகளெல்லாம் குமாரஸ்வாமிகள் பேரில் . . . . . ஹரி தேவர் கட்டளை பண்ணினார். இந்தக் கிரஹங்கள் தங்களுக்கு . . . . . . மே . . . தென்ற குமாரஸ்வாமிகேட்டுக் கொள்ள ஆசார ஹிந்துவினுடைய பிரஜையைப் பிடித்து அவர்கள் கையில் பூசை கொள்ளுங்களென்று கட்டளைபண்ணினார்.

இந்தக் கிரஹம் பிடித்த சிசுவுக்கு மந்திர பூர்வமாக நாள், மாதம், வருடம் இவற்றை அறிந்து பலி கொடுத்தால் பொறுக்கும். அந்தக் கிரஹம் பிடித்த பிள்ளைக்கு இலட்சணம் சேமுறிக்கும், வாயினுல் நுரையாக வாந்தி பண்ணும். நட்ட கண்ணுக இருக்கும், உதடு உலர்ந்துபோம், பற்களைக் கடிக்கும். அழும். வயிறு ஊதும். முலையுண்ணுது. வேறு குரலாகக் கூப்பிடும். கையை முஷ்டியாகப் பிடிக்கும். சிறுகச் சிறுக நீர் விடும். உடம்பு வியர்த்து நாற்றம் நாறும். காலும் கையும் எடுத்துப்போடும். தலையைப் புரட்டிக்கொள்ளும்.

முதல் நாள், முதல் மாதம், முதல் வருடம் இதற்கு நந்தை என்கிற பேய் அணையும். இதில் உடம்பு இளைக்கும். உடம்பு வீங்கும். முலையுண்ணுது. அன்னத் துவேஷமாம். இதற்கு நூலிலே ஓர் . . . . பூ, வெள்ளைச் சந்தனம், அஞ்சு வெள்ளௌடைக்கெ . . . . நிலத்தில் கோலம் போட்டு, இலைபோட்டு, ஆசனம் இட்டு, பஞ்சு . . . . . . மாவில் தாலி பண்ணி, நெய் வார்த்து விளக்கேற்றி, அந்த தேவதையின் பேரைச்சொல்லி நைவேத்யம் பண்ணி, ஆவாஹனுதி பூசை பண்ணி, நைவேத்யம் ஆன பின் அதை முறத்திலே எடுத்து கிழக்குத் திசையிலே நாலு வழி கூடுகிற இடத்திலே வைக்கவும். கடுகு, இலாமிச்சம்வேர், பாம்புத்தோல், சிவனுடைய மாலியம், புஷ்பம், யானைமயிர், தலைமயிர், வேப்பந்தழை, நெய், கோஷ்டம், வசம்பு, மாட்டுக்கொம்பு, பருத்திக்கொட்டை, மஞ்சள் இவற்றின் புகை திரிஸந்தியாகாலமும் இடவும். க்ஷீரவிருக்ஷ பல்லவமும், நாவல், விளாந்தழைகள் இவற்றை ஒரு மிடா நீரில் போட்டுக் காய்ச்சி மந்திரித்து ஸ்நானம் பண்ணிவைக்கவும். பிராமண போஜனம் பண்ணிவைக்கவும். சந்யாசிபிக்ஷை பண்ணிவைக்கவும் . . . . க்கும் யஞ்ஞுத்துக்கும் மந்திரம். ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் பூ ஸ்வாஹா இந்த மந்திரத்தை மந்திரித்து ஸ்நானம் பண்ணிவைக்கவும்.

இரண்டாம் நாள், இரண்டாம் மாதம், இரண்டாம் வருஷம் நந்தன் என்கிற பேய் அணையும். இதன் குணம்—பற்களைக் கடிக்கும். நட்டக் கண்ணுக இருக்கும். எப்போதும் அன்னம், முலை யுண்ணுது. அன்னதுவேஷமாம். வயிறு ஊதும். சிவப்பாக மூத்திரம் விடும். சுரம் வரும். கையையும் காலையும் எடுக்க பிடிக்கபோட நடுங்கும். இதற்குப் பலி ஒரு படி அரிசி இடித்து அதில் பாவையும் நான்கு விளக்கும் பிடித்து வெள்ளை ஆசனம் பதிமூன் . . . டெக் கெயம் . . . .
இது ஆக்க நிலத்தில் கோலமிட்டு சோடசோபாசாரம் செய்து . . . .
ப் பாவையை வைத்து அந்தப் பாவையை அர்ச்சித்து நெ . . . . .
. . . . நட்டு, பூசையான பின் முறத்தில் எடுத்து அந்தப் பாவைக்கு . . . . த்து அதை முக்கால் சுற்றி முன்னந்திப் போதே . . . . தெய்வத்தின் பேர் சொல்லி பலியை வைக்கவும். மந்திரம் யஞ . . . .

மூன்றும் நாள், மூன்றும் மாதம், மூன்றும் வருடம் பூதனை என்கிற பேய் அணையும். இதன்குணம்—கண் . . . . உடம்பு

உலர்ந்து போம். மரம் போட்டாப் போலே . . . . . . உடம்பு நொந்து சேமுறிக்கும். இதற்குப் பலி ஒரு படி . . . . நிலத்தில் மஞ்சள் கோலமிட்டு இலைபோட்டு அன்னமிட்டு அன்னத்தின்மேலே நெய் வார்த்து விளக்கேற்றி டெக்கெயம் அன்னத்துமேலே புதைத்துப் பக்கத்தில் பாவையை தேவதை பேர் சொல்லி சோடசோபசாரத்தி ஞலே அர்ச்சித்து நைவேத்யம் பண்ணி பாவையின் வயிற்றிலும் வாயி லும் சோறிட்டு அன்னத்தை முறத்தில் எடுத்து பிள்ளையை முக்கால் சுற்றி வட திசை நாலு வழி கூடுகிற இடத்திலே வைக்கவும். யஞவ யஞ்ஞவர்த்தி முன்னே சொன்னது போல மந்திரம்.

நாலாம் நாள், நாலாம் மாதம், நாலாம் வருடம் முக மண்டலி என்கிற பேய் அணையும். இதன் குணம்—சேமுறிக்கும். உப்புசம் இருமல் உண்டாம். கையை முஷ்டியாகப் பிடிக்கும். நட்டக் கண்ணுக விழிக்கும். முலையுண்ணுது. உடம்பு சோர்ந்து சுரம்வரும். தாகமாக இருக்கும். கையை அசந்து எடுத்து போடும். உடம்பு நோகும். தலை நோய் காணும். இதற்கு பலி—ஒரு படி எள்ளை இடித்துப் பாவைபண்ணி விளக்கும் பிடித்து வில்வ முள்ளில் ஆணி கொண்டு மார்பில் ஒன்று வாயில் ஒன்று கண்ணில் இரண்டு பாவைக்குத்தி வெள்ளை ஆசனம், வெள்ளைப் பூ, வெள்ளைக் கெயம் பதின்மூன்று, வெள்ளைச் சந்தனம், நிலத்தில் கோலமிட்டு, இலை போட்டு அதன் மேலே நாலு விளக்கு வைத்து, அன்னத்தின் மேலே டெக்கெயம் வைத்து அப்பம் இட்டு பக்கத்திலே பாவையும் வைத்து தெய்வத்தின் பேர் சொல்லி சோடசோபசாரத்திஞல் பூசை பண்ணி நைவேத்தியம் பண்ணி முறத்திலே எடுத்துப் பாவை வயிற்றிலும் வாயிலும் சோறு இட்டுப் பிள்ளையை அன்னத்திஞல் முக்கால் சுற்றி மேற்கே ஸ்ரீம் காடத்திலே த்ரிஸந்தியாகாலமும் பலி இடவும் . . . . . முன்னே சொன்ன மந்திரம் கூறுக.

ஐந்தாம் நாள், ஐந்தாம் மாதம், ஐந்தாம் வருடம் இதில் பாலாளிகை என்கிற பேய் அணையும். இதன் குணம்—சுரம் வரும். அடிக்கடி மூத் திரம் விடும். உடம்பு திமிர்த்துக் கிடக்க வயிறு உப்புசமாக இரைக்கும். இருமும். உடம்பு நோகும். விக்கல் எடுக்கும். இதற்குப் பலி—ஒரு படி அரிசி இடித்து பாவையும் அதிலே விளக்கும் பண்ணிவைத்து தேவதையின் பேர் சொல்லி சோடசோபசாரத்திஞல் பூசை பண்ணி பாவையின் வாயிலும் வயிற்றிலும் அன்னமிட்டு முறத்திலே எடுத்து பிள்ளையைச் சுற்றி அபராந்நி யத்திலே மேல் திசையில் நாற்சந்தியிலே பலி இடவும். தூபாதிகளைப் பூர்வம் போலே செய்யவும்.

ஆறும் நாள், ஆறும் மாதம், ஆறும் வருடம் சகுனி என்கிற பேய் அணை யும். இதன் குணம்—வயிறு நோகும். எப்போதும் அழும். சுரம் வரும். மலமூத்திரம் கட்டும். உடம்பு நோகும். இதற்குப் பலி—ஒரு படி அரிசி இடித் துப் பாவையும் அதிலே நாலு விளக்கும் செய்து பாயசமாக்கி சிவந்த டெக்கெ யம், சிவந்த பூ, சந்தனம் கொண்டு நிலத்தில் மஞ்சள் கோலமிட்டு இலை போட்டு பாயசமிட்டு விளக்கு வைத்து அன்னத்தின் மேலே டெக்கெயம் குத்தி பக்கத்தில் வதைத்து சோடசோபசாரத்திஞல் தேவதையின் பேர்

சொல்லி நைவேத்யம் செய்து பாவைக்கு வயிற்றிலும் வாயிலும் அன்ன மிட்டு முறத்தில் எடுத்துப் பிள்ளையை சுற்றி மாம்ஸம் அப்பம் கூட்டி மேற்கே நாலு வழியும் கூடுகிற விடத்திலே பலி வைக்கவும். திஸந்தியா காலத்திலே வைக்கவும். முன்னே சொன்ன மந்திரம் தூபம் இடவும்.

ஏழாம் நாள், ஏழாம் மாதம், ஏழாம் வருஷம் சூக்ஷ்மவதி என்கிற பேய் அணையும். இதன் குணம்—இருமும். உடம்பு நாறும். சேமுறிக்கும். முலை உண்ணாது. சுரம் வரும். உடம்பு நோகும். சோறு உண்ணாது. அன்னத் துவேஷமுண்டாம். இதற்குப் பாவை வெள்ளை ஆசனம் டெக் கெயம் மாம்ஸம் இவைகள் முன்சொன்ன பிரகாரம் செய்யவும்.

எட்டாம் நாள், எட்டாம் மாதம், எட்டாம் வருடம் இதில் பிலாடிகை என்னும் பேய் அணையும். இதன் குணம்—கனமாக அழும். நான்குதிக்கும் வெருண்டு பார்க்கும். இருமும். உடம்பில் கடுகு போலே வெடிக்கும். உடம்பு நடுக்கும். மயங்கும் சோர்ந்து கிடக்கும். உடம்பு வாடிக்கிடக்கும். கைகளை எடுத்துப் போடும். நெடும்பெருமூச்சு விடும். திணறும், சுரம்வரும். உடம்பு நொந்து சேமுறிக்கும். கொட்டாவி கொள்ளும். நாக்கு உலர்ந்து உதட்டை நக்கிக்கொள்ளும். அரைக்கண்ணாக விழிக்கும். முலை பிடித்து உண்ணாது. இது திரும்பாது. ஆனாலும் பலி போடவும். கருத்தப்பூ, கறுத்த ஆசனம், கருப்புக்கொடி, கறுப்பு ஆடை, சந்தனம், கரியில் கோலமிட்டு, வேல் போட்டு, அன்னமிட்டு, நாலு விளக்கேற்றி, டெக்கெயம் அன்னத்து மேலே குத்தி, பாவையைப் பக்கத்திலே வைத்து, தேவதையின் பேர் சொல்லி, சோடசோப சாரத்துடன் அர்ச்சித்து, நைவேத்யம் வைத்து, பாவை வயிற்றிலும் வாயி லும் அன்னமிட்டு, முறத்திலே எடுத்துச் சிசுவை முக்கால் சுற்றி மேற்கே சந்தியிலே பலி வைக்கவும். தூபம் பூர்வம் போலே செய்யவும்.

ஒன்பதாம் நாள், ஒன்பதாம் மாதம், ஒன்பதாம் வருடம் நஹம்ஸி என்கிற பேய் அணையும். இதன் குணம்—இருமும். கையை முஷ்டியாகப் பிடிக்கும். பல்லைக் கடிக்கும். வாயை மெல்லும். உதட்டை நக்கும். திணறும், சிரிக்கும். முலை பிடித்து உண்ணாது. உண்டாலும் கக்கும். அன்னம் உண்ணாது. சுரம் வரும். உடம்பு பாதிரிப்பூ நாற்றம் வீசும். உடம்பு எரிந்து புரளும் உடம்பு வாடிக் கருகும். வயிறு நோகும், வயிறு ஊதும். உப்புசம் இரைப்பு எடுக்கும். உடம்பு நொந்து சேமுறிக்கும். இதற்குப் பலி ஒரு படி அரிசி இடித்துப் பாவையும் விளக்கும் பண்ணி, வெள்ளை அன்னம் ஆக்கி, வெண்புடவை, சந்தனம், டெக்கெயம் 13 வைத்து, நிலம் மெழுகி, மாவில் கோலமிட்டு, இலை போட்டு, அன்னமிட்டு, அன்னத்தின் மேலே நான்கு விளக்கேற்றி பாவையின் பக்கத்தில் வைக்கவும். வைத்துப் பாவையை தேவதையின் பேர் சொல்லி சோடசோபசாரத்தினால் அர்ச்சித்து நைவேத்யம் பண்ணி பாவையின் வாயிலும் வயிற்றி லும் அன்னமிட்டு, முறத்தில் எடுத்து, சிசுவை முக்கால் சுற்றி, மச்சம், மாம்சம், அப்பம் கூட்டிப் படைத்து அந்தி பட வடக்கே நாலுசந்தி வழியில் வைக்கவும். தூபாதி பூர்வம் போலே, பலி வைக்கவும். மந்திரம், ஓம் நமோ பகவதே வாஸுதேவாய த்ருணமண்டல மாதாய ஹந ஹந ஹூம் பட் ஸ்வாஹா.

பத்தாம் நாள், பத்தாம் மாதம், பத்தாம் வருடம் ரேவதி என்னும் பேய் அணையும். இதன் குணம்—அழும். உடம்பு நாறும். உடம்பு கறுகும், உடம்பைத் திரும்பித் திரும்பிப் பார்க்கும். முலைப்பாலைக் கக்கும். கண்ணை அரைக்கண்ணாக விழிக்கும். கூப்பிடச் சிரிக்கும். எழுந்திருந்து ஓடும், அடிக்கடி ஜலம் விட வயிறு ஒட்டிக் கடித்தாற்போலே இருக்கும். கண் பீளை கட்டும். நீர் பாயும். உடம்பு மரம்போலே கிடக்கும். புறங்கையால் கண்ணைத் தேய்த்துக்கொள்ளும். இதற்குப் பலி ஒரு படி அரிசி இடித்துப் பாவையும், நான்கு விளக்கையும் பண்ணி . . . . . பாயசம் ஆக்கி மஞ்சள் ஆசனம் மஞ்சள் டெக்கெயம் 13, சந்தனம் பூக்கொண்டு, நிலம் மெழுகி, மஞ்சளில் கோலமிட்டு, இலைபோட்டுப் பாயசம் இட்டு அதன்மேல் நான்கு விளக்கேற்றி டெக்கெயம் 13 அன்னத்தின் மேலே குத்தி பாவை பக்கத்தில் வைத்து தேவதையின் பேர் சொல்லி சோடசோபசாரத்தினால் அர்சித்து நைவேத்தியம் செய்து பாவை வயிற்றிலும் வாயிலும் சோறிட்டு வில்வமுள்ளில் பாவையை அஷ்டாங்கமுங்குத்தி முறத்திலே எடுத்து சிசுவை முக்கால் சுற்றி அந்திப்போதில் தெற்கே நாற்சந்தியில் வைக்கவும். தூபாதி பூர்வம் போலே பலி வைக்கிற இடத்திலே மந்திரம் ஓம் நமோ பகவதே வைவஸ்வததேவாய ஹந ஹந......சுவாஹா.

பதினோராம் நாள், பதினோராம் மாதம், பதினோராம் வருடம் அர்ச்சிகை என்னும் பேய் அணையும். இதன் குணம்—சுரம் வரும். முலைபிடித்து உண்ணாது. உடம்பு நொந்து சேமுறிக்கும். நிமிரும். நட்ட கண்ணாகப் பார்க்கும். இருமும். உப்புசம் இளைப்பு இரைப்புண்டாகும். கண் பீளைக் கட்டி நீர் பாயும். திணறும். இதற்குப் பலி ஒரு படி அரிசியில் மாவு இடித்து, பாவை பண்ணி, விளக்குப் பண்ணி, வெள்ளைச் சந்தனம், வெண்பூ, இருபத்தைந்து கொடியாடை மாவில்கோலமிட்டு, இலைபோட்டு, அன்னமிட்டு, நான்கு விளக்கேற்றி, கொடியாடை நட்டு, பக்கத்தில் பாவையை வைத்து, தெய்வத்தின் பேர் சொல்லி அர்ச்சித்து, நைவேத்யம் செய்து, பாவையின் வாயிலும் வயிற்றிலும் அன்னமிட்டு, முறத்திலே எடுத்து முன்னந்திப் போது தெற்கே நாற்சந்தி வெளியில் பலி வைக்கவும். தூபாதி பூர்வம் போலே செய்யவும்.

பன்னிரண்டாம் நாள், பன்னிரண்டாம் மாதம், பன்னிரண்டாம் வருடம் அகலிகை யென்னும் பேய் அணையும். அதன் குணம் அரோசகமாய் வாய்நீர் ஊறும். உப்புசமாகும். உடம்பு இளைக்கும். சுரம் வரும். பல் கடிக்கும். வாய் மெல்லும். எப்போதும் அழும். நட்டக் கண்ணாக விழிக்கும். மயிர் சிலிர்க்கும். சேமுறிக்கும். திமிர் உண்டாகும். வேற்றுக் குரல் உண்டாகும். புறங்கையில் கண்ணைத் தேய்த்துக்கொள்ளும். வாய் உலர்ந்து உதட்டை நக்கும். இதற்கு)முன்னே சொன்னபடி வெள்ளையாகத்தானே மத்ஸ்யமாம்ஸம் அப்பமிட்டுப் படைத்து, தெற்கே பலி இடவும். தூபாதி பூர்வமாகச் செய்யவும். எல்லா நாளைக்கும் எல்லா மாதத்திற்கும் எல்லா வருஷத்திற்கும் தூபம், ஸ்நானம், பலி ஓமத்துக்கு யந்திரத்திற்கு மந்திரங்கள் சொல்லுகிறேன்.

பலி கொடுக்கிற மந்திரம்—ஓம் நமோ பகவதி சாமுண்டியே பகவதி வித்வஜிஹ்வே ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் முஞ்ச முஞ்ச ரக்ஷ ரக்ஷ குரு குரு

பலிம் க்ராஹ க்ராஹ ஸ்வாஹா. நிலம் மெழுகிக் கோலமிட்டு இலேபோட்டு அன்னமிட்டு அதன்மேல் விளக்கு கொடியாடை வயிற்றுப்பக்கத்தில் பாவைக்குத் தேவதையின் பேர் சொல்லி இந்த மந்திரத்தினுல் நைவேத் யம்பண்ணி முன்னே சொன்ன திசைகளிலே பலி எடுத்துப்போய் வைக்கவும்.

ஹோமத்திற்கு மந்திரம்—ஓம் கூஷ் மாண்டி பகவதி ரக்தண சாமுண்டி ஜுஹுயாத் முஞ்ச முஞ்ச தஹ தஹ பச பச ஸர ஸர பலகா தேஹம் கச்ச கச்ச ஸ்வாஹா. இந்த மந்திரத்தில் . . . நெயும் . . . காலுமூலேபட குண்டநவயிர அக்னி இம் மூன்று இராத்திரி தினம் ஆயிரத் தொருநூற்றெட்டு ஆஹுதி எடுக்கவும்.

தூபத்துக்கு மந்திரம்: ஓம் நமோ சாமுண்டியே பகவதி வித்யுஜ் ஜிஹ்வே ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் அபஸரந்து துஷ்டக்ரஹ ஹ்ராம் ஹ்ரூம் தத்வதாகச் சந்து ஸ்வாஹா. இந்த மந்திரத்தில் பாம்புத்தோல், பசுவின் நெய், கோஷ்டம், கடுகு, வசம்பு, மாட்டுக்கொம்பு, தலைமயிர் (பூனைமயிர்), பருத்திக்கொட்டை, தேவதாரு, மஞ்சள், வேப்பந்தழை, சிவனுடைய நிர் மாலியப் புஷ்பம், மயிலிறகு, முள்ளிப்பூ இவற்றை எழுதரம் மந்திரித்து அக்கினியில் போட்டு, சிசுவுக்கு தூபம் இடவும்.

உடம்பு பிடிக்க லேபம்: ஓம் நமோ பகவதே நாராயணய ப்ரஜ்வலித ஹஸ்தாய ஹந ஹந போதய போதய மர்தய மர்தய பாதய பாதய ஹ்ரூம் ஹ்ரூம் ஹந ஹந ஹும்பட் ஸ்வாஹா. இந்த மந்திரத்தினுல் மஞ்சள் வசம்பு வேப்பிலே சிறுபுள்ளடி இவற்றை அறைத்து உடம்பில் தடவிப் பூசவும்.

ஸ்நானத்திற்கு மந்திரம்: ஓம் நமோ சாமுண்டி பகவதே வித்வஜ் ஹ்வே ஓம் ஹ்ரீம் ஹ்ரூம் த்ரோஜயதி ஸ்வாஹா. நாவல்துளிர் விளாந்தழை பலாசந்தழை ஆல் அரசு அத்தி இருளி வஞ்சி இத் தழைகளைப்போட்டு, பில்வபத்திரித் தழையும் போட்டு, ஒரு மிடாவில் வெந்நீர் காய்ச்சி, இந்த மந்திரத்தை மந்திரித்து ஸ்நானம் பண்ண, வீக்கந் தீரும்.

யந்திரதுதி: ரக்ஷ ரக்ஷ மஹாதேவ நீலக்ரீவ ஜடாதர.

க்ருஹஸ்தானபிதோ ரக்ஷ முஞ்ச முஞ்ச குமாரகம்.

ஒரு செப்புத்தகட்டில் கிழக்கு மேற்கு ஒன்பது கீற்று தெற்கு வடக்கு ஐந்து கீற்றுக் கீற முப்பத்திரண்டு குறடாம். அந்தக் குறட்டில் ஈசான்ய மூலே முதல் பிரதக்ஷணகாரமாக மந்திரத்தை எழுதி ப்ராணப்ரதிஷ்டை பண்ணி நூற்றெட்டு உரு இந்த மந்திரத்தைத் தானே ஜபித்து யந்திரத் தகட்டைத் தொட்டு மந்திரித்துக் கட்டவும்.

தலேதொட்டு மந்திரிக்கும் வகை.

பிர்மா விஷ்ணு: சருத்ர: சஸ்கந்தோ வைச்ரவணஸ்ததா.

ரக்ஷந்து த்வரிதம் பாலம் முஞ்ச முஞ்ச குமாரகம். விபூதியை மந்திரித்துத் தலேயிலிருந்து காலளவாக இறக்கித் தடவவும்.

ஸர்வவிதமான கிரஹங்களுக்கு சிசுவுக்கு லேபமும் மந்திரமும் சொல்லு கிறேன். காட்டுச்சோளம், சிறுபுள்ளடி, காட்டுச்சிலந்தி, சூத்தையிலே, விடத்தேரியிலே, நெட்டைப்பேய்மிரட்டியிலே, பிடங்குநாரியிலே, வெட் பூலாங்கொழுந்து, கோழியவரைத்தழை, அமுக்குறுவேர்.............. ....இவற்றை நறுக்கி, விளக்கெண்ணெயில் கொதிக்க

வைத்து, உள்ளி வசம்பு கூட்டி, சர்வாங்கமும் இடவும். இவற்றின் பச்சை இலையைத் தானே நன்றாக அரைத்து உடம்புக்கும் திமிரிடவும். பாலக் கிரஹ பக்ஷிக்கிரஹ குற்றம் தீரும்.

தைலத்துக்கு மந்திரம்—ஓம் ஸர்வதா மாத ரூப க்ருஹம் ஸம்ஹரந்து ஓம் ஹூம் ஹூம் மோகய மோகய கர்ஜய கர்ஜய பசர பசர க்ராஹ க்ராஹ அக்ரய ஆக்ரய ஹ ஹ ஹ ஹ வம் ஷித்திருத்ரோ கயாபயதி ஸ்வாஹா. இந்த மந்திரத்தினால் தைலத்தை ஏழு தரம் மந்திரித்துச் சிசுவுக்குச் சர்வாங்கமுமிட, சர்வவிதமான க்ரஹ தோஷங்களுந்தீரும். இந்தத் தைலத்தின் பெயர் நரிவிட்டை தைலம். சிசுக்களுக்கு எல்லாவித மான கிரஹங்களுக்கும் இதையே செய்யவும். தான்யமெடுத்த குழிமண்ணை குழந்தையின் தலையிலும் தாயின் தலையிலும் போடாதிருந்தால் மிடி தாக்கும். அதற்கு மீளவும் அந்தக் குழியைத் திறந்து அந்த மண்ணைத் தாயின் தலையிலும் குழந்தையின் தலையிலும் போட நிற்கும். முன்னே சொன்ன நரிவிட்டைத் தைலத்தைச் செய்து இடவும். அந்த மருந்தை அரைத்துத் திமிரிடவும். முன்னே சொன்ன பாம்புத்தோல் முதலானவற்றைப் புகையிடவும். சர்வத்துக்கும் புகை இடவும். இப்படிச் செய்யாதிருந்தால் வயிறு ஊதும். சுரம் வரும். மஹா பிரயாசைப்படும். அதுவறிந்து அந்தப்படி மருந்து செய்யவும்.

பச்சைப்பந்தல் தோஷமும் பரிகாரமும்.

பச்சைப்பந்தலின் கீழே இருந்தால் பிள்ளைக்குப் பிணிவரும். அந்தப் பந்தலின் கீழே போகிறதற்கு முன்னே பச்சைக் கொம்பைச் சீவி அந்த நீரைத் துணியில் முடிந்து தூபங்கொடுத்து பிள்ளைக்கும் தாய்க்கும் கட்டவும். கட்டாதிருந்தால் வாந்தி பண்ணும். வயிறு ஓடும். அதற்குப் பாம்புத்தோல் முதலானதுங் கூட்டி தூபமிடவும். மேலுக்கு நரிவிட்டை முதலானதுங் கூட்டி லேபம் பண்ணவும். பச்சைப்பந்தல் பிணி தீரும்.

பறவை தோஷம்.

புருஷபக்ஷி ஸ்திரீபக்ஷி நபும்ஸகப்பக்ஷி மலட்டுப்பக்ஷி எனப் பறவை தோஷம் நான்கு விதம் :—

புருஷபக்ஷிதோஷ லக்ஷணம்.

வாந்தி எடுக்கும். வயிறு திண்டுதிண்டாக ஓடும். கையை முஷ்டியாகப் பிடித்துக் கைகால் எடுத்துப் போடும். கைகால் வலிக்கும். வாயுலர்ந்து வாயுதட்டை நக்கிக் கொள்ளும். உடம்பு இளைத்து வியர்த்து நாற்றமாக நாறும். உடம்பு மஞ்சளித்துப் போம். முலை பிடியாதிருக்கும். உடம்பு நடுக்கும் நித்திரை பண்ணாமல் அரைக்கண்ணாகவும் நட்டக்கண்ணாகவும் விழிக்கும். உடம்பு நரம்பு தடிக்கும். உச்சந்தலை குழிவிழ கண்ணும்விட்டு கண் இடிவிழும்.

ஸ்திரீபக்ஷிதோஷ லக்ஷணம்.

வாந்தி பண்ணும். வயிறு நீராக ஓடும். உடம்பு எரிந்து புரளும். உடம்பு நடுக்கும். கண்குழிவிழும். உடம்பு இளைக்கும். முலை உண்

ணுது. அடிக்கடி மூலேயை விட்டுவிடும். உச்சி இடிவிழும். கண் இடிவிழும். உடம்பு எரிந்து புரளும். தாகமாக, நாக்கிஞல் உதட்டை நக்கும். நாக்கு மரத்திருக்கும். நாக்கை நீட்டும்.

நபும்ஸகப்பக்ஷிதோஷ லக்ஷணம்.

தவடை, இடுப்பு, உச்சந்தலே இவை இடி விழும். வாந்தி பண்ணும். வயிறு நாஞவிதமாக ஓடும். திண்டுதிண்டாகக் கள்ளின் நீர்போல் வயிறு ஓடும். தாகமாக, நாக்கை நீட்டும். புறங்கையிஞல் கண்ணேயும் முகத்தையும் தேய்த்துக்கொள்ளும். அசந்து கிடக்கும். கண்ணே மூடிக்கொண்டாவது அரைக்கண்ணுகவாவது கண்கொட்டாம லாவது இருக்கும்.

இவற்றிற்குப் பரிகாரமுறை.

கோழியவரைச்சாற்றையும் எண்ணெயையும், தலே, உடம்பு சருவாங்கமும் தடவி உள்ளுக்குக் கொடுக்கவும்.

கஞ்சாங்கோரையையும் சிறுபுள்ளடியையும் நறுக்கி மூலேப்பாலுடன் தலே உடம்பு எங்கும் தேய்த்து, இவற்றைச் சுட்டசாம்பலே தலே, உடம்பு, எங்கும் தடவி இதன்வேரைக் குளிசமாகக் கட்டவும். பக்ஷிதோஷம் தீரும்.

வேப்பந்தழை, குருட்டித்தழை, பொன்ஞங்காணித்தழை, தூது வளேத்தழை, கஞ்சாங்கோரை, சிறுபுள்ளடி, கோழியவரையிலே, இவைகளே உள்ளி, வசம்பு கூட்டி அரைத்து மேலுக்குத் திமிரிடவும். இவற்றை நறுக்கி மூலேப்பாலுடன் கூட்டி பொட்டணமாகக் கட்டி வாயில் பிழியவும் எண்ணெய்யில் போட்டுக் காய்ச்சி சர்வாங்கமும் இடவும். பக்ஷிதோஷம் தீரும்.

ஏழிலேப்பாலேப்பட்டை, ஆயில்பட்டை, மருதோன்றித்தழையும் பட்டையும், சிறுபுள்ளடி, துப்பிப்பட்டை, புங்கந்தோல், மாவிலிங்கப்பட்டை இவற்றை நறுக்கி நல்லெண்ணெய்யில் போட்டுக் காய்ச்சி சர்வாங்கமும் இட்டு உள்ளுக்குக் கொடுக்க வயிறு ஓடுகிறது தீரும்.

விடத்தேர் வேரையும் கொழுந்தையும் பச்சை வெள்ளாட்டுப்பாலுடன் அரைத்துக் கொடுக்க, திண்டு திண்டாகக் கழிவது நிற்கும்.

பாயசம், நெய், அப்பம், எள்ளுருண்டை இவற்றை நிலத்தில் கோல மிட்டு இலேபோட்டு பாயசமிட அதன்மேலே நாலுவிளக்கேற்றி கந்த புஷ்பங் களால் அர்ச்சித்து பக்ஷிக்கிரஹ தேவதா......ந் நம் என்று நை வேத்யம்பண்ணி சந்தியாகாலத்தில் கிழக்குத் திசையில் நாலுவழிகூடுகிற இடத்தில் வைக்கவும்.

விளா, அத்தி, ஆல், அரசு, பலாசு, நாவல், வில்வம், இவற்றின் தழைகளே நீரில் போட்டுக் காய்ச்சி தாய்க்கும் பிள்ளேக்கும் ஸ்நானம் பண்ணிவைக்கவும்.

மூங்கில்மேல்சீவல், வெள்ளேவெங்காயத்தோல், நெய், சிவனுடைய நிர்மல்லியபுஷ்பம், தலேமயிர், பாம்புத்தோல், கடுகு, வேப்பந்தழை, வசம்பு, மஞ்சள், பூனேமயிர், மாட்டுக்கொம்பு, பருத்திக்கொட்டை இவற்ருல் தாய்க்கும் பிள்ளேக்கும் புகையிடவும்.

சிறகடிக்கிற மந்திரம்.

பொன் கலசம், வெள்ளிக் கலசம், பொன்னும் வெள்ளியும் மின்னிடு கலசம், தேவியும் தேவரும் ஆடியகலசம், அந்திப்புள்ளும் சந்திப் புள்ளும் ஆலைப்புள்ளும் மாலைப்புள்ளும் சிறுகண்ணன் பெருங்கண்ணன் தேவேந்திரனென்னப்பட்ட நாற்பத்தோராயிரம் புள்ளும் பிடித்து ஒரு கூட்டில் அடைத்தேன். மீண்டும் மிக்க மந்திரத்தினால் வாராதிருந்தால், "கரிகரி கரிப்பேன், பொறி பொறி பொறிப்பேன். காட்டு காடேத்துவேன், கருக்கு சட்டியில் இட்டுக் கருக்குவேன். என் பிள்ளையைப் பால் குடிக்க விடு. உன் குஞ்சை மீன் தின்ன விடு. ஆலஞ்சு ஆலஞ்சுவர ஆல விருக்ஷத்தின் கீழே ஜலம் ஜலம் என்று வாரப் பிள்ளை குரல் கேட்டு மீண்டுமிந்த மந்திரம் தண்ணீர் ஓதி இறைத்தேன். பக்ஷி தோஷம் புறக்கப் பறவை தோஷம் குதிக்க ஸ்வாஹா." இந்த மந்திரத்தினால் அவரைத் தழையாலாவது சீலைத்துணியாலாவது குழந்தையை அடித்து நீர் ஓதி இறைக்கவும். பக்ஷிதோஷம், குளிதோஷம் தீரும்.

பிள்ளைக்கு வலக்கால், பெண்ணுக்கு இடக்கால் இப்படி ஒடித்து, கன்னிப் பெண் நூற்ற நூலில் குளிசமாடிக் கழுத்தில் கட்டவும். பறவை தோஷம் தீரும்.

குளி தோஷம் மிடி தோஷம்.

குளி தோஷம் இரண்டு விதம். சாக்குளி, வளர்குளி. இளம்பிள்ளைத் தாச்சி இருக்கும் இடத்துக்குக் குழந்தையைக் கொண்டு போனாலும் புறப் படும்போது குழந்தையை இளம் பிள்ளைத்தாச்சி கண்டாலும் குளிதாக்கும். இது வளர்குளிதோஷம். இளம் பிள்ளைத்தாச்சி செத்தப் பிள்ளையைப் பார்த்தாலும் செத்த பிள்ளையின் தாயாருடன் வார்த்தை சொன்னாலும் புறப்படும்போது அவளைக் கண்டாலும் சாக்குளி தாக்கும். சுரம் வரும். வயிறு ஓடும். வாந்தியாகும். உடம்பு பிணநாற்றம் நாறும். கண் நட்டுப் பஞ்சடைந்துபோகும். கைகால்களில் இசிவு உண்டாகும். வலிக்கும். வாயில் நுரை புறப்பட்டு வலிக்கும். புரளும். தலையைப் பிருண்டிக் கொள்ளும். திணறும். புறங்கையால் கண்ணையும் முகத்தையும் தேய்த்துக் கொள்ளும். முலை யுண்ணாது, முலையைக் கடிக்கும்.

இதற்கு மந்திரம்.

ஓம் நமோ பகவதே ஹரிவாஹநாய. வாஹாத்மநே நம: ஆலமரத் திலிருக்கிற பிள்ளை, நானும் என் குட்டிக்கு நல்லார் போல் நீயும் உன் குட்டிக்கு நல்லன், பாளூரில் பாண்குழியில் பரட்டைத் தலையான் பிள்ளை, பாளூரில் பட்ட மரத்தில் பரட்டைத் தலையான் பிள்ளை, ஆலில் பிள்ளை, அரசில் பிள்ளை, தெங்கில் பிள்ளை, வக்காப் பிள்ளை, வாழைப் பிள்ளை, நூற்றெட்டுப் பிள்ளை, ஆயிரத்தெட்டுப் பிள்ளை, பிள்ளையெல்லாங்கூட்டிச் சிறகை ஒடி. பிள்ளையெல்லாங் கூடி பொடிபட ஸ்வாஹா. நமனார் நஞ் சுண்டு பரிந்துபாய எண்ணுயிர காதவழி பாதமறுகந் தீஞ்சாப் போலே குதிகுதி பக்ஷி தோஷம் பறக்க ஸ்வாகா. குளி தோஷம் குதிக்க ஸ்வாகா. இந்த மந்திரம் வேப்பிலையாலாவது அவரையிலையிலாவது சீலைத் துணியி லாவது அடித்து மந்திரிக்கவும்.

குளிசம்.

வெள்ளைச்சிறுவழுத்துணைவேரினால் திங்கட்கிழமை காப்புக் கட்டி செவ்வாய்க்கிழமை மௌனத்துடன் பெண்ணுக்குச் சாவல்கோழி பிள்ளைக்குப் பெட்டைக்கோழி பலியிட்டு வேர்அறுமல் பிடுங்கி கன்னிப்பெண் நூற்ற நூலில் பெண்ணுக்கு இடக்காலிலும் பிள்ளைக்கு வலக்காலிலும் தண்டையாகச் சுற்றி தூபாதி பூசை செய்ய குளிதோஷம் தீரும்.

காட்டுச்சோளம், காட்டுச்சிலந்தி, சிறுபுள்ளடி, நாய்விளா இவற்றின் இலை, விடத்தேர்வேர் இலை, இரட்டைப்பேய்மிரட்டி, புறங்கைநாறிப்பட்டை இலை, வெண்பூலாக்கொழுந்து, கோழியவரைத்தழை, அமுக்கராக்கிழங்கு, கஞ்சாங்கோரை, எருக்கம்வேர், கொழுந்து, சங்குஇலை, குருட்டிகைவேர் இலை, உள்ளி, வசம்பு இவற்றைக்கூட்டி முலைப்பால்விட்டு நசித்து வாயிலும்விட்டு உடம்பெல்லாந் தடவி விடவும். இந்த மருந்துச்சாற்றால் கலிக்கமிடவும். இந்தச் சாற்றுடன் நரிவிட்டைக் கூட்டி ஆமணக்கெண்ணெய்யில் கொதிப்பித்த கலிகத்துடன் சருவாங்கமும் இட குளிதோஷம் பறவைதோஷம் தீரும். பாம்புத்தோல் முதலானவைகளால் தூபமிடவும். அன்னம் முதலானவைகளால் பலி இடவும். க்ஷீர விருக்ஷ கஷாயத்தால் ஸ்நானம் செய்து வைக்கவும்.

பூத சிகிச்சைக்கு அஞ்ஜனம்.

வசம்பு, ம்ஞேசிலை, மஞ்சிஷ்டி, தேவதாரம், வேப்பங்கொழுந்து, திரிகடுகு பழுபாகற்கிழங்கு, குருட்டிகைக்கொழுந்து, புங்கம்விதை, திரிபலம், சாதுர்சாதகம், தேவதாரு, வில்வவேர், துளசிப்பூ, இருமஞ்சள் இவை யெல்லாங் கூட்டிக் காக்கை முட்டையும் கூட்டி வெள்ளாட்டு மூத்திரத்தில் அரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி பசு நெய்யில் உரைத்து கண்ணிலிட, பூதப் பிரேதப் பைசாசங்கள் அபஸ்மாரம் விஷூசி இவை தீரும்.

குழந்தைகளுக்கு மாந்தம் தீர உண்டை.

ஓமம், முத்தக்காசு, கோஷ்டம், வட்டத்திருப்பி, கடுகுரோகணி, வசம்புச் சாம்பல், திரிகடுகு, அதிவிடையம், கடுக்காய், இலவங்கம், பத்திரி, உள்ளி, பொரித்தவெண்காரம், சீரகம், கருஞ்சீரகம், ஏலம், ஆமைஓடுபஸ்பம், பெரும்புல்வேர், உத்தாமணிவேர், காய்வேளைவேர், இவையெல்லாம் குருட்டிகைத்தழைச்சாற்றில் அரைத்து உருண்டைபண்ணி வெந்நீர் அல்லது முலைப்பாலில் வார்க்க, குழந்தைகளின் ஆமக்கட்டு, மாந்தக்கட்டு, வயிறுஊதல், காய்ச்சல், இரைப்பு, செரியாமை எல்லாந் தீரும்.

பிள்ளைப்பிணி முற்றிற்று.

இரண்டாம் அத்தியாயம்

மூத்திராகாதம்.

மூத்திராகாதம் மூன்று வகையாம்: அவை—

(1) கிரிச்சரரோகம்.
(2) அஸ்மரிரோகம்.
(3) மூத்திரதோஷ ரோகம்.

இவை பேதத்தால் இருபது விதம்.

மூத்திரக்கிரிச்சரம்.

1. வாதக்கிரிச்சரம்.
2. பித்தக் கிரிச்சரம்.
3. சிலேஷ்மகிரிச்சரம்.
4. சந்நிவாதகிரிச்சரம்.

என நான்கு விதம்.

அஸ்மரி ரோகம்.

1. வாதாஸ்மரி.
2. பித்தாஸ்மரி.
3. சிலேஷ்மாஸ்மரி.
4. சுக்கிலாஸ்மரி.
5. சர்க்கராஸ்மரி.

என ஐந்து விதம்.

வஸ்திரோகம்.

1. வாதவஸ்தி.
2. வாதாஷ்டிலா.
3. வாதகுண்டலிகை.
4. மூத்திராதீதம்.
5. மூத்திரச்சடரம்.
6. மூத்ரோச்சங்கம்.
7. மூத்திரகிரந்தி.
8. மூத்ரசுக்லம்.
9. மூத்திரவிடவிகாதம்.
10. மூத்திர உஷ்ணவாதம்.
11. மூத்திரக்ஷயம்.
12. மூத்திரசாதம்.

எனப் பன்னிரண்டு விதம். இப்படி மிச்சிரங்கள் கூடி இருபது வகையாகச் சொல்லப்பட்டது.

ஸ்வதியிலும் வஸ்திக்கு மேலும் மேதை முற்றிலும் கடிஸ்தானத்திலும் ஆசனத்திலும் இவ்விடங்களிலே வாதம் பிரகோபித்து மேல் முகமாக வாயு பிரகோபித்து மூத்திரநோய் உண்டாகும். நரம்புகளிலே வாயு பிரகோபித்து அடிக்கடி கீழ்வயிற்றிலே மூத்திரஞ் சுரக்காதபடி செய்யும். மூத்திரம் விடுகிற தோஷங்களினாலே இருபது வகை என்று சொல்லப்பட்டது. மூத்திரவாதமும் பிரமேதமும் வஸ்தியிலே வாதாதி தோஷத்தினாலே உண்டாவன.

கிரிச்சரம்.

வாதகிரிச்சரம்.—தொப்புளுக்குக் கீழே வஸ்திஸ்தானத்தில் உண்டாகும். வஸ்தி துடிக்கும். மேட்டிரம் துடித்து நோகும். கடுக்கும். சிறிது சிறிதாக அடிக்கடி ஜலம் விடும்.

பித்தகிரிச்சரம்.—மஞ்சளித்து உஷ்ணத்தோடே நோவுடன்கூடி ஜலம் விடும்.

சிலேஷ்மகிரிச்சரம்.—களாத்தண்ணீர் போலாவது சுத்தஜலம் போலாவது ஜலம் இறங்கும். கீழ்வயிறு மேட்டிரம் உஷ்ணத்துடன் கனத்து இருக்கும்.

சந்நிபாதகிரிச்சரம்.—முன் வாதாதி தோஷங்களில் சொன்ன மூன்று லக்ஷணமும் உண்டாயிருக்கும்.

அஸ்மரி.

கல்லடைப்பின் காரணம்.—வாயு வஸ்தியிலே பிரவேசித்து மூத்திரத்தை அடைத்து மூத்திரத்தை விடவொட்டாமல் சோஷிக்கச் செய்து பித்தத்தோடும் சிலேஷ்மத்தோடும் கூடி அந்த மூத்திரத்தைச் சிலாரூபமாகப் பண்ணும். ஆலாங்கட்டி, ஜலத்தினாலே எப்படி சிலாரூபமாகிறதோ அப்படியே மூத்திரத்தாலும் கல்லடைப்பு உண்டாகும்.

அஸ்மரியின் பூர்வ ரூபம்.

தொப்புளுக்கும் ஆசனத்துக்கும் நடுவே நோகும். மூத்திரம் வெள்ளாட்டுப் புழுக்கைபோல நாறும். மூத்திரம் வரும்போது மிகவும் எரிந்து துளித்துளியாக விட்டு விட்டு இறங்கும். நன்றாக ஸரளமாக இறங்காமல் மூத்திரம் விடுகிறபோது மோக மூர்ச்சையாம்.

வாதாஸ்மரி மூத்திரம்.—மிகவும் வேதனை உண்டாம். பல்லைக் கடித்துக் கொள்ளத்தக்கதாகவே வரும். உடம்பு நடுக்கும். விருஷணம் மேட்டிரம் முள்ளுப் பரப்பினாப்போலே குத்தும். எப்போதும் தொப்புள் பிணுதல் இரைச்சல் உண்டாகும். வாயு புறப்படும். மலம் இறுக்காகப் புறப்படும். கல்லும் சுக்காங்கல்லுப்போலே இருக்கும். நெரிஞ்சில்காய் மூத்திரத்திலே சிக்கினாப் போலே இருக்கும்.

பித்த அஸ்மரி மூத்திரம்.—வச்சிரத்தைப்போலே அநேகங்களாக இருக்கும். மூத்திரத்துவாரம் மிகவும் எரியும். சில பேருக்குச் சேராங்கொட்டைப் பட்டாப் போலே எரிச்சலுண்டாகும். சிவப்பாகவாவது மஞ்சளித்தாவது கறுப்போடேகூடியாகவாவது இருக்கும். ....ளதுடிக்கிறது மாக இருக்கும். ....கபிலமாக இருக்கும். வெளுப்பாக இருக்கும். கல்பாரமாக இருக்கும். தொப்புள் தலை............ணதுக்கும் நடுவிருஷணம் மேட்டிரம் கூடா. பாரித்துக்கொண்டு இருக்கும். சுக்காங் கல் போலவாவது இருக்கும். சிறு பிள்ளைகளுக்கு முதலாக வரும்.

இது சஸ்திரத்தினாலே வாங்கினாலொழியப் போகாது. சில பேருக்குத் திரும்பத் திரும்ப உற்பத்தியாம்.

சுக்கிலாஸ்மரி.—சுக்கிலத்தை நிறுத்தினால் கனமான சுக்கிலாஸ்மரியாம். உஷ்ணத்திலே வாயு பிரகோபித்து இந்திரியத்தைச் சோஷிக்கப் பண்ணி அதனால் கல் உற்பத்தியாகி, தொப்புள்தலையில் உஷ்ணங்கூடி நோகும். சிறுகச் சிறுக நோகும். நீர் விடும். உஷ்ணத்தோடே கூடி ஜலம் விடும். விதை வீங்கும். கல் வெளுத்திருக்கும்.

சர்க்கிராஸ்மரி.—உஷ்ணத்துக்கும் ஆசனத்துக்கும் நடுவே கடுக்கும். கல்போலே இருக்கும். மூத்திரத்துவாரம் எரியும். மூத்திரத் துவாரத்தைக் கையினாலே ஒத்தினால் மூத்திரம் இறங்கும்.

வஸ்திரோகம்.

1. வாதவஸ்தி.

தொப்புளுக்குக் கீழ் வஸ்தியிலே வாதம் ப்ரகோபித்து மேல் முகமாய் மூத்திரத்தைச் சிறுகச் சிறுக விடும். மூத்திரம் விடும் போது நோகும், தினவு ஒருகால் தின்னும். கீழ் வயிறு கனத்து

சுரந்து கொள்ளும். நோவும், எரிப்பும், துடிப்பும், இரண்டு தாரையாக ஜலம் விடுவதும், ஜலத்தோடு கூடி அடிக்கடி நறுக்கு மலமும் உண்டாம்.

2. ஹதாஷ்டலோ.

மூத்ராசயத்திலே வாயு கோபமாகி மூத்திரத்தை ஸ்தம்பிக்கும் ஜலம் விடுகிறது. அத்யந்தம் துஸ்தரமாக இருக்கும். வியாதி நிலை மாலாசயத்திலும் வஸ்தியிலும் மூத்ராசயத்திலும் வாயு பிரகோபமாகி தொப்புளின் கீழே கல்லுப்போலே வீக்கம் போலே சற்றும் அசையாமல் உயர்ந்து கொண்டு வயிறுஊதிக்கொண்டு மலம் சலம் நன்ருக விடாது.

3. வாதகுண்டலிகை.

வஸ்தியிலே வாதப்ரகோபமாக வஸ்தியிலே பாம்பு போலே புரளும். அதிகமாக நோகும். தொப்புளுக்குக் கீழ் கனத்துக்கொண்டு மூத்திரம் விடாமல் சிறுகச் சிறுக ஜலம் விடும். விடும்போது மலமும் விடும்.

4. மூத்திராதீதம்.

அநேக நேரமிருந்தாலொழிய மூத்திரம் விடாது, மலமும் விடாது. சிறுக நோகும்.

5. மூத்திர ஜடரம்.

தொப்புளுக்குக் கீழ் மூத்திராசயத்தில் வாயு உற்பத்தியாகி வாயுமேல் முகமாய் மூத்திராசயமெல்லாம் மூத்திரம் நிரம்ப வயிற்றுப் பொருமல் கொள்ளும். அதிகம் நோகும். வயிறு ஊதும். வயிறு கழியாது.

6. மூத்திரோச்சங்கம்.

மூத்திரம் விடுகிற நாளத்திலே வாயு உற்பத்தியாகி சிறிது சிறிதாக ஜலம் விடும். வஸ்தியிலே இருந்து மேட்டிரம் வரை நோகும். மெள்ள மெள்ள துளித்துளியாக ஜலம் விடும்.

7. மூத்திக்கிரந்தி.

கீழ்வயிறு மேட்டிரம் விருஷணம் இவை கனத்துக்கொண்டு வீங்கிக்கொள்ளும். கல்லெரிப்புப்போலே நொந்துகொண்டு வயிற்றிலே கையிட்டு அமுக்கினுல் கல்போலே இருக்கும். அடிக்கடி சிறுகச் சிறுக ஜலம் விடும். ஆசனத்திலே பிடித்து உஷ்ணமெல்லாம் கொப்பளித்துக் கண்ணிட்டுக் கொண்டு மூத்திரம் புறப்படும்.

8. மூத்திர சுக்கிலம்.

ஸ்திரீ ஸம்போகம் அதிகமாஞல் வஸ்தியிலே வாயு உற்பத்தியாய் உஷ்ணமாக சுண்ணும்பு கரைத்த ஜலம் போலே ஜலம்விடும்.

9. விஷ்டிவிகாதம்.

பக்குவாசயத்திலே வாயு உற்பத்தியாகி உதிரவாதம் போலே கீழ் வயிற்றுக்கும் நெஞ்சுக்கும் வசி ஊன்றினுப்போலே இருக்கும். மகா வேதனையாக சுள்ளைகள் வயிறுகள் இருக்க மலம் விடாது. மூத்திரமும் மலமும் நாறிக் கொண்டும் மலம் விட்டால் ஜலமும் விடும்.

10. உஷ்ணவாதம்.

வெய்யிலிலே வழி நடந்தாலும் உஷ்ணமான திரவியத்தைப் புசித்தாலும் வாயு வஸ்தியிலும் உ . . . ஸ்த மேட்டிராதிகளும் உற்பத்தியாம். ஜலம் விடும்போது மிகவும் எரியும். மூத்திரம் மஞ்சளிக்கும். இரத்தமாய்த் தான் விடும். உஷ்ணத்தோடே கூடி அடிக்கடி ஜலம் விடும். கைகால் எரியும்.

11. மூத்திரக்ஷயம்.

உடம்பு உஷ்ணத்திலும் வெய்யிலிலும் மற்றும் அனலிலும் இளைப் போடிருல் தொப்புள்தலையிலே வாதமும் பித்தமும் பிரகோபிக்கும். அப்போது நோதலோடு உஷ்ணத்தோடும் ஜலம் சிறிது சிறிதாக விடும்.

12. மூத்திரசாதம்.

பைத்தியமும் வாதமும் சிலோஷ்மமும் மூத்திராசயத்தில் உற்பத்தியாய் மூத்திரம் மஞ்சளித்தாவது ரத்தம்போலேயாவாது மாவுக்கரைத்தாப்போலே யாவது எரிப்போடே கூடி நூல்போல் சிறு தாரையாக ஜலம் விடும். சிலபேருக்கு நாருவர்ணமாக அதிசயமாக ஜலம் விடும். ஜலம் அதிகம் நாறும். உடம்பு உலர்ந்துபோகும். சுண்ணும்பு கரைத்தாப்போலவாவது திண்டு திண்டாகவாவது நீர் விடும்.

அசாத்திய லக்ஷணம்.

கல்லெரிப்புக்கு விருஷணம் வீங்க ஜலங் கட்டுப்பட மிகவும் நோதல் இப்படி இருக்க அசாத்தியம்.

மூத்திரகிரிச்சிர சிகித்ஸை.

சீந்தில்தண்டு, இலவங்கம், இவற்றைக் கஷாயமிட்டுக் குடிக்க வாதக் கிருச்சல் தீரும்.

அதிமதுரம், சிறுநெருஞ்சில்வேர், பெருநெருஞ்சில்வேர், திராக்ஷை, சீந்தில்தண்டு, தண்ணீர்விட்டான்கிழங்கு, பொன்னுங்காணி, சிறுகீரை வேர், நெல்லிமுள்ளி, தாமரைத்தாதும் கிழங்கும் இவற்றைக் கஷாயமிட்டு, தேன் சர்க்கரைக் கூட்டிக் கொள்ள பித்தகிரிச்சிரம் தீரும்.

இருநெருஞ்சில்வேரும், சிறுபீளைவேரும், துராய்வேரும், மரமஞ் சளும், சீந்தீல்தண்டும் கூட்டிக், கஷாயமிட்டுக்கொடுக்க, சிலேஷ்மகிரிச்சிரம் தீரும்.

இருநெருஞ்சில்வேரைப் பாலுடன் அரைத்துக் குடிக்க, வாதக் கிரிச்சிரம் தீரும்.

இளநீரில் இருநெருஞ்சில்வேரை அரைத்துக் குடிக்க, பித்தகிரிச்சிரம் தீரும்.

தயிர்நீரிலாவது, பாலிலாவது, தண்ணீர்விட்டான்கிழங்குச்சாற்றிலா வது, இருநெருஞ்சில்வேரை அரைத்துக் குடிக்க, சிலேஷ்மகிரிச்சிரம் தீரும்.

ஓரிதழ்த்தாமரையை கருப்பஞ்சாற்றிலாவது, தயிர்நீரிலாவது, பாலிலாவது அரைத்துக் குடிக்க, இருபதுவகை மூத்திராதி நோயும் தீரும்.

வெள்ளரிவிதை, அதிமதுரம், மரமஞ்சள், திராகைஷ இவற்றைப் பச்சை யரிசிக்கழுநீரில் அரைத்துக் குடிக்க, மூத்திரகிரிச்சிரம் தீரும்.

தேத்தாண்விதையை இளநீரில் அரைத்துக் குடிக்க, கிரிச்சிரம் தீரும். சிறுகீரைவேரை, பச்சரிசிக்கழுநீரில் அரைத்துக் குடிக்க, கிரிச்சிரம் தீரும். நெருஞ்சில்காய், கொத்துமல்லி, சீந்தில்கிழங்கு, திராகைஷ, நெய்தல் கிழங்கு இவற்றைத் தயிர்நீரில் அரைத்துக் குடிக்க, கிரிச்சிரம் தீரும்.

மூத்திரக்கட்டிற்கு.

வெள்ளிரிவிதை, பொரித்த் வெண்காரம், ஓரிதழ்த்தாமரை, எள், அதிமதுரம், நெருஞ்சில்காயும் வேரும் இவற்றை அரைத்துச் சர்க்கரைபோட்டு, நீர்விட்டுக் கலக்கிக் குடிக்க, ஜலக்கட்டு விடும்.

புளியந்தழை அல்லது புளியம்வேர்ப்பட்டையை ஒரு பிடி இடித்து குளிர்ந்த தண்ணீரில் பிசைந்து வடித்து அதில் அரைச்காசெடை கல்நார், காசெடை கல்மதம் கலந்து குடிக்க, நீர் உஷ்ணமாகித் துளித் துளியாக வருகிறது நீங்கி இப்போது சராகமாக விடும். இது கைகண்டது.

கீழ்க்காய்நெல்லியை அரைத்து, பசுவின்பாலில் கலந்து குடிக்க, ஜலக் கட்டுவிடும். திருபூஷணித்தழையை அரைத்து தொப்புளுக்குக்கீழே தடவ, ஜலம் விடும். கோவைத்தண்டை நறுக்கி இளநீரில் கலந்து குடிக்க, நீர்க் கட்டு விடும். நீற்றுப்பூசனிக்கொடியை இடித்துச் சாறு பிழிந்து ஒரு செரைச் சாறும் நல்லெண்ணெயும் கூட்டிக் கொள்ள, மூத்திர க்ஷயம் நீர்க்கட்டு விடும். ஏலரிசி, சிறுபீளைவேர், கல்மதம், திப்பிலி, இருநெருஞ்சில், இரண்டினுடைய வேர், கிராம்பு இவற்றைச் சூர்ணம் பண்ணி பச்சரிசிக் கழுநீரில் கொள்ள, கிரிச்சிரம் தீரும்.

நீர்கட்டினால் மேட்டிரத்தில் பசலைக்கொடி சுற்ற நீர்விடும். கற்பூரமும் எண்ணெய்யும், சிறுபீளைவேர், செப்பு, நெருஞ்சில்வேர், பேராமுட்டிவேர், ஓரிதழ்த்தாமரை, காட்டுமுருங்கைவேர், நாட்டுமுருங்கைவேர் இவற்றைக் கஷாயமிட்டு, வெண்காரம் காசெடை பொடி செய்து போட்டுக் குடிக்க, கல்லுண்டை விழும்.

புங்கைமரம் கணுக்கால்பருமன் முழு அளவு தந்து நாலு விரலா ழம் தோண்டி கொத்தி, அந்தத் தொண்டியிலே ஒரு செரை பலகறை போட்டு, ஒரு செரை எலுமிச்சம்பழம் சாறு வார்த்து ஒரு நாள் வேக வைக்கச் சுண்ணாம்புபோலே ஆம். அதை எடுத்துக் காசெடை நாலு நாள் கொள்ள, கல் கரைந்து விழும்.

பெரும்பீளையிலே, பிண்ணாக்கிலே இவற்றைப் பிண்ணாக்குடன் வேக வைத்துக் கொள்ள, கல்லெரிப்புத் தீரும்.

மத்தங்காய், புல்லரிசி, நெருஞ்சில்வேரும் காயும் இவற்றைப் பாலில் அரைத்து வெண்காரமும் யவக்ஷாரமும் கூட்டிக் கொள்ள, கல் விழும். புனல்முருங்கை, நல்முருங்கைப்பட்டை, கொட்டிக்கிழங்கு, மாவிலிங்கம் பட்டை, பீளைவேர், கரும்பூலா, வெண்பூலா வேர்ப்பட்டை, முதியார்கூந்தல், விழிவேர், சாரணைவேர் இவற்றைக் கஷாயமிட்டு, கஷாயத்தில் நாலி லொன்று நெய் கூட்டிக் கொள், கட்டுச்சாறு, கல்மதம், வசம்பு, யவக்ஷாரம்,

வெண்காரம், ஓரிதழ்த்தாமரை, கரும்பூலா வெண்பூலா வேர்ப்பட்டை இவற்றை அரைத்துக் கரைத்து வடித்துக் கொள்ள, கல்லெரிப்பு கிரிச்சரம் இவை தீரும்.

நெரிஞ்சல்வேர், பெருநெருஞ்சில்வேர், சீந்தில்தண்டு, சிறுகீரைவேர், தாமரைக்கிழங்கு இவற்றைக் கஷாயமிட்டு, தண்ணீர்விட்டான்சாறு நீற்றுப்பூசனிக்காய்ச்சாறு, கருப்பஞ்சாறு, பொன்னுங்கண்ணிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, இளநீர் இவற்றைக் கஷாயத்துடன் கூட்டி, இதற்கு நாலிலொன்று நெய் கூட்டி, அதிமதுரம், நெரிஞ்சில்வேர், திராக்ஷை, மரமஞ்சள், சந்தனம், சிறுகீரைவேர், வெள்ளரிவிதை, தாமரைத்தாது இவற்றை அரைத்துக் கரைத்து, பதத்தில் காய்ச்சி வடித்து சர்க்கரைக் கூட்டி பாலில் கொள்ள, சர்வமான மூத்திர கிருச்சிரமும் தீரும்.

கற்பூராதிசூரணம்.

கற்பூரம், ஏலம், சாதுர்சாதகம், இலவங்கம், இலாமிச்சம், முடிவாழம், முத்தக்காசு, இலுப்பைப்பூ, சீரகத்துவயம், திராக்ஷை, கற்சூரம், சடாமாஞ்சி, திரிகடுகம், அரேணுகம், கோஷ்டம், அதிமதுரம், திரிபலம், யவக்ஷீரம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொத்துமல்லி, மரமஞ்சள், கல்மதம், கல்நார், சகஸ்ரவேதி, கிராந்தி, தகரம், ஆனைத்திப்பிலி, இருநெருஞ்சில் வேரும் காயும், தாமரைக்கிழங்கும் தாதும், நிலப்பனைக்கிழங்கு, சந்தனம், ஓரிதழ்த் தாமரை, பூவரசங்காய், ஆவாரை, பஞ்சாங்கம், பொன்னுவரைவிதை, தேத்தான்கொட்டை, கீழ்க்காய்நெல்லி, பொன்னுங்காணி, நன்னாரி, நாற்பாலைவேர், திருநாமப்பாலைவேர், சீந்தில்கிழங்கு, அமிர்தசர்க்கரை, நெய்தல் கிழங்கு, சிறுகீரைவேர், சிறுபீளைவேர், பெரும்பீளைவேர், பூசனிவிதை, வெள்ளரிவிதை, அமுக்கராவேர், அறுகம்வேர், நீர்முள்ளிவிதை, அமிர்தவல்லிக் கிழங்கு, (விட)சர்க்கரை, பருத்திக்கொட்டை, குளமா, வட்டத்திருப்பி, வெள்ளைக்குன்றி, கடலழிஞ்சில், கோவைக்கிழங்கு, விளாம்பிசின், பாலாசம்பிசின், மைசாட்சி கற்சூரம், முசுட்டைவிதை, திரிபலம், இவைகளைச் சரிகூட்டிச் சூரணம் பண்ணி, ஏற்றஅளவு காந்தஸிந்தூரம், அப்பிரகஸிந்தூரம் கூட்டி சர்க்கரை தேனில் கொள்ள, மூத்திர நோய் இருபது, சோமரோகமும், க்ஷயமும், மேகம் இருபதும், பாண்டு, காமாலை முதலிய சகல வியாதியும் தீரும்.

மூன்றும் அத்தியாயம்

பிரமேஹம்.

பிரமேஹம் இருபது விதம்.—சிலேஷ்மத்தில் பிறந்த பத்தும், பைத்தியத்தில் பிறந்த ஆறும், வாயுவில் பிறந்த நாலும் ஆக இதன் பேதம் 20.

பொதுக்காரணம்—உஷ்ணமான வஸ்துக்களைப் புசிப்பதனுலும், உஷ்ண தேகப் பெண்ணேடு போகம் பண்ணுவதனுலும், உஷ்ணகாலங்களிலே சஞ்சரிப்பதாலும், வஸ்தியிலே சிலேஷ்மம் பிரகோபித்து சப்த தாதும் உஷ்ணுதிகமாய் அந்தர உஷ்ணத்தினுல் பயித்தியாதிகமாய் அந்த பயித்தியாதிக்கத்தினுலே வாயு அதிகமாய் இப்படி மேகம் உண்டாம்.

பிரமேஹம் இருபது விதம்.

தானே போவதும், மருந்தினுல் போவதும், ஒருகாலும் போகாததும் இப்படி மூன்று விதம். வர்ணத்தினுலும், அவைகள் செய்கிற குணங்களினுலும் இருபது விதமென்று சொல்லப்பட்டது.

சிலேஷ்மத்தில் பிறந்தவற்ருல் உண்டானவையின் பெயர்கள்.—பிரமேஹம், சாந்திரமேகம், இக்ஷுமேகம், பிந்தமேஹம், சுராமேகம், சுக்ரமேகம், ஸிகதாமேகம், சீதமேகம், மந்தமேகம், வாசாமேகம், என இவை பத்து.

பித்தத்தினுல் உண்டான மேகங்களின் பெயர்கள்.—க்ஷாரமேகம், நீலமேகம், காளமேகம், அரித்திராமேகம், மஞ்சிஷ்டாமேகம், ரத்த மேகம் என இவை ஆறு.

வாதத்தினுல் உண்டான மேகங்களின் பெயர்கள்.—மஜ்ஜமேஹம், அஸ்தி மேகம், மதுமேஹம், வாஸாமேகம் என இவை நான்கு.

சிலேஷ்மத்திலே வருபவை.—ஸாத்யம், பைத்யம், யாப்யம், வாதம், அஸாத்யம் என்பனவாம்.

பிரமேஹம்.—சுத்தஜலம்போலே வெள்ளையாகக் குளிர்ந்து நாருமல் ஜலமிறங்கும். ஜலப்பெருக்கு ஜலம் கலங்கின நீர்போலும் கத்தாழைநீர் போலும் இறங்கும்.

சாந்திரமேஹம்.—பச்சையாய்க் கஞ்சிபோலே கட்டியாக இறங்கும்.

இக்ஷுமேஹம் :—கருப்பஞ்சாறு வர்ணமாக மூத்திரம் இறங்கும். பெய்த இடத்திலே ஈ மொய்க்கும். காய்ச்சினுல் வெல்லப்பாகுபோலேயாகும்.

பிஷ்டமேஹம்.—மாவு கரைத்தால்போலே திண்டு திண்டாக வெள்ளையாக ஜலம் விடும்.

சுராமேஹம்.—கள்ளுப்போலே கள்ளுநாற்றம் நாறிக்கொண்டு ஜலம் விடும்.

சுக்கிலமேகம்.—வெள்ளையாகத்தான் ஜலம் விட்டகடையிலே மூக்கூளை போலேதான் விழும்.

ஸிகதாமேஹம்.—நொய்மணல் கலந்தாப்போலே ஜலத்தோடே விடும்.

சீதமேகம்.—ஜலம் அதிகமாக விடும். தித்திப்போடுகூடி மகாகுளிர்ச்சி யாக ஜலம் விடும்.

மந்தமேஹம்.— சிறுகச் சிறுக, மெள்ள மெள்ள ஜலம் விடும்.

வாசாமேஹம்.—எப்பொழுது பார்த்தாலும் வாழைப்பால் போலே புடவையெல்லாம் நனைந்துகொண்டு இருக்கும். ஜலம் விடுகிறபோது நூலிழை இறங்குவதுபோலத் தாரையாக விடும். இவை சிலேஷ்மத்தினல் வருவன.

பித்தமேகம்.

க்ஷாரமேஹம்.—இரத்தவர்ணமாகவும் கையினல் தொட்டுப் பார்த்தால் உவர்த் தண்ணீர்போலும் இருக்கும்.

நீலமேகம்.—

காளமேகம்.—

அரித்திராமேகம்.—மஞ்சள் தண்ணீர்போலே சீலையில்பட்டால் மஞ் சளித்து இருக்கும். எரியும்.

மஞ்சிஷ்டாமேகம்.—மஞ்சிஷ்டையினது கஷாயம்போலே நீர் இருக்கும்.

ரத்தமேகம்.—ரத்தம் போலவாவது, செம்மண் கரைத்தால் போலவா வது உஷ்ணத்தோடுகூடி ஜலம் விடும் உப்பு உறைந்து காணும். இவை பித்த சம்பந்தமானவை.

வாதமேகம்.

ஜலம் விட நேரம் எடுக்கும். சிறுகச் சிறுக விடும்.

மஜ்ஜாமேஹம்.—வெள்ளை மாம்ஸம்போலே ஜலமும் ஜலத்தோடே மாம்ஸமும் கூடி விழும். ஜலம்விட்ட இடம் உலராமல் எண்ணெய் கவிழ்ந்துவிட்ட இடம்போலே இருக்கும்.

அஸ்திமேஹம்.—ஆனைமதம் போலே நிணநீரோடு கூடிய நீர் சிறுகச் சிறுக நூலிழைப் பருமன் ஜலம் சிக்கிச்சிக்கி இறங்கும். சராகமாக ஜலம் விடாது. பலவந்தமாக இருக்கும். ஜலம் விடுகிறபோதெல்லாம் மலமும் புழுக்கை புழுக்கையாக விழும்.

மதுமேகம்.—தேனுடைய வர்ணரூபரஸம் தேன்போலே குழம்பி கையாலே தொட்டால் ஒட்டிக்கொள்ளும்.

வாஸாமேஹம்.—கொழுப்பு வர்ணமாக திண்டு திண்டாக வெள்ளை வெள்ளையாக ஜலம் விடும்.

மேகம் மூன்றுகச் சொல்லப்பட்டது. வாத பித்த சிலேஷ்மங்கள் பிரகோபித்து ஸப்த தாதுக்களை வியாபித்து எந்த தோஷத்தினலே மேக முண்டாயிற்றே அந்த தோஷத்தினலே குணம் காட்டும். சில பேருக்கு மேகம் வந்தது நாள் பட்டால் உபத்திரவப்படுத்தாது. சில பேருக்கு வெகு மூத்திரம் போலே எடுத்து பிளவைகள் தோன்றிக் கொல்லும்.

ஆஸனத்துக்கும், விருஷணத்துக்கும் உஷ்ணத்தினுல் சிலந்திபோலே புறப்பட்டு அந்தச் சிலந்தி கண்விட்டு அந்தக் கண்ணிலே ஜலம் விழும். மேட்டிரத்து மூத்திரத் துவாரத்திலே மாம்ஸம் விழுந்து மூத்திரம் நூலி மைப் பருமனுக்கு விழும். சராகமாக ஜலம் விடாது. தொப்புளின் தலை யிலே உள்ளத....பைப்போலே வந்து புண்ணுய் ஜலம் விழுகிறபோது எரியும். அடிக்கடி சிலபேருக்கு ஜலம் விடும்.

வாதமேஹ குணம்.

வாதமேஹகுணம்.—மலமும் ஜலமும் கட்டும். மலமும் ஜலமும் நன்ருக விடாது. வயிறு ஊதும். உடம்பு நடுங்கும். கீழ்வயிற்றிலே வசியூன்றினுப் போலே இருக்கும். மேட்டிரம் கீழ்வயிறு அள்ளுகள் நோகும். நன்ருக நித்திரை வராது. உடம்பு இளைக்கும். இருமல் உப்புசம் உண்டாயிருக் கும்.

பித்தமேஹ குணம்.

பித்தமேஹகுணம்.—தொப்புளின் தலை தண்டு துவாரம் உடம்பு கைகால் இவை கனமாகவும் வெய்யிலில் போம்போது எரியும். விதை அத்திப்பழம் போலே இருக்கும். தொடை நரம்புகள் எரிந்துகொண்டு துடிக்கும். தாகமாம். உடம்பு சோர்ந்து வரும். மயங்கிவரும். வயிருேடும்.

சிலேஷ்ம மேஹ குணம்.

சிலேஷ்மமேஹகுணம்.—வாய் அரோசகமாய் நீர் ஊறும். வாந்தியாம். நித்திரையாக வரும். இருமும். பீனசம்போலே மூக்கில் நீர் பாயும். கீழ் வயிறு கனத்து இருக்கும். உடம்பெல்லாம் கண்டும் கழலை யுமாகக் கிளம்பும். அடிக்கடி உடம்பு மயிர் சிலிர்க்கும். உடம்பு வெளுத்துப் போகும்.

அஸாத்ய குணம்.

அஸாத்யகுணம்.—தாகம் அதிகமாக எடுக்கும். உடம்பு நெருப்பிட்டுச் சுடுகிறுப்போலே எரியும். மர்மஸ்தானங்களிலே பிளவை தோன்றும். மாம் ஸம் கழுவின நீர்போலே நீர் இறங்கும். வயிறு எடுத்துக்கொள்ளும்.

மேஹ சிகிச்சை.

ஆவாரைப்பஞ்சகமும் சீந்திற்தண்டும் இடித்து மோரில் நனையப் போட்டுக் குடிக்க, மேகம் தீரும்.

ஆவாரைப்பஞ்சகமும் நிழலில் உலர்த்திச் சூரணம்பண்ணி இருபது காசெடை, நெல்லிக்காய் படி பத்து, காசெடை மஞ்சள், மரமஞ்சம், கடலழிஞ் சில்பட்டை, முகிழ்இலை, பொன்னுங்கண்ணி, பூவரசம்காய் இவற்றை இடித்துச் சூரணம், பெராரம்பு பொரம் (?) ஆவாரம்பூ, போளம் இவை ஐந்து காசெடை இவற்றை யெல்லாங்கூட்டி அரைபாக சிந்தூரம், மண்டூரம் கல்மதம் இவை கூட்டி மோரிலாவது தேனிலாவது கொள்ள, பிரமேஹம் தீரும்.

வாழைக்கிழங்குநீர் படி 4, அத்திப்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, இருளிப்பட்டை, நாவல்பட்டை, மருதம்பட்டை, ஆவாரைபஞ்சகம், சீந்தில்தண்டு, பொன்னுங்காணி, முசுட்டை இவற்றையெல்லாம் இடித்து நீரில் நனையப்போட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் பிழிந்து வடித்துக் கொண்டு அந்த வாழைக்கிழங்குநீருடன் கூட்டி, நல்லெண்ணெய் படி 4, ஆவாரம்வேர்பட்டை, கடலழிஞ்சிப்பட்டை, மஞ்சள், மரமஞ்சள், வட்டைத்திருப்பி, கோரைக்கிழங்கு, தேத்தான்கொட்டை, வெள்ளைக்குன்றி மணி, விளாம்பிசின், மைசாட்சி, குக்குலு, கல்மதம், பூவரசங்காய், இவற்றை பயிற்றங்கட்டுச்சாற்றில் அரைத்துக் கரைத்து முந்திரிகைச்சாற்றில்கூட்டி வடித்து, உள்ளுக்கும் கொண்டு மேலுக்கும் துவளையிட, சர்வமான மேகமும் தீரும். மூத்திரக் கிருச்சிரமும் உடம்பு கை கால் எரிப்பு தாகமும் எலும்புருக்கியும் ஸோமரோகமும் தீரும்.

மூத்திரக்கிரசிரத்தில் சொன்ன கற்பூராதிசூரணத்தைக்கொள்ள மேகம் தீரும். முசுட்டையையாவது பொன்னுங்காணியையாவது வட்டத் திருப்பியை யாவது நிலத்துத்தியையாவது நீர்முள்ளிவிதையாவது தென்னம்பாளையை யாவது இடித்து மோரில் பிழிந்து வடித்துக் குடிக்கவும். மோர் இல்லா விட்டால் நீரில் பிசைத்து குடிக்கவும். ஊறவைத்து வடித்து ஒரு கரண்டி நல்லெண்ணெய்விட்டு சாரித்துக் குடிக்கவும். மேகம் தீரும்.

வெள்ளைக்குன்றி, ஆவாரைவிதை, தேத்தான்கொட்டை, கல்மதம், காந்தம், அப்பிரகம், வங்கபஸ்மம், நாகபஸ்மம், லோஹபஸ்மம், மண்டூரம், திரிபலை, ரஜநித்வயம் (?) பருத்திக்கொட்டைப்பருப்பு, விளாம்பிசின், கடலழிஞ்சிப்பட்டை, அமுர்தசற்கரை, வட்டத்திருப்பி இவைகளைச் சரிகூட்டி இவற்றில் நாலிலொன்றுக்கு குலா (?) கூட்டி பொன்னுங்காணிச் சாறு, பசுமஞ்சள்சாறு, வாழைக்கிழங்குநீர், அத்திமரத்துநீர் இவற்றால் அரைத்து தான்றிக்காய்ப்பிரமாணம் உண்டைபண்ணி தேனில் கொள்ளவும். அல்லது முன்னே சொன்ன பிரயோகங்களிலே கொள்ளவும். மூத்திரங்கள், பிரமேகங்கள், கிருச்சிரங்கள் இவை தீரும். இதற்கு படபாநலரஸமென்று பேர்.

நீரிழிவிற்குக் கோவைத்தண்டுவெண்ணெய்.

பேய்க்கோவைத்தண்டின் சாறுபடி $\frac{1}{4}$, பசுவின்பால் படி $\frac{1}{2}$, இவை இரண்டையும் கலயத்திலாவது ஒரு சட்டி வாய்க்குப் புடைவைகட்டி சட்டிக்குள் நாலுபடி நீர்வார்த்து இட்டிலிச்சட்டிக்கு மண் ஒத்தினாற்போலே ஒத்தி சட்டியை அடுப்பில் வைத்து காயவைத்து புடவைமேல் கலசத்தை வைத்து கலசம் காய்ந்து பால்காய்ந்தால் கோவைத்தண்டுஇட்டுத் துழாவ பால் வெண்ணெய்போலே கட்டியாம். கட்டியான வெண்ணெயைத் தினம் எலுமிச்சங்காயளவு கொள்ள, நீரிழிவு தீரும்.

வங்க பஸ்பம்.

வெள்ளை ஈயத்தை மெல்லிய தகடாக இருவிரலகலம் விரல் நீளத்துக்குத் தகடுகள் செய்து ஈயத்துக்குச் சரியளவு தாளகம், ரசம் இவற்றைப் பலாசம் சாறுவிட்டு அரைத்து வங்கத்துக்குத்தடவி ஒரு குழி முழஅகலம் தோண்டி

அந்தக் குழிக்குப் பாதி காட்டுமுட்டையைப் போட்டு அந்த முட்டைமேலே சாண கலம் ஓடுவைத்து ஓட்டுமேலே சாணகலம் கோணிப்பட்டுபோட்டு கோணிப்பட்டு மேல் இரண்டுவிரல்கனம் பிண்ணுக்குப்பொடி போட்டு அதன்மேல் வங்கத் தகட்டை வைத்து, மேலும், இரண்டுவிரல்கனம் பிண்ணுக்குப் பொடி போட்டு மேலும் கோணிப்பட்டு சாணகலம் போட்டு இப்படி வங்கத் தகடும் பிண்ணுக்கும் கோணிப்பட்டும் போட்டு அடுக்கடுக்காய் வைத்து அதன்மேலே குழி நிரம்ப காட்டுமுட்டையிட்டு முட்டைக்கு மேலே நெருப்பிட்டு இப்படி கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுத்து வங்கத்தை க்ஷீரவிருக்ஷகஷாயங்களில் அரைத்து ஏழு புடமிட வங்கபஸ்பமாம். அனுபானத்தில் கொடுக்க, சரவ மேஹமும் தீரும்.

நான்காம் அத்தியாயம்

சலக்கழிச்சலுக்கு வேறு முறைகள்.—பொன்னுங்காணி ஒருபிடி, சிறுகீரை ஒருபிடி, செந்நாயுருவி ஒருபிடி, சிறுபீளை ஒருபிடி, நிழலில் உலர்த்தி வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு நல்ல வெல்லம் நெய்யில் குழப்பிக் குடிக்கவும்.

வேறு முறை.—களிப்பாக்கு பலம் 1, உலர்ந்த ஆகாசக் கருடன் பலம் 1, உலர்த்தின பெரும்பீளைவேர் பலம் 1, காசுக்கட்டி வராகன் 4, இவற்றையெல்லாம் தூளாக இடித்து பின்பு நல்லெண்ணெய் வார்த்து வறுத்து மெழுகுபதமான பிறகு கீழே இறக்கி வைத்துக்கொண்டு அதில் நல்லெண்ணெய் வார்த்து வைத்துக்கொண்டு விடியற்காலையில் தினப்படி மூன்றுவிரல் அளவு எடுத்துக்கொள்ள, வெகுசலக்கழிச்சல் தீரும்.

பத்தியம் : முந்திரிகைப்புண்ணுக்கு எருமைத்தயிர்.

வெகுமூத்திரத்திற்கு வேறொரு முறை.—சாதிக்காய் 5-வராகனெடை, சாதிபத்திரி 5 வராகனெடை, கிராம்பு 1 வராகனெடை, அபினி 1 வராகனெடை, கடலழிஞ்சிப்பட்டை 5 வராகனெடை, ஊசிக்கல் 5 வராகனெடை, ஆவாரை வேர்ப்பட்டை 5 வராகனெடை, இவையெல்லாம் வெவ்வேறாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு வெந்நீரில் கட்டியாகப் பிசைந்து தினப்படி தின்னவும்.

பத்தியம் : துவரம்பருப்பு, முருங்கைக்காய், பயற்றம்பருப்பு; புளியாகாது.

வெகுமூத்திரத்திற்கு வேறொரு முறை.—நற்பாலைவேர், அவுரிவேர், கீழ்க்காய்நெல்லித்தழை இவையெல்லாம் அரைத்து பசுவின் பாலில் கரைத்து பசுவின் நெய்யுடன் மூன்றுநாள் கொடுக்கவும். முருங்கைத் தழை கட்டுக்கொடித்தழை முசுட்டைத்தழை இவைகளை வேகவைத்துத் தின்னவும். ஊமச்சிநத்தையைத் தண்ணீரில் நனையவைத்து அந்தத் தண்ணீரைப் பருகவும்.

வேறொரு முறை.—உடும்பின் குடலை வாங்கி உலர்த்திப் பொடியாக்கி ஆவாரைச் சமூலம் பிடுங்கி உலர்த்திப் பொடிசெய்து சேரக்கலந்து தினப்படி விழுங்கவும்.

வேறொரு முறை.—பொன்னுங்கணிவேர், தூதுவளம்வேர், ஆவாரைச் சமூலம், அதன்விதைஒன்று, பாலில் குடிக்க, நோய் தீரும்.

வேறொரு முறை.—ஆவாரைச்சமூலம், தூதுவளைவேர், பனைவேர், வரப்பூசனிவேர் (?) இவற்றை அரைத்துக் குடிக்க, நோய் தீரும்.

வேறொரு முறை.—விழுதிச்சாறு, சிறுவழுதுணைச்சாறு, அல்லியிலைச் சாறு, பாதிரியிலைச்சாறு, இந்தச் சாறுகளை நாலிலொன்றாய்க் காய்ச்சி இதில் திருமேனிகாணுவாழைவிதையை நன்றாக உலர்த்திப் பொடிபண்ணிக் கலந்து அரைஆழாக்கு வீதம் தின்னவும்.

வேறொரு முறை.—அத்திப்பிஞ்சுப் பொடி நாழி, கிளித்திப்பொடி நாழி, முதுளவிரி (?) தென்னம்பாளையொன்று இவையெல்லாம் உலர்த்திப் பொடியாக்கி ஒரு காசளவு தேனில் குழைத்துத் தின்னவும். இது கைகண்டது.

வேறொரு முறை—பூவரசந்தோல்பொடிநாழி, அரைக்கீரைவிதை பொடி நாழி, புறனும்பளஞ்சோற்றுப்பொடி நாழி, இவைகளைக் கலந்து தேனில் கொள்ளவும்.

வேறொரு முறை.—நிலாரிக்கற்கம், வெண்குன்றிப்பருப்பு, ஆவாரை விதைப்பருப்பு, பருத்திவிதைப்பருப்பு, காந்தக்கல், விளாம்பிசின் இவை ஒவ்வொன்றும் கழஞ்சு வீதம் காடி அல்லது தேனில் அரைத்து ஏழு உண்டை செய்து நித்தம் கொடுக்கவும்.

வேறொரு குடி நீர்.—ஆவாரைவேர்ப்பொடி கழஞ்சு ஒன்று இவற்றை இருநாழி நீர்விட்டுக் காய்ச்சி உழக்காக்கி குறுக்கிக் குடிக்கவும்.

வேறொரு முறை.—200-நத்தை எடுத்துவந்து ஒரு நாள் நல்ல தண்ணீர் விட்டுக் கழுவி எடுத்துப் பின்பு அவித்து நன்றாக உலர்த்தி பொடி செய்து தின்னவும். மற்றோர்நாள் இலந்தைப்(?)பட்டை, கருக்காலிப்பட்டை, வெரிலபிரப்பட்டை(?) ஆவாரைப்பட்டை இவை நான்கையும் பொடித்து சர்க்கரை ஒக்கக் கூட்டி நித்தம் ஒரு கழஞ்சு கொள்ளவும்.

வேறொரு முறை.—வெண்குன்றிவித்து, தேத்தாம்பால்விளங்கு (?) இவைகளை முதல்நாள் காடியில் ஊறவைத்துக் காடியில் அரைத்து, பிசினும் பொடிசெய்து பிசைந்து உண்டை செய்து தேனில் தோய்த்துத் தின்னவும்.

வேறொரு முறை.—தினையரிசியைச் சாரணைச்சாற்றில் அவித்து உண்ணவும்.

வேறொரு முறை.—ஆவாரம்பூவையும் பிண்ணாக்கையும் புளியிட்டுத் தின்னவும்.

வேறொரு முறை.—பாவட்டை, ஆவாரைவேரும் தோலும், வரிக்கோவை வேர் இவற்றை உலர்த்திப் பொடிசெய்து வெண்ணெய்யில் குழைத்துக் காலையில் விழுங்கவும். இந்த இரண்டு வேர்களையும் இருநாழி நீர்வார்த்து உழக்காய்க் காச்சி வடித்துக் குடிக்கவும்.

வேறொரு முறை.—அல்லியரிசி, நீர்முள்ளியரிசி, அத்திப்பழவிதை, ஆவாரம்விதை, குமிழம்வேர் இவற்றை ஒக்கக் கொண்டுவந்து மோரில் நனையவைத்து ஆவாரையிலைச்சாறு வார்த்து அரைத்து கொமனல (?) பிரமாணம் குளிகைபண்ணி நன்றாக உலர்த்தி நித்தம் ஓர் உண்டையைப் பொடி செய்து வெந்நீரில் குழைத்து விழுங்கவும். ஒரு நாளைக்கு மோரில் கொடுக்கவும்.

இரவில் இருபதுஆவாரைவிதையையும் நாலு தேத்தான்விதையையும் அரைத்து மோரில் கொடுக்கவும்.

வேறொரு முறை.—ஆவாரைவிதை அரைத்து மூன்றுருண்டை உருட்டி எண்ணெய்யில் மூன்றுநாள் காலையில் கொள்ளவும். நீர் துளியும் கழியாது.

அதன்மேல் வங்கத்தகட்டைவைத்து மேலும் இரண்டு விரற்கனம் பிண்ணாக்குப் பொடிபோட்டு மேலும் கோணிப்பட்டு சாணகலம் போட்டு இப்படி வங்கத்தகடும் பிண்ணாக்கும் கோணிப்பட்டும் போட்டு அடுக்கடுக்காய் வைத்து அதன்பின்னர் குழிநிரம்ப காட்டுமுட்டையிட்டு முட்டைக்கு மேலே நெருப்பிட்டு இப்படி கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுத்து வங்கத்தைக் கல்வத்திலிட்டு க்ஷீரவிருக்ஷகஷாயங்களில் அரைத்து ஏழுபுடமிட வங்கம் பஸ்பமாம். அனுபானத்தில் கொடுக்க சர்வ மேஹமும் தீரும்.

குஷ்டம்—சவித்ரம்—கிருமி.

குஷ்டம்.—மஹாகுஷ்டம் ஏழு விதம். அவை வாதகுஷ்டம், பித்த குஷ்டம், சிலேஷ்மகுஷ்டம், வாதபித்தகுஷ்டம், வாதசிலேஷ்மகுஷ்டம், சிலேஷ்ம குஷ்டம், சன்னிபாதகுஷ்டம் என்பனவாம்.

வாதத்திலே பிறந்தது கபாலம். பித்தத்திலே பிறந்தது உதும்பரம். சிலேஷ்மத்திலே பிறந்தது மண்டலம். விசர்ச்சிகாவாதபித்தத்திலே பிறந்தன ருஷ்யஜிஹ்வம். வாதசிலேஷ்மத்திலே பிறந்தது கஜசர்மை கிடிபம், சித்மம், அலசகம், விபாதிகை. பித்தசிலேஷ்மத்திலே பிறந்தன், தத்ரூ, சதாரு, புண்டரீகம், விஸ்போடம், பாமா, சர்மதளம். சன்னி பாதத்திலே பிறந்தது காகணம். இந்த ஏழுவித தோஷங்களால் பதினெட்டு வித குஷ்டம் பிறந்தன.

குஷ்டத்துக்கு ஹேது.—ஜன்மாந்தரத்திலே மஹாபாபம் பண்ணினவனுக்கு இதுவரும். வாதபித்தாதிகளுக்கு விரோதமான அன்னபானாதிகளைப் புசிப்பதனாலேயும் தேஹத்துக்கு அஹிதமான காரியம் பண்ணுவதனாலேயும் சப்த தாதுவிலும் வாத பித்த சிலேஷ்மம் பிரகோபித்து நரம்புகளிலே அடைந்து ஆகார ரசசாரத்தை ஏனைய தாதுக்களில் பரவ விடாது வேறு வர்ணமாக்கி மேல்சர்மத்திலே பிரவேசித்து சர்மத்தை இவ்வண்ணமாக்கும். பின்னர் அநேக ரூபமாகிக் காட்டும். நாள் சென்றால் சர்மங் கறுத்து காந்தி கெட்டு ஒருவன் வர்ண நிறமாகும். தேஹத்தில் வட்டமாகத் தடிப்பு உண்டாகும். சில குஷ்டம் எரியும். சில குஷ்டம் நோகும். சில குஷ்டம் புழுக்குடைதல்போலே இருக்கும். மயிர் உதிர்ந்துபோகும். செம்பட்டை மயிர் ஏற்படும். வெள்ளரிப்பழம் வெடிப்பதுபோல் சில குஷ்டம் வெடிக்கும். சில குஷ்டம் கோவைப்பழம்போல் வெடிக்கும். சில குஷ்டம் தடிப்பாக உடம்பிலே கிளம்பி அதராக மீன் செதில்போலே உதிரும். உடம்பு நாறும். மூக்கு சப்பையாகும். கண் சிவக்கும். கண்ணீர் பாயும். பீளை கட்டும். குரல் வேற்றுமைப்படும். மந்தாக்கினியாகும். ஜ்வரம் வரும். உடம்பிலே எறும்பு ஊருகிறாப்போலே உணர்ச்சி உண்டாகும். கிள்ளினாலும் தெரியாமல் மரத்தாப்போல் சில குஷ்டமிருக்கும். நெருப்பு அனல்பட்டவுடனே தேகத்திலே கொப்பளிக்கும். நெருப்பு சில குஷ்டத்துக்குச் சேராது. உடம்பில் எரிச்சலுண்டாம். புண் உண்டாகும். புண்ணில் சிறு புழுக்கள் காணும். அந்தப் புண் சர்மத்தை, நரம்பை எலும்புகளைத் தின்னும்.

கபாலவாதத்திஞலுண்டாகும் குஷ்ட லக்ஷணம்.—உடம்பு கறுத்து இருக்கும். காக்கணம்பூ வர்ணமாக இருக்கும். கடித்த இடம் அனலாக இருக்கும். மரத்து இருக்கும். சருகிலேப்போலே கடித்தவிடம் சரசரவென் றிருக்கும். தடிப்பு அல்பமாக இருக்கும். தடிப்பில் மயிர் இருக்கும். தடிப்பு நோகும். சிறுகத் தினவு உண்டாம். சீக்கிரத்திலே தடிப்புப் பிறக்கும். பின்பு அது மறையும்.

பித்தத்திஞலுண்டாகும் உதும்பர குஷ்ட லக்ஷணம்.—தேகத்திலே தடிப்புச் சிவந்து தாமிர வர்ணமாகத்தான் இருக்கும். தடிப்பு அத்திப் பழத்தைத் தொட்டாற்போலே மெத்தென்று இருக்கும். மயிர் சிவந்து இருக் கும். மயிர் உதிரும். தடிப்பு கடுகி மறையாது. தடிப்பு சூட்டுடன் எரியும். தேகத்திலே கடிகிப் பரவாது. தேகத்தில் தடிப்பு வெடித்து நீராவது ரத்தமாவது பாயும். எரியும். அதிகம் நோகும். சீக்கிரத்திலே தேகமெங்கும் பரவும். ஜ்வரம் வரும்.

(1) சிலேஷ்மத்திஞலுண்டாகும் மண்டல குஷ்ட லக்ஷணம்.—தடிப்பு கடினமாக இருக்கும். தொட்டுப் பார்த்தால் மழுங்கி இருக்கும். தேகத் திலே தடிப்பு கடுகிப் பரவாது. அஃது ஒன்றேடொன்று கூடி ஓரம் உயர்ந்திருக்கும். வெகுவாகத் தினவு உண்டாம். புழுக்குடைதல் போலே இருக்கும். தடிப்பு நடுவே வெளுத்து வட்டமாக இருக்கும்.

(2) ஏககுஷ்ட லக்ஷணம்.—உடம்பில் மிகுதியான பாகங்களில் பரவி இருக் கும். நீர் வியர்வை சிறிதும் இராது. மீன்செதில்கள்போல் செதில் உண்டாம்.

(3) விசர்ச்சையின் இலக்ஷணம்—தினவு உண்டாகும். தடிப்பு வெடிக்கும். கறுத்திருக்கும். அசுகு பாயும்.

வாத பித்தத்திஞல் உண்டாவன :—

ருஷ்யஜ்ஹவ குஷ்ட இலக்ஷணம்.—மரை நாக்குப்போலே சுறசுற வென்னும். தடிப்புக்காணும். உஷ்ணத்துடன் கூடி ஓரம் உயர்ந்து சிவந்து சிறு சிறு கொப்பளங்கண்டு நோவுடன் இரணமுண்டாம். அதில் சிலவற்றில் புழுக்கள் நெளிதலுடன்கூடி அசுகு பாயும். ஒன்றேடொன்றுகூடி இருக் கும்.

வாதசிலேக்ஷ்மத்திஞல் உண்டாவன.—(1) கஜசர்ம குஷ்ட லக்ஷணம்.— தொட்டுப் பார்த்தால் தடிப்பு ஆனைத்தோல் போலே இருக்கும். சொறிந்தால் மீன் பொருக்குப்போலே அதர் விழும். தினவு தின்னும்.

(2) கிடிப குஷ்ட லக்ஷணம்.—தடிப்பு அனலாக இருக்கும். சுறசுற வென்றும் தொட்டுப் பார்த்தால் காய்கட்டினுப்போலும் இருக்கும் . . . . தினவு உண்டாகும். நோகும்.

(3) ஸித்ம குஷ்டலக்ஷணம்.—முன்னந்தலையிலே தடிப்புக் காண் பிக்கும். பின்பு தேகமெல்லாம் சீக்கிரமாகக் கிளம்பும். தொட்டுப் பார்த்தால் மழுங்கி இருக்கும். தடிப்பு ஓரம் உயர்ந்துவரும். சுரைப்பூவர்ணமாக

இருக்கும். மீன் பொருக்குப்போலே காணும். சொறிந்தால் அதர்விழும். உடம்பு மீன் நாற்றம்போல் நாறும். தேகமெல்லாம் பரவி இருக்கும். தவடையில் முதலில் வரும். பிறகு தேகத்தில் வியாபிக்கும். சிவந்து இருக்கும். கைகால் வெடித்து கறுத்துப் பின்னர் தேகம் முழுதும் கருப்பாகும். தடிப்புக் காண்பிக்கும். நோவுண்டாயிருக்கும். சிறு தினவு உண்டாகும். வெடிக்கும். நீர்பாயும். காக்கணம்பூவர்ணமாய் இருக்கும். உயர்ந்து வட்டமாக, கடினமாகத் தடிக்கும்.

(4) அலசக் குஷ்ட லக்ஷணம்.—தினவு உள்ளது நிவிர்த்திருக்கும். தடிப்பிலே வெடிப்புக் காணும். கொப்பளிக்கும். நிறையக் கொப்பளம் புறப்படும். சீழாவது நீராவது பாயும்.

(5) வியாதிகா குஷ்ட லக்ஷணம்.—கைகால்களில் வெடிப்பும், சிலபேருக்கு வெடிப்பிலே நீரும் பாயும். சிலருக்கு நீர் பாயாது. வெள்ளிப் படைம்போல் வெடிப்பு ஆறுது. அதிகம் நோதலும் அற்பத்தினவுமுண்டாம்.

பித்த கபத்தினுல் உண்டாவன.—(1) தத்ரு குஷ்ட லக்ஷணம்.—அறுகம்புற்களைப்போல் படர்ந்தும் காக்கணம்பூப்போலும் இருக்கும். வரம்பு கட்டி வட்டமாயிருக்கும். தினவுள்ளது. ஒட்டுவார் ஒட்டுவதுமாயிருக்கும்.

(2) சதாரு குஷ்ட லக்ஷணம்.—தடிப்பும் ஓரம் உயர்ந்தும் எரிச்சல் நோவுடனும் கூடி சிவப்பு உண்டாய் வெடித்துப் புண்ணுகும். அசுகுநீர் சீழ் ரத்தம் பாயும். புழு குடைவதுபோல் இருக்கும். நாற்றம் இருக்கும்.

(3) புண்டரீக குஷ்ட லக்ஷணம்.—தாமரைப்பூஇதழ் வர்ணமாக இருக்கும். தடிக்கும். கடுகி மறையாது. வெடிக்கும். கொப்பளிக்கும். பல வர்ணமாகவும் காண்பிக்கும்.

(4) விஸ்போட குஷ்டம் (5) இவற்றின் இலக்ஷணம்.—சிரங்குபோலே வெடிக்கும். தினவு உண்டாம். சீழ்பாயும். அசுகுபாயும். நோகும். வெடிப்பும் சிவப்பும் காண்பிக்கும். பொருக்குக்கட்டி கறுத்து இருக்கும்.

(5) பாகா குஷ்ட லக்ஷணம்.—தொடையிலும் இடுப்பிலும் கைகால்களிலும் அண்டத்திலும் வெடிக்கும். (இது பெரு சிரங்கு, சிறு சிரங்கென இருவகை).

(6) சர்மதள குஷ்ட லக்ஷணம்.—தேகத்திலே வெடிக்கும். தொடக்கூடாமல் எரியும். தினவு உண்டாகும். நோகும். வெடித்த இடம் அனலாக இருக்கும். வெடித்தது கோவைப்பழம்போலே சிவந்திருக்கும். இதற்கு பீசத்து என்பார்கள். இதற்கு கம்மாளன் கையால் காவிக்கல்லினுல் எழுதுவிப்பார்கள்.

சந்நிபாதத்தினுல் உண்டாவன.—காகண குஷ்டலக்ஷணம்.—குன்றிமணியைப்போல சிவந்தும் கறுத்தும் இருக்கும். எரிச்சல் அதிகம் உண்டாகும். தடித்துக் கறுத்துப் பின்னர் சிவந்தும் காணும். மரவட்டை வர்ணமாக இருக்கும். தினவும் நோதலும் இருக்கும்.

தாதகத குஷ்டங்கள்.

த்வக் கதமான குஷ்ட லக்ஷணம்.—சர்மம் வேற்று வர்ணமாகும். உடம்பு அனலாகச் சுடும். நோகும். குதி வலிக்கும்.

இரத்த கதமான குஷ்ட லக்ஷணம்.—உடம்பு தடித்து மரத்துப்போகும். வெடித்து அம்பு பாயும்.

மாம்ஸ கதமான குஷ்ட லக்ஷணம்.—வெடிப்பிலே சதை புறப்படும். கால்கைகளில் வெடிக்கும். குதி வலித்து நோகும். தேக சந்துக்களிலே அதிகம் காண்பிக்கும்.

மேதோ கதமான குஷ்ட லக்ஷணம்.—கால் நடை கொள்ளாது. கால்கை புருவங்களிலே வெடித்து நீர் சீழ் ரத்தம் பாயும். தடிப்பு கடினமாக இருக்கும்.

அஸ்தி கத குஷ்ட லக்ஷணம்.—மூக்கு அடைத்துக்கொண்டு சளி பாயும். மூக்குச் சப்பையாகும். வார்த்தை வேறுபடும்.

மஜ்ஜா கத குஷ்ட லக்ஷணம்.—கண் சிவந்து நீர் பாய்ந்து பீளை கட்டும். குரல் கட்டிக் கொள்ளும். கை கால் விரல்கள் குறையும். தேகமெங்கும் கனவிரண முண்டாகும். விரணத்தில் புழுக்கள் காணப்படும். சீழ் பாயும். நாற்றம் வீசும்.

சுக்கில கத குஷ்ட லக்ஷணம்.—மந்தாக்கினி, அதிதாகம், வயிறுகழிதல், கண்ஞேதல், ஹீனஸ்வரம், புழுக்குடைவதுபோலே தேகமெல்லாம் குடைச்சல், சுரமுண்டாதல், தலைகனத்தல், தேகம் மரத்துப்போகுதல, என்பன காணும்.

சுக்கில கத குஷ்டமுள்ளவன் ஸ்திரீ ஸம்போகம் பண்ணினால் ஸ்திரீக்கும் அக்குஷ்டம் வரும். அப்போது ஜனித்த பிள்ளைக்கும் குஷ்டம் பீடிக்கும்.

சாத்தியா சாத்தியம்.—த்வக் கதமும், ரத்தக் கதமும், மாம்ஸகதமும் சாத்தியம். மேதோகதகுஷ்டங்கள், யாப்யம், அஸ்திமஜ்ஜா, சுக்கிலகத குஷ்டங்களும், திரிதோஷ குஷ்டங்களும் அஸாத்யம்.

அஸாத்ய குஷ்டக் குறி லக்ஷணங்கள்.—கைகால்விரல்கள் அழுகிவிழ, கண் சிவந்து நீர்பாய, பீளைகட்ட, குரல்மாற, மந்தாக்கினி ஏற்பட, தேகமெங்கும் புழு குடைவதுபோல் இருக்க, தாகமதிகமாக, வயிறூேட, தேகம்மரத்துப் போக, தேகம் கனவிரணமாக, வெடிப்பில் சீழ் ரத்தம் நீர் பாய, புழு புறப்பட அஸாத்திய மென்றறியவும்.

சிகிச்சை.

சார்த்திக்குக் கொடுக்கவும். அஞ்சனம் இடவும். நசியம் செய்யவும். அட்டையைவிட்டு ரத்தம் குடிப்பிக்கவும். குஷ்டத்துக்குத் தைலாதிகளையும் பானலேபாதிகளையும் முதலில்செய்யவும். வாதகுஷ்டத்துக்குத் தைலாதிகளைப் பண்ணவும். பித்த குஷ்டத்துக்கு ஔஷதங்களைப் பண்ணவும். சிலேஷ்ம குஷ்டத்துக்கு லேகியங்களைச் செய்யவும்.

திக்தகிருதம் பண்ணும் வகை.

பேய்ப்புடல், வேம்பு, செரும்படை, சீந்தில்தண்டு, கண்டங்கத்திரி வேர், ஆடாதோடைத்தழை, சிறுகாஞ்சொறி, பற்பாடகம், பம்பந்தூராயி, திரிபலை, இலாமிச்சம், பாற்சோற்றிவேர், நிலவாகை, பெரும்புல்வேர் இவற்றை இடித்துக் கஷாயமிட்டுக் கற்பூரவல்லிச்சாறு நெய் பால் கூட்டி, பம்பந்துரா, முத்தக்காசு, நிலவேம்பு, குடசப்பாலைப்பட்டை, திரிகடுகு, சந்தனம், கடுகுரோகணி, மரமஞ்சள், வட்டத்திருப்பி, கார்போகஅரிசி, அரைத்துக் கரைத்து வடித்துக் கொள்ள, பயித்தியகுஷ்டம், விஸர்ப்பிப் பிளவை, தாஹம், எரிப்பு, பிரமம், தினவு குணங்கள் தீரும்.

ஆவத்திரி கிருதம்.—சடைச்சிவேர், வலம்புரிவேர், சாறடைவேர், வேப்பம்பட்டை, கொன்றைவேர்ப்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, பம்பத்துரா, குடசப்பாலைப்பட்டை, மாவிலிங்கம்பட்டை, எருக்கம்வேர்பட்டை, பாற்சோற்றிவேர், பேய்கொம்மட்டிவேர், நிலாவரைவேர், நிலவாகைவேர், வாகைப் பட்டை, பெரும்புல்வேர், புங்கம்பட்டை, விடத்தேர்வேர், அழிஞ்சில்வேர்ப் பட்டை, இவற்றை இடித்துக் கஷாயமிட்டு மணத்தக்காளிச்சாறு, கற்பூரவல்லிச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு இவற்றைக் கஷாயத்துடன்கூட்டி நெய் பால் கூட்டி, கந்தகம், தாளகம், மனோசிலை, கார்போகஅரிசி, சந்தனம், முத்தக்காசு, வட்டத்திருப்பி, மரமஞ்சள், வாலுளுவைவிதை, மஞ்சிஷ்டி, கடுகுரோகணி, அழிஞ்சில்விதை, திப்பிலிமூலம், திரிகடுகு, விளங்கம், இந்துப்பு, வசம்பு, குஷ்டம், தகரைவிதை, இவற்றை அரைத்துக் கரைத்து வடித்து சுத்தி பண்ணின குக்குலுநெய்யில் வருத்து அரைத்து படி நெய்க்கு ஐந்து பலம் விழுக்காடு கூட்டி துழாவி உட்கொள்ள, பதினெட்டு குஷ்டமும் சருவ ரணங்களும் தீரும்.

கற்பூரவல்லியை சூர்ணம் செய்து வேப்பெண்ணெய்யுடன் உட்கொள்ள, கை கால் நகம் குறைந்த குஷ்டம் தீரும்.

எள்ளும் சேராங்கொட்டையும் இடித்து கந்தகம் வராகனெடைக்கூட்டி உட்கொள்ள குஷ்டம் தீரும்.

வேப்பங்கட்டை, செம்மரம், செம்மணிச்சமரம், பேயத்திக்கொம்பு, கொன்றைமரம், வாகைமரம், அழிஞ்சில்மரம், இவற்றைச் சிறுக நறுக்கி ஒரு சாலில் அடைத்து, சாலுக்குள் சேராங்கொட்டை, நீரடிமுத்துக்கொட்டை இவைகளை கத்தரித்து நாலுபடி போட்டு, சாலுக்கு அடியிலே விரல்புகும்படி ஓட்டைவிட்டு கீழே சட்டியைவைத்து அதன்மேலே சாலைவைத்து, சாலுக்குப் பாதிமண்மூடி சால்வாய்மேல் சட்டியைக்கவிழ்த்து, எருமுட்டைபோட்டுப் புடமிடகுளிர்தைலம் இறங்கும். இந்தத் தையிலத்துடன் கார்போகஅரிசி, கந்தகம், தாளகம், மனோசிலை இவற்றைச் சுத்தி பண்ணி, பணவெடைகூட்டி உட்கொள்ள சர்வ குஷ்டமும் தீரும்.

10 சேருங்கொட்டையை இரண்டாகவெட்டி பானையில் போட்டு பூமிபுடத்தில் முன்னே சொன்னபிரகாரம் தைலமிறக்கி, அந்தத் தைலம் படி 2, சாரடைவேர், வேப்பங்கொட்டை, வாகைவேர், கொன்றை வேர், திரிபலைக்கொடிவேலிவேர், மாவிலிங்கம்பட்டை, பாற்சோற்றிவேர், பெரும்புல்வேர் இவற்றைக் கஷாயமிட்டு, அவுரிச்சாறு, கரிசலாங்கண்ணிச்

சாறு, சங்கங்குப்பிச்சாறு, சாறடையிலைச்சாறு, கற்பூரவல்லிச்சாறு, மஞ்சள் சாறு, செறுப்படைச்சாறு, பொடுதலைச்சாறு, விழுதுச்சாறு இச்சாறுகளும் கஷாயமும் சேருங்கொட்டைத்தைலமும் ஒக்கக்கூட்டி, சேருங்கொட்டைத் தைலம் 4-படி, பால் 4-படி கூட்டி அதிரச பாகுபதமாகக் காய்ச்சி, அந்தப் பாலிலே நெய் படி-1 கூட்டவும். லோஹபஸ்பம், பலம்-1. திரிபலை, திரிகடுகு, சித்திரமூலவேர்ப்பட்டை, சாரடைவேர், மரமஞ்சள், வட்டத்திருப்பி, வாலுளுவைவிதை, விளங்கம், திரிக்ஷாரம், திரிகடுகம், திப்பிலிமூலம், அதி விடையம், கார்போகஅரிசி, பம்பந்துராவேர், சடைச்சிவேர், குக்குலுசூர ணம், நிலவாகைவேர் இவற்றை இடித்து சூர்ணம்பண்ணி வஸ்திரகாயம் பண்ணி பாலில் கலந்து சூர்ணம் படி-2, தேன் படி-2, விட்டுக் கலந்து பல்லாயில் எடுத்து உட்கொள்ள, குஷ்டம், பகந்தரம், கிருமிகள், காசம், சுவாசம், கைகால்குடைதல் இவை எல்லாம் தீரும்.

கார்போகஅரிசி, எருக்கம்வேர்ப்பட்டை, வேலிப்பருத்திவேர்ப்பட்டை, அவுரி வேர், காட்டுவாழைவேர், செம்முள்ளிசமூலம், சாரடைவேர், பாற்சோற்றி வேர், பேயத்திவேர்பட்டை, இவற்றின் சாறுகூட்டி காட்டுஆமணக்கம்வேர், ஆதண்டமரம், ஆதண்டங்கொடி, உப்பிலிமரம், நொச்சிக்கொம்பு, நீலிக் கொம்பு, சங்கம்வேர், மிளகு, தான்றிவேர், முன்னைவேர், தழுதாழைவேர், செம்பரத்தைக்கொம்பு, காட்டுநாரத்தைக்கொம்பு, சீந்தில்கொடி, அமுக் கராவேர், வேப்பாலைக்கொம்பு, குடசப்பாலைக்கொம்பு, பெருமரம், சதுரக் கள்ளிவேர், கொடிக்கள்ளிக்கொம்பு , இலைக்கள்ளிக்கொம்பு, பேயத்திக் கொம்பு, காட்டுமுருங்கைவேர், முருங்கைவேர், பலாசம்கொம்பு, எட்டிமரம், சேருங்கொட்டை, நீரடிமுத்துக்கொட்டை, இலுப்பைவைரம், நீர்ப்புங்கு, நச் சட்டைக்கொம்பு, பேய்ப்பீர்க்கம்விதை, செங்கத்தாரிவேர், பூதாளமரம், இதன் வைரமாவது கொம்புகளாவது வேருவது கிடைத்ததைக்கொண்டுவந்து சிறுக நறுக்கி சாலில் நிரப்பி சாலுக்கு அடியிலே விரல் புகும்படி ஓட்டைவிட்டு கீழே சட்டிவைத்து சாலை வைத்து சாலுக்குமேல் சட்டியிட்டு மூடி, சாலுக்குப் பாதி மண்மூடி சாலின்மேல் எருமுட்டையிட்டுப் புடமிட இது பூப்புடதைலமாம். கீழ்ச்சட்டியிலே தைலம் இறங்கி இருக்கும். இதற்குப் புடமென்று பெயர். அந்தத்தைலத்தில் கந்தகம் காசெடை 10, சுத்திபண்ணின தாளகம்காசெடை 10, மனோசிலை காசெடை 10, சாரடைவேர், கார்போகஅரிசி, காவேளைவிதை, நிலவேம்பு, சிவனார்வேம்பு, திரிபலை, பஞ்சகோலம், மிளகு, பாற்சோற்றிவேர், சடைச்சிவேர், நீர்வாகைவேர், மாணத்தக்காளி, குக்கில், கரிசலாங் கண்ணி, சங்கங்குப்பி, தாளிசபத்திரி, மயூரசிக்கி , கஸ்தூரிமஞ்சள், ஈசுவர மூலிவேர், கற்பூரவல்லி, தில்கக்ஷீரணி, வெள்ளறுகு, இவற்றை உலர்த்தி இடித்துச் சூரணம்பண்ணி வஸ்தரகாயம்பண்ணி இந்தச் சூரணத்தை பூப்புடத்துடன் தேகத்துக்கு ஏற்றபடி வேப்பெண்ணெய் கூட்டி உட்கொள்ள குஷ்டங்கள், சவித்ரங்கள், சர்வவிஷக்கடிகள் எல்லாம் தீரும்.

வேப்பம்பட்டை, பேயத்திப்பட்டை, சாரடைவேர், கொன்றைவேர்ப்பட்டை, எருக்கம்வேர்ப்பட்டை, பாற்சோற்றிவேர், வாகைப்பட்டை, பெரும்புல் வேர், பேய்ப்பீர்க்கன்விதை, இவற்றை இடித்து கஷாயமிட்டுக் கற்பூரவல்லிச் சாறு, மணத்தக்காளிச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, சாரடைச்சாறு, கரிசலாங்

கண்ணிச்சாறு, வீழுதுச்சாறு, செருப்படிப்பூண்டுச்சாறு, பெரும்புல்சாறு, தகரைச்சாறு, கட்டுச்சிலந்திச்சாறு , இந்த சாறுகளையெல்லாம் முந்தின கஷாயத்துடன்கூட்டி நல்லெண்ணெய்யாவது ஆமணக்கெண்ணெய்யாவது புங்கெண்ணெய்யாவது வேப்பண்ணெய்யாவது இல்லையேல் ஐந்தெண்ணெய் கூட்டியாவது காயவைத்து நல்ல கிருஷ்ணசர்ப்பத்தின் தலையும் வாலும் அறுத்து நீக்கி, மற்றவெல்லாம் நேக அரைத்துக் கலந்து வாலுளுவைவிதை, விழலரிசி, கார்போகஅரிசி, காஞவாழைவிதை, திரிகடுகு, திரிபலை, வசம்பு, கடுகுரோகணி, கிராம்பு இவற்றை அரைத்துக் கரைத்து வடித்து அப்யங் கனம் செய்ய ஸர்வகுஷ்டமும் தீரும்.

இந்த யோகத்தில் ஸர்ப்பகண்டம் நீங்கலாக ஏனையவற்றுடன் கந்தகம், தாளகம், மனோசிலை கூட்டி வேப்பெண்ணெய்யும் கூட்டி வடித்து, சேருங் கொட்டை, நீரடிமுத்துக்கொட்டை இவைகளின்தைலம் கூட்டி கற்பூரவல்லி, கார்போகஅரிசி, சூரணம்பண்ணிக் கூட்டி உட்கொள்ள குஷ்டம் தீரும். இந்த யோகத்தை அவுஷதம் பண்ணிக்கொள்ளவும்.

மேற்படி யோகத்தைச் சதுரக்கள்ளிபால், கொடிக்கள்ளிபால், இலைக் கள்ளிபால் இம் மூன்றுங்கூட்டி வேப்பண்ணெய் 1-படிக்கு 8-இலொன்று பால்கூட்டி உள்ளே உட்கொள்ள விரோசனமாம். குஷ்டம் தீரும். தடுக்க வேண்டினல் மாற்று மருந்து:—ஆவாரைவிதையை மோரில் அரைத்து நெல்லிக்காயளவு உள்ளே கொள்ளவும். வாந்தியானல் வெல்லமாவது சர்க்கரையாவது உட்கொள்ளவும். நெல்லிக்காயை மோரில் உட்கொள்ள லாம். நாவல் துளிர் உட்கொள்ளவும் தீரும்.

ரசம், வெண்காரம், கந்தகம், திப்பிலி, கோஷ்டம், சந்தனம் இவற்றை கொம்மட்டி மாதுளம்பழச்சாற்றில் அரைத்து உடம்புக்குத் தடவி ஒரு சாமத்துக்குமேல் ஸ்நானம்பண்ண குஷ்டம் சிரங்கு தேமல் இவை தீரும்.

குன்றிமணி, கொடிவேலிவேர், சங்குசுட்டசுண்ணும்பு, மஞ்சள், சேருங் கொட்டை, சேவகனுர்க்கிழங்கு, உத்தாமணிவேர், சிறுகீரைவேர், அட்ட ரைரசம், விளங்கம், மிளகு இவற்றைக் கோமூத்திரம் விட்டரைத்து கரிசலாங்கண்ணிச்சாறு, தேன் கூட்டி உடம்பில் பூச, குஷ்டம் சிரங்கு உடம்புத்தடிப்பு, தேமல் இவை எல்லாந் தீரும்.

அரைப்படி அளவு பிடிக்குமொரு தொட்டி, புங்கமரக்கட்டையில் தோண்டி அந்தத் தொட்டியில் ஒரு செரை பலகரைபோட்டு அரைப்படி எலுமிச்சம் பழச்சாறு வார்த்து வெயிலிலே வைக்கக் கரையும். அந்தப் பலகரை நீறு மிளகு, கொன்றைக்கொழுந்து, செவ்வரலிப்பட்டை, மஞ்சள், வெங் காரம், பாற்சோற்றிவேர், தகரைவிதை, மனோசிலை, காவீஸம் இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றல் அரைத்து இறுத்துச் செப்புக்கிண்ணியில் வெயி லில்வைத்து உடம்புக்கு லேபிக்க குஷ்டம் கஜசர்மாதிகள் தீரும்.

தேங்காய்நெய், கள்ளிப்பால் $\frac{1}{4}$-படி, கெந்தகம், ரசம், தாளகம், மனோ சிலை, துத்தம், துரிசு, வங்காளப்பச்சை மஞ்சள்பொடி இவை காசெடை; இவற்றை அரைத்து தேங்காய் நெய்யில் கலந்து சூரியபுடத்தில் பத்துநாள் வைத்து பிறகு உடம்புக்கு இட, குஷ்டம் சிரங்கு முதலானவை தீரும். தேங்காய் நெய் கிடைக்காவிட்டால் புங்கெண்ணெயைக் கொள்ளவும்.

தாளக பஸ்பம்.—தாளகம், வெண்காரம், எலுமிச்சம்பழச்சாறு விட்டு நேக அரைத்து அதற்கு சாம்பற்பூசிணிக்காய்ச்சாறு படி 2, காடி படி 2, இவற்றை ஒரு குண்டுச் சட்டியில் வார்த்து நார்த்தங்காயளவு சுண்ணும்புக் கரைத்து அந்த சட்டியின் வாய்க்குத் துணி கட்டி மண்பூசி அந்த சீலைமேலே தாளகத்தை அடைபோலே தட்டிவைத்து சட்டியால்மூடி வேகவைக்கவும். அந்தச்சாறு சுவறும்வரை வேகவைக்கவும். இட்டிலிச் சட்டிக்கு வாய்கட்டி மண்பூசி துணிமேல்வைத்து இட்டிலி எப்படி வேகுமோ அப்படி வேகவைக்க தாளகம் சுத்தியாம். அந்தத் தாளகத்தை எடுத்து கற்பூரவள்ளிச்சாறு, அவுரிச்சாறு, ஆடுதீண்டாப்பாளைச்சாறு, மணத்தக்காளிச் சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு, கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, சதுரக்கள்ளி, இந்த மூன்று கள்ளியின் சாறு விட்டரைத்து அடைதட்டி அரசின் சாம்பல், நாயுருவி பலாசு இவைகளில் கிடைத்தவற்றின் சாம்பலை ஒரு குண்டுசட்டியின் அடியிலே நாலுபடி போட்டு அதன்மேலே தாளகத்தை வைத்து தாளகத்தின் மேலே ஒரு சாண் கனம் சாம்பல்போட்டு அமர்த்திச் சட்டியை அடுப்பிலேவைத்து சட்டியின்வாய் மூடாமல் திறந்துவைத்து பன்னிரெண்டுசாமம் எரிக்க தாளகம் வெள்ளைநீறுபோலாகும். பஸ்மத்தைப் பணவெடை திக்தகிருதத்திலே கொடுக்கக் குஷ்டம் தீரும்.

தாளகேஸ்வாரசம்.—தாளகம் காசெடை 20, ரசம் காசெடை 15, கந்தகம் காசெடை 15, இவற்றைக் கலுவத்தில் வைத்து கோழியவரைச் சாற்றில் மூன்றுநாள் அரைத்துப் பின்னர் தாமிரபஸ்பம் காசெடை 10, லோஹபஸ்பம் காசெடை 10 இவைகூட்டி ஒருநாள் அச்சாற்றில் அரைத்துச் சீலைமண் செய்த குப்பியிலடைத்து வாலுகாயந்திரத்தில் ஒருநாள் முறைப்படி எரித்து எடுக்கச் சிந்தூரமாம். பஞ்சகோலம், கார்போகயரிசி, பெருங்காயம், சீரகம், சாரட்டைவேர், பாற்சோற்றிவேர், நிலவாகைவேர்ப் பட்டை இவற்றை உலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணி அந்தச் சூரணத்துடன் செந்தூரம் கூட்டி வேப்பெண்ணெய்யில் உட்கொள்ள, சர்வ குஷ்டமும் தீரும்.

குஷ்டகுடாரரஸம்.—1 பலம் கெந்தகம், 3-பலம் திரிகடுகு, 1 பலம் கொடிவேலிவேர் இவற்றைக் கலுவத்தில் வைத்து பேயத்திப் பால்விட்டு அரைத்து நாலு பணவெடை உருண்டைபண்ணி சாரடை வேர், திரிபலை, பம்பந்துரா, வாலுளுவைவிதை, கரிசலாங்கண்ணி, பாசற்றோற்றிவேர், இருமஞ்சள், நிலவகைவேர்ப்பட்டை, அவுரிவேர், சங்கங்குப்பி, செருப்படிப்பூண்டு, பெரும்புல்வேர், கற்பூரவல்லி, கார்போகயரிசி, இவை எல்லாம் இடித்துச் சூரணம்பண்ணி இவற்றுடன் குளிகை கூட்டி தேனில் உட்கொள்ள, குஷ்டம் காசம் இவை தீரும்.

குஷ்டகேஜரத் தைலம்.—சேருங்கொட்டை, நீரடிவிதை, இவற்றைக் கத்தரித்து ஒரு குடுவையில்போட்டு பாதாளயந்திரத்தில் தைலம் வாங்கவும். பேயத்திக்கொம்பு, வாகைவைரம், வேப்பம்வைரம், கொன்றைக் கொம்பு, சதுரக்கள்ளிவேர், கொடிக்கள்ளிக்கொம்பும் வேரும், இலைக் கள்ளிக்கொம்பும் அதன்வேரும், வீழிக்கொம்பு, பெரும்புல், புங்கம்வேர், அழிஞ்சில்கொம்பும் வேரும் இவற்றைச் சிறுக நறுக்கி மிடாவில் அடைத்து

பாதாளயந்திரத்தில் தைலம் வாங்கி அந்த நீரடிமுத்துத் தைலமும் இந்தப் பேயத்தி முதலானவற்றின் தைலமும் கூட்டி மேற்கண்ட குஷ்ட குடரஸத்தில்கண்ட சூர்ணத்துடன் தைலம் கலந்து உட்கொள்ள குஷ்டங்கள் தீரும்.

வெள்ளாடு, செம்மறியாடு, ஆனே, குதிரை, கழுதை, ஒட்டகைகளின் மூத்திரம் இவை 4 படி, கரிசலாங்கண்ணிச்சாறு 1 படி, செருப்படைச் சாறு 1 படி, வீழிச்சாறு 1 படி, கர்ப்பூரவல்லிச்சாறு 1 படி, நல்லெண்ணெய் 1 படி, புங்கெண்ணெய் 1 படி, வேப்பெண்ணெய் 1 படி, பேயத்திப் பால் ½ படி, கள்ளிப்பால் 1 படி, எருக்கம்பால் ½ படி, இவைகளைக்கூட்டி, கொன்றைக்கொழுந்து, கொடிவேலிவேர்ப்பட்டை, ஒட்டறை, கார்போக யரிசி, இவற்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து அதில் ரஸம், கந்தகம், தாளகம், மனேசிலே, துத்தம், துரிசு, வங்காளப்பச்சை, வத்ஸ நாபி, அலரிவேர்ப்பட்டை, நிலாவாரைவேர்ப்பட்டை, ஒவ்வொன்றும் சூரணம் செய்து காசெடை எடைபோட்டு சூரியபுடத்தில் வைத்து உடம்புக்குப் பூச, குஷ்டம் பதினெட்டும், சருவ கடிவிஷங்கள், சிரங்கு, தேமல், படர் தாமரை மற்றும் உண்டான உடம்புவீக்கங்கள் தீரும்.

சவித்ரம் (வெள்ளைக்குஷ்டம்).—இது கிலாசம் தாருண மென இரு வகை. இவற்றில் துர்நீர்பாயாது. மூன்று விதமுண்டு. பூர்வ ஜன்ம பாப விசேஷசத்தினுலும், விருத்த ஆஹராபானதிகளினுலும், வாதாதிதோஷங் கள் பிரகோபித்து சப்ததாதுக்களைத்தாக்க அதனுல் சர்மம் விவர்ணத்தை அடையும்.

வாதஜம்.—உடம்பு கறுத்தாவது நீலவர்ணமாகவாவது சாம்பல்வர்ண மாகவாவது காண்பிக்கும்.

பித்தஜம்—செந்தாமரைப்பூ இதழ்வர்ணமாகவாவது செப்புத்தகடு வர்ணமாகவாவது தேகத்தில் காண்பிக்கும். அளவுடன் எரிச்சல் உண்டாம். மயிர் உதிர்ந்துபோம்.

சிலேஷ்மஜம்—தும்பைவர்ணம் போலவாவது வெண்தாமரைவர்ணம் போலவாவது வெண்மையாய்க் காணப்படும். தடித்துத் திமிர்த்துத் தின வுடன்கூடி இருக்கும். மயிர் உதிர்ந்துபோம்.

இப்படியே இரத்த - மாம்ஸ - மேதஸிலேயும் உற்பத்தியாகும் என அறியவும்.

சவித்ரம், வர்ணத்தினுல் வெளுப்பு சிவப்பு என இருவகையாம்.

சாத்தியாஸாத்தியக்குறிகள்.—இரத்தம், மாம்சம், மேதஸ் இவை ஒன்றைவிட மற்றது கஷ்ட சாத்தியம். மயிரை வெண்மையாகச் செய்யா மலும் உதிராமலும் ஒன்றேடொன்று கூடாமலும் புதியதாய் வந்திருந் தால் அவை குணமாம். இவற்றிற்கு வேறுபட்டுள்ளவை அசாத்தியம். மேட்டிரம் விருஷ்ணம் கை கால் உதடு இவற்றில் உண்டானவை அசாத் தியம் என அறியவும்.

குஷ்டரோகக்காரனேடு எப்போதும் கூடி வார்த்தை சொல்லிக்கொண்டு இருந்தாலும், குஷ்டக்காரன் தொட்டுத்தீண்டுதலாலும், அவன் மூச்சு படுதலா

லும், சகபோஜனம் பண்ணுதலாலும், ஒருபடுக்கையில் படுத்தலாலும், அவன் போர்வையைப் போர்த்திக்கொள்ளுதலாலும், அவனுடன் சம்போகம் செய்த லாலும் குஷ்டம்பிடிக்கும்.

வெண்குஷ்ட சிகிச்சை.

அவுரிச்சாறும் நெய் தேனும் கூட்டி உட்கொள்ள பதினைந்து நாட்களுக் குள்ளே சவித்திரம் தீரும்.

அவுரிச்சாறும், நொச்சிச்சாறும், நெல்லிக்காய்ச்சாறும், கரிசலாங் கண்ணிச்சாறும், சங்கங்குப்பிச்சாறும், தான்றிப்பட்டைச்சாறும், வேப்பெண் ணெய்யும் கூட்டி பேயத்திப்பட்டை, கார்போகயரிசி இவற்றைச்சூரணம்பண்ணி கூட்டி உட்கொள்ள சவித்திரகுஷ்டம் தீரும்.

கந்தகம், ஒட்டரைப்பொடி, மஞ்சள், கார்போகயரிசி, பேய்ப்பீர்க்கம் விதை ; இவற்றை அரைத்து வெண்ணெய்கூட்டிக் குடிக்க. குஷ்டம் தீரும், சிரங்குகள் தீரும்.

ஆரோக்யவர்த்தினி ரஸம்.

காவீஸம், ரஸம், கெந்தகம் இவைகளைச் சரிகூட்டி துளசிச்சாறுவிட்டு அரைத்து மூசைக்குள் வைத்து மேல்மூடிவைத்து மண்ணுக்குள்ளே வைத்து வாலுகாயந்திரத்தில் ஒரு சாமம் முறைப்படி எரித்து எடுத்து கலுவத்தில் வைத்து அவுரிச்சாறு கரிசலாங்கண்ணிச்சாறுகளை விட்டு அரைத்துக் கடலை போலே உருண்டைபண்ணி, அவுரிசமூலம், திரிபலை, கார்போகயரிசி, லோக பஸ்பம், கொன்றையின்பட்டையும் கொழுந்தும், சங்கங்குப்பி; இவற்றையெல் லாம் சூர்ணம் செய்து வெந்நீரில் உட்கொள்ள, சவித்திரகுஷ்டம் தீரும்.

ரஸம் 2 காசெடை, கெந்தகம் 10 காசெடை, இருமஞ்சள், திரிகடுகு கொடிவேலிவேர், சீரகத்துவயம், அரப்பொடி, அழிஞ்சில்வேர் ; இவற்றைக் கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு அரைத்து கரிசலாங்கண்ணிச்சாறு, அவுரிச் சாறு, குரட்டை சமூலச்சாறு, மாவிலங்கச்சாறு, சங்கங்குப்பிச்சாறு ; இவை சரிகூட்டி முன்சொன்ன கல்கமும் கூட்டி வெள்ளை வெங்காயமும் சேராங் கொட்டையும் காரெள்ளெண்ணெய்யும் கூட்டிக் காய்ச்சி தைலம் இறக்கி வைத்து உள்ளுக்கும் கொண்டு மேலுக்கும் இட குஷ்டம், சவித்திரம், ஊதல்விஷம், குன்மம், கிருமிகள், சர்வ வாதங்கள் தீரும்.

கிருமிகள்.

கிருமிகள் பாஹ்யக்கிருமிகள் ஆந்தரக்கிருமிகள் என இருவகைப்படும். அன்றியும் உற்பத்தியாகும் முகாந்தரங்களைக்கொண்டு அவை நான்கு வகைப்படும். அவையாவன : வெளிமலங்கள், கபம், இரத்தம், குடல் மலங்களாம்.

சிலேஷ்மத்திலே 7, ரத்தத்திலே 6, மலத்திலே 5, ஆக 18-ம், மேலும், உள்ளுமாக 20 வகைப்படும்.

பாஹ்யக்கிருமிகள் அழுக்குத்துணி, தலைமயிர்ச்சிக்கு, வியர்வை, உடம்பு நாற்றம் இவற்றால் உற்பத்தியாகும். எள்ளளவில் இருக்கும்.

அனேக கால்களுடன்கூடி சூக்ஷ்மமாக இருக்கும். சில தலைபெருத்தும் இருக்கும். சிலைப்பேறல் உடம்பில் தடிப்பு, தலையில்வெடிப்பு, தினவு, சிரங்கு முதலான ரோகங்கள் உண்டாகும்.

சிலேஷ்ம கிருமிகள்.—மதுரான்னம், குடம், க்ஷீரம், ததி, அன்யமாயிருக்கிற மாம்ஸங்களால் சிலேஷ்மம் பிரகோபமாகி ஆஹாரத்தில் கிருமிகள் உற்பத்தியாகும். ஆமாசயத்திலே கீரிப்பாம்பு மற்றும் சிகப்பும் வெளுப்புமான புழுவும், நெல் ஊசிபோல் திமிர்ப்புழுவும் உண்டாகும். மார்பிலே பல்லிடுக்கிலே மூக்குக்குள்ளே மண்டையிலே காதிலே சூக்ஷ்மங்களாக ஜந்துக்களுண்டாகும். இவை ஏழு விதம். அவையாவன : 1. பெரும்பூநாகக்கிருமி, 2. நீர்ப்பாம்புக்கிருமி, 3. நெல்முளைக்கிருமி, 4. சன்னநீளக்கிருமி, 5. அணுக்கிருமி, 6. வெண்கிருமி, 7. செங்கிருமி. அதனால் அரோகம், வாய்நீரூறல், தலைநோதல், பல்நோதல், மார்புநோதல். ஏப்பம், வாந்தி, சுரம், வயிறுயூதல், உடம்பு இளைத்தல், தும்மல், பீநசமாக மூக்கில் நீர்பாய்தல் என்பவை உண்டாகும்.

இரத்தக்கிருமிகள் ஆறு விதம். அவையாவன.—1. அணுக்கிருமி, 2. வட்டக்கிருமி, 3. மிகசூக்ஷ்மக்கிருமி, 4. காலில்லாக்கிருமி, 5. செங்கிருமி, 6. தோற்றுக்கிருமி, 7. நாடியிரத்தத்தில் கிருமிகளுண்டாகும். மதுராஹாரத்தினாலே உற்பத்தியாகும். அப்போது கிருமிகள் கால்களில்லாது சிவந்தும் சூக்ஷ்மமாகவுமிருக்கும். கண்ணுக்குப் புலப்படமாட்டா. மயிரை வெட்டும். கைகளிலும் உடம்பிலும் தினவை உண்டாக்கும்.

மலக்கிருமிகள்.—புதுதான்யம் சாகம் மாம்ஸம் இவைகளை புசித்தால் மலமதிகமாகும். பக்குவாசயத்தில் புழுவுண்டாகும். அவையாவன :— 1. கருமேகம், 2. மகேருகம், 3. சவுரசம், 4. சுலூனம், 5. லேலிகம் என்பனவாம். அதனால் வயிறு ஊதல், வாந்தி, உப்புசம், நாற்றம், வயிற்றுக்கழிச்சல், வயிறுநோதல், மலபந்தம், உஷ்ணம், உடம்பு இளைத்தல், வெளுத்துப்போதல், மயிர்சிலுத்தல், ஆசனத்திலே புழுக்கள் தோன்றல், இவையுண்டாம். இரவில் நித்திரைவேளையில் வெளியில் புறப்படும். இவற்றை வாந்தியிலேயும் அவைவெளியாகும். சுரம் முதலிய ரோகங்கள் உண்டாகும்.

கிருமி சிகிச்சை.

பலாசவிதை, வேப்பந்தழை, எலுமிச்சந்தழை, இவற்றை காடியிலே வேகவைத்து அந்த நீரை வடித்து அதனுடன் பலாசுக்கொட்டை ஒட்டரை, யவக்ஷாரம், விளங்கம் ; இவற்றை அரைத்துக் கலக்கிக் குடிக்க திமிரி, கீரைப்பாம்பு முதலான புழுக்களும் விழும்.

வேப்பங்குச்சி, பெருங்காயம், திப்பிலி, விளங்கம், யவக்ஷாரம், கழல் பருப்பு, கொடிவேலிவேர், வெள்வெங்காயம் ; இவற்றைப் பிரண்டைச் சாற்றில் அரைத்து நல்லெண்ணெய்யில் புரட்டி விழுங்க வயிற்றிலுள்ள கிருமிகளெல்லாம் தீரும்.

இந்தக் கல்கத்தை காடிநீர், எலுமிச்சம்பழச்சாறு இவற்றில் கூட்டிக் குடிக்க கிருமிகள் தீரும்.

மூன்று காசெடை ஒட்டரையைக் காடியில் காய்ச்சி முன்சொன்ன கல்கம் கூட்டிக் குடிக்க கிருமிகள் தீரும்.

பலாசம்விதை, காக்கணம்வேர், யவக்ஷாரம், கழல்பருப்பு, இந்துப்பு, பெருங்காயம், பஞ்சகோலம், விளங்கம், வசம்பு; இவற்றைப் பிரண்டைச் சாற்றில் அரைத்து நல்லெண்ணெய்யாவது தேனுவது துளசியாதிகண கஷாயத்திலாவது கொடுக்க விரேசனமாகும். கிருமிகளும் விழும்.

விடத்தேரிவேரும் இலையும், பலாசம்பட்டையும், துளசியாதிகணம், செம்மணிச்ச வைரமும் இலையும், காட்டுமுருங்கைப்பட்டையும், நாட்டு முருங்கைப்பட்டையும், மூங்கில்தழையும், பிரப்பங்கொழுந்தும், கடுக்காய், கொடிவேலிவேரும் பிரண்டையும், எலிச்செவிப்பூண்டும், கொம்புப்பாகல் தழையும் ஆகியவற்றில் சாறுஉள்ளவற்றில் சாறு வாங்கி, சாறு இல்லாத வற்றைக் கஷாயமிட்டு அக்கஷாயத்தையும் சாற்றையும் ஒன்ருகக்கூட்டி, பால் நெய் சேர்த்து, பஞ்சகோலம், மிளகு, வசம்பு, பலாசுவித்து, பெருங்காயம், வெள்ளைவெங்காயம், கடுக்காய், திரிக்ஷாரம், விளங்கம், கழற்பருப்பு; இவை கூட்டி வடித்து நக்கவும். கிருமிகளும் விழும். இந்த யோகத்தை ஆமணக் கெண்ணெய்யும் சதுரக்கள்ளிப்பாலும் கூட்டி வடித்து நக்க விரேசன மாகும்.

குறிப்பு.—கீரைபாம்பு, திமிரிப்புழுவுக்கு இந்த ஆமணக்கெண்ணெய். யோகத்துக்குச் சரியில்லை.

வயிறு அதிகமாகக் கழிந்தால்.—ஆவாரைவேர்ப் பட்டையை மோரில் அரைத்துக் குடிக்க வயிறு நிற்கும். நெல்லிமுள்ளியை மோரில் கொடுக்க வயிறு நிற்கும். சர்க்கரையைக் கொடுக்க வாந்தி தீரும்.

ஆடுதீண்டாப்பாளையை யிடித்து வயிற்றின்மேல் கட்ட புழு விழும். சேருங்கொட்டையும் பலாசம்விதையும் யவக்ஷாரமும் ஒக்க இடித்துப் புளியில் புரட்டி உட்கொள்ள, புழுக்கள் விழும். பொருந்தின பேருக்குக் கொடுக்கவேண்டியது.

விஷாரி ரஸம்.—(1) ரஸம், கந்தகம், நேர்வாளம், இவை ஒவ்வொன்றும் காசெடை 7, நாபி காசெடை 2, இவற்றைக் கலுவத்தில் வைத்து எலிச்செவி, நொச்சி இவற்றின் சாற்றில் அரைத்துக் குளிகை செய்து கொடுக்கலாம்.

(2) பலசாம்விதை 90, கழல்பருப்பு 95, சாதிக்காய் 92, விளங்கம் 92, யவக்ஷாரம் 95, பெருங்காயம் 95, பஞ்சகோலம் இவைகளை யெல்லாம் வேப்பம்பட்டை, மூங்கில்தழை, விடத்தேரியிலை, துராய்க்கொம்பு, பாகலிலை, இந்தச் சாறுகளில் அரைத்து மாத்திரை செய்து கொடுக்கவும்.

(3) பலாசுகாரம், ரசம், கெந்தகம், நாபி ஒரு பங்கும், நேர்வாளம், பலாசம் இரண்டு பங்கும், தாப்யம் (?) மூன்று பங்கும் கூட்டி முன்னே சொன்ன சாறுகளில் அரைத்துக் கடலைபோலே உருண்டை பண்ணி உலர்த்தி, வேப்பலகு, மூங்கில்தழை, விடத்தேரியிலை, பஞ்ச கோலம், வெள்வெங்காயம், பிரப்பங்கொழுந்து, இவற்றைக் கஷாயமிட்டு உட்கொள்ள, ஸர்வமான கிருமிகளும் விழும். இவை விஷாரி இரசங்கள்.

ஐந்தாம் அத்தியாயம்.

வாத பித்த சிலேஷ்ம ரோகங்கள் :—வாதம் 80—கால்நகம் முதல் உச்சந்தலைவரை வாதஸ்தானங்கள். வாதத்தின் பெயர்கள் : 1. பாதலஹம், 2. பாதக்ஷேபம், 3. பாதஹரிஷம், 4. சீதகண்டு, 5. புச்சாவர்த்தம், 6. வாதகாஞ்சம், 7. ஸுப்திவாதம், 8. காளாயகாஞ்சம், 9. ஜம்பூகசிரஸ், 10. ஊருஸ்தம்பம், 11. கிருத்திரசி, 12. சுரோணிதம், 13. அபதந்திரம், 14. ஜகனுவர்த்தம், 15. துனி, 16. பிரதிதுனி, 17. முடவாதம், 18. ஆத்மானம், 19. பிரத்யாத்மானம், 20. நாளாவர்த்தம், 21. வஸ்திசிரோவாதம்(?), 22. மேட்டிரக்ஷயம், 23. ஆந்திரவிருத்தி, 24. சுரோணிசூலை, 25. நாபிஜாருகம், 26. அஷ்டிலை, 27. ப்ரத்யஷ்டிலை, 28. ஹ்ருதயாவர்த்தம், 29. ஸ்தனருக், 30. பக்ஷகாதம், 31. பக்ஷருக்வாதம், 32. உதாவர்த்தம், 33. தனுஸ்தம்பம், 34. அந்தராயாமம், 35. தண்டகவர்த்தம், 36. காராக்ஷேபம் (?), 37. பாஹ்யாயாமம், 38. பிராணுயாமம், 39. ஆக்ஷேபகம், 40. ஸந்யாஸம் (?), 41. ஆட்டயவாதம், 42. அபிந்யாஸம், 43. க்ருதிரசி, 44. விஸ்வபித்தம், 45. ஜ்வரலீடம், 46. அவபாஹுகம், 47. பாஹுசோஷம், 48. அம்ஸாவர்ணம், 49. உக்ராக்ரகம், 50. ஊஷ்மபாகம் 51. அயாஸாவர்த்தி, 52. அதிகாபாதகம், 53. விஸ்மரியகம், 54. களாவர்த்தம், 55. அர்த்திதம், 56. தொனிவிர்ச்சின்னம், 57. ஆஸ்யாக்ஷேபம், 58. அனுஸ்தம்பம், 59. ஸ்வாக்தகவாதம், 60. திர்யக்பிராந்தி, 61. ஸ்வரோபகாவாதம், 62. திர்யக்ஸ்தம்பம், 63. ஆவ்ருதம், 64. இரத்தவாதம், 65. ப்ருவாடோபகம், 66. பாதிரியம், 67. கர்ணசூலம், 68. சீதவாதம், 69. ஊர்த்வமுகம், 70. அதோமுகம், 71. பாதோபவாதம், 72. சிதிலாவாதம், 73. சர்வாங்கம், 74. சிரோசால்யம், 75. காராக்ஷேபம், 76. மனோவித்திவாதம், 77.   , 78.   , 79. கம்பீரவாதம், 80. பரிஸ்போடம், ஆக 80.

1. பாதலஹ வாதம்.

பாதசாரியாக ஸஞ்சரித்தல், சீதலமான வஸ்துக்களைப் புசித்தல், பசியுடன் இருத்தல்(?) இவற்றால் கால்களில் வாதம் வரும். உள்ளங்கால் நோகும். சிலநாள் மேல் துடிக்கும். கால் திமிர்த்து உள்ளங்காலிலே சேறு பற்றி இருக்கிறப்போலே பாரமாக இருக்கும். கால் அசந்துபோம். பித்தம் கூடின காலில் எரிச்சல் உண்டாகும். சிலேஷ்மங் கூடினால் காலில் தினவு உண்டாகும். கால், பருக்கைக் கல்லில் மிதிக்கின்றது போல் அதிகம் நோகும். வெயிலேறினபின் நடக்க முடியும். இதற்கு **பாதஹர்ஷ**மென்று பெயர்.

2. பாத க்ஷேப வாதம்.

ஸர்வமான தாதுவிலே முன்னே சொன்ன திரவியங்களை மறுபடியும் மறுபடியும் புசிக்கின் ஸர்வவாயு தாதுவிலும் பரவும். அப்போது முன் சொன்ன பாதஹர்ஷந் தானேவிருத்தியாகி நாளடைவில் பாதக்ஷேப

வாதத்தை வருவிக்கும். கால் கூடிக்கொள்ளும். திமிர்த்துப் பாரமாக இருக்கும். கால் நடுக்கும். கால் வெளியே நடக்கவிடாது. சிறிது தூரம் நடக்கும்வரை நோகும். பின்னர் நடைகொள்ளும்.

3. பாத ஹரிஷ வாதம்.

வாத சிலேஷ்ம பிரகோபமான திரவ்யங்களை புசித்தால், வாத சிலேஷ்மம் விருத்தியாகி கால்கள், உள்ளங்கால்கள் நோகும். கால் அசந்துபோம். நடக்கும்போது கால் மடிந்து போகும்.

4. சீத கண்டு வாதம்.

சீதாதி வஸ்துக்களைப் புசித்தாலும் அதிகமான உஷ்ணத்திரவ்யங்களைப் புசித்தாலும் சிலேஷ்ம வாதம் பிரகோபமாகும். அப்போது உள்ளங்கால் குதிகால் இவற்றில் தினவு உண்டாகும். எப்போதும் சொறியத்தோன்றும். சொறிந்தால் அதிகத் தினவு எடுக்கும்.

5. புச்சாவர்த்த வாதம்.

தண்ணீரிலும் பனியிலும் சஞ்சரித்தவருக்கும், வாஹனாதிகளில் ஏரி யாடி நடப்போருக்கும், அதிகபாரஞ் சுமப்பவருக்கும், அகாலத்தில் நித்திரை செய்பவருக்கும் இவ் வாதம் வரும். பாதங்களிலே சுருக்கென்று நரம்பு துடித்துத் தலைவரை எறும்பு ஊறுகிறதுபோல் ஏறும். காலும் உடம்பும் திமிர்த்து உடம்பு பாரித்துக்கொண்டு உடம்பில் நரம்பு துடிக்கும். உடம்பும் கை காலும் குளிர்ந்து வியர்க்கும்.

6. வாதகஞ்ச வாதம்.

தூர வழி நடந்தவனுக்கும், தேகத்துக்கு ஏற்காத வஸ்துவை புசித்த வனுக்கும் கால்கரடுகள் வீங்கி நோகும்.

7. ஸுப்தி வாதம்.

அகாலத்திலே புசிப்பவனுக்கும், சிலேஷ்மப் பிரகோபத் திரவியத்தை புசிப்பவனுக்கும், அகாலத்திலே நித்திரை பண்ணுபவனுக்கும், தேகத் துக்கு ஏற்காத வஸ்துவைப் புசிப்பவனுக்கும், கணுக்காலிலே முழங்காலிலே வாதம் வரும். கால் அதிகம் நோகும். வீங்கும். கால் நீட்ட மடக்க எடுக்க ஓட விடாது. நடுங்கும்.

8. களாய காஞ்ச வாதம்.

களாயகஞ்சவாதம் சீதகாலத்தில் சீதவஸ்துவை அகாலத்திலே மூன்று நாலு தரம் புசித்தல், பகலுமிரவும் நித்திரை செய்தல் இவற்றால் உண்டாகும். முழங்காலில் ஆணி அடித்தாற்போல் கீல் வீங்கிப்போம். நடக்குங்கால் தடுமாறி கனத்து வீசி நடக்கவொட்டாது. முழங்கால் கீல் விட்டுப்போவதுபோல் இருக்கும்.

9. ஜம்பூகசிரோ வாதம்.

சீதத்திரவ்யம், சிலேஷ்மதிரவியம், க்ஷாரதிரவியம், குரு திரவியம், உஷ்ணதிரவியம், அத்யந்தமாத்திரவியம், பிண்ணாக்கு இலைக்கறி இவற்றைச் சீதகாலத்தில் உண்ணல், அதிவியாயமம் செய்தல், பகல் நித்திரை செய்

தல் இவற்றுல் முழங்கால்களிலே வாதம் வரும். முழங்கால் வீங்கும். கால் மரத்துப் பாரித்து இருக்கும். கால் நடுக்கும். கால் அசைய எழ இருக்க நீட்ட முடக்கமாட்டாது. கால் விலங்குபோட்டாற்போல இருக்கும். ஒருகால் வீங்கும். ஒரு கால் வற்றும். சுரம் வரும். இரவு பகல் ஒருதரம் நோகும். ஒருதரம் நோதல் இல்லாது இருக்கும்.

10. பாதோபகாத வாதம்.

அதிசீக்கிரமாக தூரவழி நடத்தல், சீதவஸ்துவை, சிலேஷ்மப் பிரகோபத்திரவியத்தை, குருவஸ்துவை, அளவுமீறி புசித்தல், மலமூத்திரம் அடக்கல், ஸ்திரீசம்போகம் அதிகமாகச் செய்தல், தக்க வேளையில் நித்திரை யின்மை, இவற்றுல் காலில் வாதம் உண்டாகும். உள்ளங்கால் கால் விரல்கள் வீங்கும். கால் அசந்து போகும். எறும்பு ஏறுகிறுப்போலே ஏறும். கால் திமிர்த்துப் பாரித்து இருக்கும். கால் நரம்பு துடிக்கும். அதிரும். கால் நீட்ட மடக்க நடைகொள்ள இயலாதுபோகும். அசந்துபோம். இந்த வாயு, வாத பித்த சிலேஷ்மம் மூன்றுலும் உண்டாகும்.

11. ஊருஸ்தம்ப வாதம்.

இடையெலும்பு, தொடை இவற்றில் நோதலுண்டாகும். நடுத்தொடை அசந்துபோகும். குனிய நிமிர ஒட்டாது. தொடை அசைய முடியாது. தொடை இடை எலும்புக்குள்ளும் தும்பி குடைதல்போல் நோகும். வீங்கும். நடக்கிற போது தொடை நடுங்கும். அசந்து கால் தடுமாறும். கால் கனமாகப் பாரித்து இருக்கும். நோதல் உண்டாகும்.

12. கிருத்திரசி வாதம்.

சுரம், வாந்தி, அரோசகம் உண்டாம். அடிமுதுகு, குதிக்கால் விரலிலிருந்து அரை வரையும் திமிர்த்து இருக்கும். நரம்பிசைய வாங்கும். ஒரு கால் ஒரு காலை வாங்கி இப்படி மற்றெர் கால் வாங்கும். உஷ்ணமுள்பட இசிவு வாங்கும்.

13. சுரோணித வாதம்.

விருத்தமான அன்னத்தைப் புசித்தல், நித்ரைவேளையில் நித்திரை செய்யாதுவிடல், அதிசம்போகம்செய்தல், அதிக வியாயாமம் செய்தல், இவற்றுல் வாதாதி தோஷம் பிரகோபித்து ரத்ததாதுவிலே பரவ விரல் தொடங்கி நடுமுழங்கால், கணுக்கால் இவ்விடங்களில் இரத்தம்கட்டி, கால் சந்து இவற்றில் வீங்கும். இரண்டு நாள் ஓர் இடம் வீங்கி அவ்விடம் வற்றி பின்னர் வேறேரிடம் வீங்கும். இப்படி வீங்குவதும் வற்றுகிறதுமாக இருக்கும். சுரம் வரும். தினவு, எரிச்சல், நோதல் கூடி நரம்புகள் துடிக்க கால் கை நீட்ட முடக்க எழுந்திருக்க முடியாமல் பாரித்து சருவாங்கமும் வீக்கம் உண்டாம். அது சிவந்து அல்லது வெளுத்து அல்லது கருகி இருக்கும். இரவு பகல் ஒரு கால் நொந்தும், ஒரு கால் நோவில்லாமலும் இருக்கும்.

14. அபதந்திர வாதம்.

வாதசுரோணிதத்துக்குச் சொன்ன அபத்யங்களினுலே அபதந்திரகம், அபதானகம் இந்த இரண்டு முண்டாம். நொடியிலே எலும்புக் குள்ளே நோவு குடைந்தால் அபதானகம்.

15. ஜகனுவர்த்த வாதம்.

அதிவியாயாமம், சீதவஸ்து, சிலேஷ்ம பிரகோபத் திரவியம், கந்தமூல பலாதிகள், மச்சமாம்சங்கள் இவற்றைப்புசித்தால் ஜகனசந்தியிலே வாய் பிரகோபிக்கும். முதுகெலும்பில் அதிகம் நோகும். உடம்பு திமிர்த்துப் பாரித்து அசையவிடாது. உடம்பு குளிர்ந்து வியர்வையுடன் இருக்கும்.

16. துனி வாதம்.

பீசத்திலே உற்பத்தியாகி மேட்டிர துவாரம், யோனித் துவாரம், ஆசனம் இவ்விடங்களில் பிரவேசித்து, மலமூத்திரங்களை அடைத்து, மூத்திரபீசத்திலே குத்தி, நோதல் செய்யும்.

17. பிரதிதுனி வாதம்.

பக்கவாசயத்திலே உற்பத்தியாகும். ஆசனம், யோனி, மேட்டிரம் எங்கும் வியாபிக்கும். மலம் மூத்திரம் முதலியவற்றின் வேகங்களைத் தடை செய்யும். நாபிக்குக் கீழும் பக்குவாசயத்திலும் குத்தி நோகும். பக்குவாசயத்தில் வாழைக்காய்போல திரண்டு இருக்கும். ஒரு கால் கத்திக்கொண்டு வயிற்றுக்குள் இரைச்சலுடன் புரளும்.

18. மூடக்கு வாதம்.

குருதிரவியங்களைப் புசிப்பதால் நாபிக்குக் கீழே உற்பத்தியாகும். மலத்தை வெளிவிடவொட்டாமல் கட்டிக்கொண்டு வயிறு ஊதி மந்தித்துக் கொள்ளும். கீழ் வயிறு இரையும். கீழ் வயிறு முள்வைத்துக் கட்டினுப் போலே குத்தி நோகும். மூத்திரத்தையும் கட்டிக்கொள்ளும். இது குணமாகாது.

19. ஆத்மான வாதம்.

ஆமாசயத்திலே வாயு பிரகோபித்து வயிறு இரையும். வயிறு நோகும். மிடாப்போல ஊதும். நிமிர வொட்டாது செய்யும்.

20. பிரத்தி யாத்மான வாதம்.

ஆமாசயத்திலே வாதம், சிலேஷ்மம், பிரகோபித்து வயிறு ஊதும். தொட்டுப் பார்த்தால் கல்போலே இருக்கும். கொட்டாவிவரும் வாந்தியாகும்.

21. நாளாவர்த்த வாதம்.

ஸம்போக காலத்திலே இந்திரியத்தை நிறுத்தல், ஜலத்தை விடாமல் நிறுத்தல், இவற்றால் மேட்டிரதுவாரத்தில் இது உண்டாகும். மேட்டிரதுவாரம் நோவுடன் கூடி இருக்கும். மூத்திரம் தாரையாக விடாது.

22. வஸ்திசிரோ வாதம்.

உஷ்ணமான வஸ்துவைப் புசித்தல், க்ஷாரங்கள், சுஷ்கசாகங்கள், தாள்கள், மாமிசங்கள், நல்லருசியில்லாத வஸ்துகளைப் புசித்தல், திரவத்தினால் அதிக சம்போகம் செய்தல், உஷ்ண காலத்திலே வழி நடந்து சஞ்சரித்தல், பசி தாகங்களை அடக்குதல், மூத்திர சுக்கிலத்தை நிறுத்தல், இவற்றால் கீழ் வயிற்றிலும் யோனிமேட்டிரத்துவாரங்களிலும் வாயு ஏற்படும்.

மெள்ள மெள்ள சிறுகச் சிறுக ஜலம் விடும். மேட்டிரம், யோனி இவற்றில் ரத்தம் புறப்படும். கீழ்வயிறு துடிக்கும். நோகும். வீங்கும். கீழ்வயிறு, மேட்டிரம், யோனித்துவாரம் இவற்றில் எரிச்சல் உண்டாகும். கீழ் வயிறு கனத்தும் இருக்கும்.

23. மேட்டிர க்ஷய வாதம்.

உஷ்ணமான திரவியத்தைப் புசித்தல், அதிகமாக போகம் பண்ணுதல், அதிகதூரம் நடத்தல், மேட்டிரத்திலே பித்தவாதம் பிரகோபமாகி மேட்டிரத்தில் எரிச்சல் உண்டாகும். அது துடிக்கும். பாரித்துக் கொள்ளும். இளம்பாமல் இருக்கும். வீங்கிக்கொள்ளும். சம்போக காலத்தில் யோனிக் குள்ளே அசந்துபோகும்.

24. மனோவிருத்தி வாதம்.

பாதசாரியாக உஷ்ணகாலத்திலே திரிதல், பயசோகமுண்டாதல், பசி வேளைக்கு அன்னபானம் பண்ணுமை, லவணதிக்ஷாரதிரவியத்தைப் புசித்தல், அதிக சம்போகம், உஷ்ண திரவியத்தை உஷ்ணமான மாமிஸங்களைப் புசித்தல் அரோசகமான திரவியத்தைப் புசித்தல், எப்போதும் நெருப்புக்காய்தல், வெயிலிலே சஞ்சரித்தல் இதனுல் வாயுப் பிரகோபிக்கும். ஆஸனம், வஸ்தி நாபி இவற்றின் கீழும் மேலும் அரை இடுப்பு, தொப்புளைச் சுற்றிய இடம், இவற்றில் நோகும். இந்த வாயு புருஷர்களுக்கும் வரும். அப்போது நாபிமூலத்திலே நோதல் அதிகமாகக் காணும். ஸ்திரீகளுக்கு விசேஷமாகக் காணும். தொப்புளுக்குக் கீழாகக் கர்ப்பாசயதத்திலே வாயு பிரகோபிக்கும். சூதககாலம் வந்தவுடனே நோதல் உண்டாகும். சூதகமான ஒரு நாள் இரண்டு நாட்களில் மிகவும் நோகும். நோவுண்டானவுடன் ரத்தம் அதிக மாகக் காணும். சூதக ஸ்நானம் பண்ணின ஓரிரு நாட்களுக்குள்ளே நிற்கும். சில பேருக்கு எப்போதும் சிறுக நொந்து சூதக காலத்திலே நோகும். நடு முதுகு, அரை, தொடை இவற்றில் அதிகம் நோதல் காணும். சுரம் வரும். வாந்தியாகும். அன்னம் இறங்காது. மயக்கம், தலைநோய் இவை காணும். இரண்டு அல்லது மூன்று மாதம் கற்பம் நிற்பது போலே நின்று கர்ப்பலக்ஷணமுண்டாயிருந்து அதன் பின்னர் சூதக முண்டாம். உடம்பு நோதலு முண்டாயிருக்கும்.

25. ஆந்தர பித்த வாதம்.

திரவவன்னங்கள், குருபோஜனம், சீத்திரவிய போசனம் வழுவழுப் பான பல மூலகந்தாதிகள், அபூபம், பச்சைமாவு, ததி, மச்சமாம் சாதிகள் இவற்றைப் புசித்தால் இதனுல் வாயு பிரகோபித்து எப் போதும் வயிறு இரையும். வயிறு ஊதும். மேட்டிரத்துக்கு மேலாக இடதுபுறம், வலப்புறம் திரும்ப விடாது. வாந்தியாகும். சுவாஸம், மயக்கம் உண்டாகும். மலஜலம் கட்டும்.

26. சுரோணித சூலை வாதம்.

முன்னே சொன்ன அபத்தியத் திரவியங்களினுலே சுரோணிதசூலை வாயு உண்டாம். இடுப்பு, ஆசானப்பலகை, எலும்பில் நடுமுதுகில்

நோதல், நடக்க முடியாமை, இடுப்பு குடைதல், குனிய நிமிர விடாமை, மலஜலக்கட்டு, தொப்புள், தேலே நோதல், வாயிலெடுத்தல், வயிறு ஊதல், தாகம் இவை உண்டாகும். உடம்பு எரியும். தொடை நடுங்கிக் குளிரும். நடக்கிறபோது நடுக்கம் உண்டாகும்.

27. நாபிஜாருக வாதம்.

குளிர்ந்ததண்ணீர், சீததிரவியம், குருபோஜனம், கந்த மூலபலாதிகள், மாம்ஸங்கள் இவற்றைப் புசித்தால் தொப்புளைச் சுற்றி நோகும். தொப்புள்தலே துடிக்கும். வாயிலெடுக்கும். வயிறு ஊதும். தாகமாகும், உடம்பில் எரிச்சல், குளிர்தல் உண்டாகி நடுங்கும். சேமுறிக்கும். கொட்டாவி, ஏப்பம், வயிறுகனத்தல், மயக்கம், வாந்தி, மலஜலக்கட்டு, லிங்கம் துடித்தல், ஆசனத்துக்குள்ளே குத்திவலித்தல், உடம்புச்சந்து களெல்லாம் விட்டுப் போதல்போல் நோதல், வயிற்று நரம்புகள் மிகுந்து நோதலுண்டாம்.

28. அஷ்டிலே வாதம்.

நாபிக்குக் கீழாக மடக்கு கவிழ்த்தாப்போலும் கல்போலும் வீக்க முண்டமாகி இருக்கும். வட்டமாக மேலுக்கு மிதந்து காண்பிக்கும். மல ஜலம் கட்டிசாத்தி மூர்ச்சையுண்டாகி மிகநோவுடன் கூடியிருக்கும்.

29. பிரத்தியஷ்டிலே வாதம்.

வயிற்றுக்குள்ளே வாழைப்பூப்போலே குறுக்காக நீண்டு வீக்கம் காண் பிக்கும். புரண்டு வரும். வாய்நீர்ஊறும் கொட்டாவி சத்தம் வரும். வயிறு இறையும்.

30. இருதயாவர்த்த வாதம்.

மார்பிலே பாரை போட்டாப்போலே பாரித்துக்கொண்டும் பிகுந்துகொண்டும் மார் அள்ளுகள் முதுகு குத்தி வலிக்கும். இடப்புறம் வலப்புறம் திரும்ப வொட்டாது. வாந்தி அரோசகமாம். உடம்பு எரியும். தீர்த்தாகமாம். உடம்பு குளிர்ந்து கூசும். மார் குளிர்ந்து இருக்கும். மார் பாரித்துக்கொண்டு இருக்கும். கொட்டாவி சத்தம் சேமுறிக்கும். வாய்நீர் வரும். மூச்சு விட வொட்டாது. போஜனம் பண்ணும்போது அன்னம் இறங்கவொட்டாது.

31. ஸ்தனருக் வாதம்.

மார்பில் முலேக்குக் கீழாக நோகும். வீங்கும். அடிக்கடி நோகும். மூச்சு கொட்டாவி விடும்போது குத்துகிறுப்போலே நோகும்.

32. பக்ஷகாத வாதம்.

தேகத்தில் பாதி சரீரம். ஒருகால் ஒருகண் ஒருபுறத்துமூக்கு இப்படி தேகத்திலே தலேயிலிருந்து மேட்டிர பரியந்தம் ஒருபாதி சரீரம் பிகுந்தாப் போலே நோகும். நரம்புகள் துடிக்கும். இப்பாதி சரீரம் குளிர்ந்து இருக்கும். நரம்பு குத்தி இசிக்கும். பாதி சரீரத்துச் சந்துகள் விட்டுப் போகிறுப் போலே ஏறுகிறதும் இறங்குகிறதுமாக இருக்கும். இதை ஏகாங்க வாதமென்று சிலர் சொல்லுவர்.

33. பக்ஷருக் வாதம்.

அள்ளுப் புறம் ஊளதல் போலே நோகும். இடப்புறம் வலப்புறம் திரும்ப வொட்டாது. மூச்சுவிடமுடியாமை, எழுந்திருக்க, நடக்க முடியாமை அள்ளுக் கீழ்வயிறு கல்லிட்டு அடைத்தாற்போல பாரித்துக்கொண்டு இருக்கும். குதி வலிக்கும். சந்துகளெல்லாம் நோகும். கண்டத்திலே சிலேஷ்மம் கட்டும்.

34. உதாவர்த்த வாதம்.

மல மூத்திர இந்திரியங்களை ஏற்ற காலத்திலே விடாவிட்டால் ஆசனத் திலே வாயு கோபித்து ஆஸனத்துக்கும் நெஞ்சிற்கும் வசி ஊன்றினுப் போலே உடம்பை திருப்ப நடக்க இருக்க குனிய நிமிர படுக்க எழுந்திருக்க விடாமலும், மலஜலம், விடாமலும், தொப்புளுக்குக் கீழ் வயிறு பாரித்துக் கொண்டும், வயிறு சால்போலே ஊதியும், வயிறு பிகுந்துகொண்டும், நோகும். சேட்டை இட்டு குத்துகிறப்போலே அள்ளுகள் நோகும். வாந் தியாகும். சத்தம் வரும். உடம்பு சோர்ந்து வரும். இஃது அசாத்யம். நாள் சென்றால் சாத்யம்.

35. தனுஸ்தம்ப வாதம்.

உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரையும் நரம்பெல்லாம் வில்போலே வளையத் தக்கதாக இசிவு வாங்கும். பின்னர் வலியாக வலிக்கும். உடம்பு பாரித்து உடம்பெல்லாம் அதிகமாக நோகும். இளைப்பும் தவிப்பும். மயக்கமுமாக வலித்து வாயிலே நுரையாவது கோழையாவது விழும். முசலகன் வலிப்புப் போலிருக்கும்.

36. தண்டகவர்த்த வாதம்.

சீதோஷ்ணத்தினுல் உடம்பு மரம்போலே திமிர்த்துக் கைகால் அசை யாமல் இடப்புறம் வலப்புறம் புரளாமல் கிடக்கும். சிலபோது சக்ராகாரமாக திரும்புவார்கள். உடம்பு குளிர்ந்து போகும். நடுக்கமுண்டாகும். உடம் பெரிச்சலுண்டாகும். வாய் அடைத்துக்கிடக்கும். காது கேளாது. கண் தெரியாது. கிலேசப்படும். மலஜலம் விடாது. சித்தப் பிரமமாகும். உடம்பு இளைத்தும் சோர்ந்தும் மயக்கமாக இருக்கும். பல் கிட்டிக்கொள்ளும். இஃது அசாத்தியம்.

37. காராக்ஷேப வாதம்.

கை, தோள்பட்டை, மார்பு இவ்விடங்களிலுள்ள நரம்பு பிகுந்து வீங்கும். தோள்பட்டை நோகும். கை, தோள் சிறுத்து சூம்பி மரம்போலே எடுக்கப் பிடிக்க வராது. அவற்றில் நடுக்கம் உண்டாகும். சிலபேருக்குக் கைகாலெல் லாம் நடுங்கும்.

38. அந்தராயாம வாதம்.

உடம்பு அடிக்கடி சேமுறிக்கும். தேகமுற்றும் நோகும். உடம்பு நரம் பெல்லாம் உள்ளே இழுப்பதுபோல் இசிவுண்டாய் வலிக்கும். ஒரு கால், ஒரு கை இழுத்து வாங்கும். உள்ளே வலிப்புண்டாகும். கழுத்து, கண் நாக்குகள் வலிக்கும். அவை கோணிப்போகும். பல்லை நறநறவென்று கடிக்கும். வாயால் நுரையாக கக்கும்.

39. பாஹியாயா வாதம்.

புறவலிப்பாக முதுகு, தாள் முன்புறம், கழுத்துப் பிடரி இவற்றில் இசிவு வாங்கி கோணிப்போகும். உதடு, பல் இவை வேற்று வர்ணமாகும். வியர்க்கும். உடம்பு குளிர்ந்து போகும்.

40. பிராணுயாம வாதம்.

மர்மஸ்தானங்களில் ஜீவநரம்பில் காயம்பட்டால் அதனுல் வாயு கோபமாம். தேகத்தில் ஸர்வநரம்பும் இழுத்து வாங்கும். உள் வலி புறவலி உண்டாகும். தாகமாம். உடம்பு வெளுத்துப் போகும். வியர்க்கும். குளிர்ந்து போகும்.

41. ஆக்ஷேபக வாதம்.

தேகத்திலே சர்வநரம்புகளும் துடிக்கும். இழுத்து வாங்கும். ஒருகால் ஒருபுறம், ஒருகால் மறுபுறம் இப்படி மாறி மாறி இழுத்து வாங்கும். உடம்பு முழுதும் திமிர்த்துக் கிள்ளினுலும் தெரியாது. வேறு யாதும் தெரியாது. வாயில் நீர் பாயும். தலை மயிரைப்பற்றி இழுத்தாலும் கொள்ளியால் சுட்டாலும் அறியாது. உடம்புநரம்பு துடிக்கும். மார்பு தடதடவென்று பயம் உண்டாகும். நெஞ்சு திடுக்கிடும். பொழுது விடிந்ததும் மறைந்ததும் தெரியாது. மலஜலம் வருகிறதும், சுத்தம் அசுத்தம் அறியாதும் இருக்கும்.

42. ஆட்டிய வாதம்.

ரக்தம், மேதை, அஸ்தி, மஜ்ஜை, சுக்கிலம் இந்தத் தாதுவிலே வாயு சிலேஷ்மம் பிரகோபமாய் உடம்பு பாரித்து மரத்து, திமிர்த்து, பிகுந்து கொண்டு நரம்புகளெல்லாம் துடிக்க, உடம்பு பிரமமாக, மல ஜலம் கட்டுப்பட, நித்திரை அதிகமாக வர, உடம்பு தினவுதின்ன, உடம்பு வியர்க்கும்.

43. அபிநியாஸ வாதம்.

வாத பித்த சிலேஷ்மம் ஸப்த தாதுவிலும் பிரகோபிக்க சுரம் வரும். காதுஅடி வீங்கும். அதிகம் நோகும். உடம்பு, மரம்போல் அப்புறம் இப்புறம் திரும்பாது. பிணம்போலே கிடக்கும். வார்த்தை சொல்லாது. சுவாஸம் வாங்கும்.

44. இருத்ரசி வாதம்.

உள்ளங்கால், குதிக்கால், விரல் இவற்றில் தினவு உண்டாகும். குதிகால் நரம்புமுதல் பிடரிநரம்புவரை இசிவு வாங்கி வலிக்கும். தேகத்து நரம்பு எல்லாம் இடியும்.

45. விசுவபித்த வாதம்.

உள்ளங்கை, விரல் இவற்றில் தினவு உண்டாகும். கைவிரல்நரம்பிலிருந்து தோள்நரம்புவரை இசிவு வாங்கும். வலிக்கும். வாயைக்கோணி வலிக்கும். கை சூம்பிப் போகும்.

46. ஜ்வாரித வாதம்.

பக்குவாசயத்திலே பித்தமும் வாயுவும் பிரகோபித்து வயிறும் நெஞ்சும் மிகவும் எரியும். நெஞ்சுக் குழிக்குள்ளேயும் பந்தம் எரிவது போலெரியும். உடம்பு, உள்ளங்கால், உள்ளங்கை, கண் எரியும். நாக்கு உலர்ந்து போகும். உடம்பு சோர்ந்து வரும். மயக்கம் வரும். கொட்டாவி சத்தம் வரும். வியர்க்கும்.

47. அவபாஹுக வாதம்.

தோள்பட்டையிலிருந்து கைநரம்புவரை யாவும் இசிவு வாங்கும். கை உயர்த்த, எடுக்க, பலமாகப் பிடிக்க வராது. தோள் நரம்பு துடிக்கும். தோள் சூம்பிப் போம்.

48. பாஹுசோஷ வாதம்.

வாயுவும் பித்தமும் பிரகோபித்து ரத்தங்களெல்லாம் உலர்ந்து போகும். கை அசந்து மரம்போலாகும். கை உலர்ந்து சூம்பலாகும்.

49. அம்ஸாவர்ண வாதம்.

பிடரிநரம்பு இசிவு வாங்கும். கழுத்து அப்புறம் இப்புறம் திரும்பாது விரைத்துப்போகும். கழுத்து மடங்கினுப்போலேயாகும். திருகியாகிலும் வாங்கிக்கொள்ளும்.

50. உக்கிராக்கிரக வாதம்.

கீழ்வயிறு, நெஞ்சு, தலை, இந்த மூன்று இடங்களிலும் ஏககாலத்திலே கோபிக்கும். அதிகம் நோகும். முந்தி முதலில் இடங்களிலும் எடுக்கும். அதிலும், தலையில் தாபம், தலைநடுக்கல், தலைதிமிர்தல், கண் காது மந்தம், நெஞ்சு தடதடவெனல், கீழ் வயிறு கனத்தல், அரை, தொப்புள் தலை இம் மூன்று ஸ்தானங்களில் வேதனை உண்டாயிருத்தல் என்பனவாம். இஃது அஸாத்யம்.

51. ஊஷ்ம வாதம்.

தலையோட்டிலும், காது கண்களிலும், வாயுவும் பித்தமும் பிரகோபித்து தலை கண் காதுகள் எரியும். சமுத்திரகோஷம் போலே தலைக்குள்ளே சத்தம் தெரியும். தலை நடுக்கும். வாந்தியாகும். வியர்க்கும். சிரோபிரமமாகும். உடம்பு எரிந்து தாபமாக இருக்கும். கண், காது, புருவம், நெற்றி இவை சிலபேருக்கு நொந்து பெருக்கும். எப்போதும் தேகம் நோகும். கண்திருஷ்டி மத்யமாம். வந்தவுடனே குணமாகும். நாளானால் குணமாகாது.

52. அயாஸாவர்த்தி வாதம்.

அதிகமாக வழி நடந்தால் பித்தமும் வாயுவும் பிரகோபித்து சர்வாங்கமும் எரிச்சலாகும். உடம்பு பாரித்துக் கொள்ளும். சோர்ந்து மயங்கி வியர்க்கும்.

53. அயாஸாவர்த்தி வாதம்.

சர்வாங்கமும் சிலேஷ்மம் வாயு பிரகோபித்து உடம்பு நோகும். தினவும் உண்டாகும். உடம்பு பாரமுடன் திமிர்த்தும் இருக்கும். சோம்பல் கொட்டாவி சத்தம் சேமுறிப்பு, குத்திக்கூசுதல், இவைகாணும். தேகம் உற்சாகமாக இராது.

54. அதிதாபக வாதம்.

விஷூச்யாந்தரத்திலே ஜ்வராந்தரத்திலே உஷ்ணமான திரவியங்களை தன்தேகத்துக்கு இதமாகாத விருத்தமான திரவியத்தை புசித்தால் பித்தமும் வாயுவும் பிரகோபிக்கும். தேஹம் அனலாக மாறும். தலை உடம்பு நடுக்கம் கொள்ளும். எழுந்திருக்க விழச்செய்யும். சித்தப் பிரம மாகும். நிலத்திலே புரளும். தலை புரட்டிக்கொண்டு கால்கைகளை எடுக்க, போட, நீட்ட, முடக்கச் செய்யும். வயிறு ஓடும். அடிக்கடி ஜலம் விடும். விக்கல், சுவாஸம், சர்த்தி, உத்காரம், வெள்ளோக்காளம், அடிக்கடிக்கு எடுக்கும். தாகம் உண்டாகும்.

55. விஸ்மரீயக வாதம்.

சோகம், கோபம், பயம், பசி இவற்றால் பித்தமும் வாதமும் பிரகோபிக்கும். உடம்பு எரிச்சலுண்டாக சோர்ந்துவரும். தாகமும் சித்தப் பிரமமும் உண்டாகி மதி கெட்டுப்போகும்.

56. களாவர்த்த வாதம்.

இரத்த தாதுவிலே வாதம் பிரகோபமாய், தலை, உடம்பு, நரம்புகளெல்லாம் உஷ்ணமாகித் துடிக்கும். கழுத்து நோதல் இருக்கும். மிடறு வலிக்கும். உடம்பு கருகி குளிர்ந்து ஒருகால் சுரம்போல் உஷ்ணமுண்டாகும்.

57. அர்த்தித வாதம்.

தலையில் அதிக பாரமான சுமை சுமத்தல், அதிகமாகச் சிரித்தல், பேசுதல், கழுத்தைச் சாய்த்து அதிகமாகத் தும்முதல், அதிகமாக வில் வாங்கி இழுத்தல், குதிரை முதலானவற்றில் ஏறி ஓடல், பாக்கு முதலான கடின வஸ்துக்களைக் கடித்தல் ஆகிய இவற்றால் வாயு பிரகோபமாகி தலை நடுக்கங்கொள்ளும். வாய் கோணிப்போகும். கண்பார்வை மந்தமாகும். பல் அசையும். குரல் கட்டும். காது கேளாது. மூக்கு அடைத்துக்கொள்ளும். நெஞ்சு அடைத்துக்கொள்ளும். வாய் நீர் கோழையாக வரும். ஒரு புறம் வாயாவது கண்ணாவது இழுத்துக்கொள்ளும். தலைநோய் உண்டாய் இருக்கும்.

58. ஆம வாதம்.

கணுக்கால், தொடை, நடுமுதுகு, ஆஸனம் இவ்விடங்களில் நோகும். நெஞ்சு எரிந்து புளியேப்பம் வரும். உள்ளங்கால், உள்ளங்கை எரியும். தாகம் உண்டாகும். வயிறு அடிக்கடிக் கழியும். எப்பமும் கொட்டாவியும் உண்டாகும். அன்னத் துவேஷம் இருக்கும்.

59. இரத்த வாதம்.

உடம்பு வீங்கி எரிச்சல் உண்டாகி உலர்ந்து காணும். உடம்புச் சந்துகளில் இரத்தம் கட்டி வீங்கி நரம்பு துடித்து சுரம் வரும்.

60. சீத வாதம்.

உடம்பெல்லாம் ஆலங்கட்டிபோலே குளிர்ந்துபோக, மயிர் சிலிர்த்திட, உடம்பு நரம்பு துடிக்க, தலை திமிர்த்துக் கனத்து சுரையோடுபோலே இருக்கும். கண், மண்டை நோகும். சுவாஸம், விக்கல் உண்டாகும். வாய்நீர் ஊறும்.

61. கம்ப வாதம்.

உடம்பு, கை கால், தலை, குளிர்ந்து நடுங்கும். தலையும் கையும் அதிகமாக நடுங்கும். நடுங்கிறபோது கால் தடுமாறி உடம்பு துவளும்.

உடம்பைக் கிள்ளினாலும் அறியாமல் மரம்போல், கைகால் கழுத்து விறைத்து நடுக்கமுண்டாகி, சந்துகள் வீங்கி, சந்து குடைச்சல் உண்டானால் அஸாத்யமாம்.

சிகிச்சை.—வாதத்துக்கு பஞ்சகர்மம் பண்ணவும். விரேசம், வாந்தி நசியம், வேது, ரக்தம்வாங்கல் இவற்றைச் செய்யவும். ரக்ஷை போடவும். தைல கிருதாதிகளைச் செய்யவும். ஸ்நேஹ பொட்டணம் ஒற்றடம் செய்யவும். ஸ்நேகத்சுரோணியில் தைலத்துக்குள் போடவும். தைலதாரை விடவும். இவை வாதத்தை அடக்கும்.

ஸ்வேதம்.—எருக்கிலை, ஆயில்பட்டை, புங்கம்பட்டை, விழுதியிலை, தழுதாழை, முருங்கை, நொச்சி, ஊமத்தை, சாறடை இவற்றை இடித்து, கோமூத்திரமாவது காடியாவது நாலுவள்ளம் விட்டுக் காய்ச்சி செங்கல்லைச் சுட்டு, சூடாக அதில் போட்டு, வேது பிடிக்கவும். உடம்பு வியர்க்கும். வாதம் தீரும்.

ஸ்நேஹபொட்டணம்.—ஆமணக்குமுத்து, வேப்பமுத்து, கழல்பருப்பு, கொப்பைதேங்காய், புங்கம்விதை, கடுகு, வெள்வெங்காயம், பெருங்காயம் இவற்றை இடித்து, ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், புங்கஎண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பையெண்ணெய் இந்த ஐந்து எண்ணெய்களையும் காயவைத்து, இதில் இடித்த மருந்துகளைப் போட்டு துழாவி துணியில் பொட்டணங்கட்டிச் சூடாக ஒற்றடமிட வாதம் தீரும்.

திரிகடுகு, வசம்பு, உப்பு, உளுந்து, எள், அமுக்கராவேர், இருமுருங்கை வேர், எருக்கம்வேர், கோட்டம், சாறடைவேர், கடுகு, வெள்வெங்காயம் இவற்றைச் சதுரக்கள்ளிச்சாற்றில் அரைத்துக் கொதிப்பித்துப் பூச வாதம், வீக்கம் நோதல் தீரும்.

நசியம்.—விஷகரி நகசியம்—திரிகடுகு, பெருங்காயம், அரத்தை, பேய்க்கொம்மட்டிவிதை, வசம்பு, இலுப்பைவயிரமும் விதையும், சதகுப்பை, வட்டத்திருப்பி, விளாவிதை, தேவதாரு, மனோசிலை, நாபி, அழிஞ்சிவிதை, யவக்ஷாரம், பூவரசவிதை, சாறடைவேர், அமுக்கராவேர், இந்துப்பு இவற்றை ஆத்திப் பழுப்புச்சாறு, எருக்கம்கொழுந்து வாட்டிப் பிழிந்தசாறு, வெள்ளாட்டு

மூத்திரம், நொச்சிச்சாறு இவற்றை ஊற்றி அரைத்து உருண்டைபண்ணி சாறடைவேர்ச்சாற்றிலும் முலைப்பாலிலும் வெள்ளாட்டுமூத்திரத்திலும் நசியம் விட, சர்வ வாதங்களும், சந்நிபாதங்களும், பீநசாதி சிரோ ரோகங்களும், சர்வபூதாதி விஷங்களும், உன்மாதமும், அபஸ்மாரமும் தீரும்.

ஸ்னேகத் துரோணி.

மாவிலங்கு, மருது, புங்கு, ஆயில் இவற்றில் ஒன்றை எடுத்து வெட்டி, ஓர் ஆள் படுக்கக்கூடிய நீளம் ஒருதொட்டிபோல் தோண்டி, அத்தோண்டியில் ஓர் ஆளைப் படுக்கவைத்து, ஒரு பிரஸாரிணிதைல முதலியவற்றால் தாரை விட்டு நிரப்பவும். ஏழு நாள் படுத்துக் கிடந்து பின்னர் எழுந்து வெந்நீரில் ஸ்நானம் பண்ணவும். வாதத்துக்கு ஹிதமான பத்தியம் கொடுக்கவும். சகலவாதங்கள், கைகால் முடக்கங்கள், சந்திவாதங்கள் தீரும். தினமும் தைலத்தை கஷாயகல்கம் கலந்து தாரைவிடவும்.

லசுனவிஷ்டி.

இருபது வெள்வெங்காயத்தை நல்லெண்ணெய் வார்த்து சிவக்க வறுத்து நன்றாக அரைத்து, திரிகடுகு, கொடிவேலிவேர்ச்சூரணம், திப்பிலிமூலம், பெருங்காயம், திரிக்ஷாரம், சீரகத்துவயம், கோஷ்டம், கொத்துமல்லி, செவ்வியம், ஓமம், இந்துப்பு, அரத்தை, தேவதாரம் இவற்றைச் சூரணம் பண்ணி காய்ந்த நல்லெண்ணெய்யில் வெள்வெங்காயகல்கத்தை போட்டுப், பிறகு சூரணத்தைப் போட்டுத் துழாவி இறக்கி ஒரு குடுவையில் வைத்து, தினம் உள்ளங்கை யளவு உட்கொள்ள வெந்நீர் குடிக்க சருவ வாதமும் தீரும். குன்மசூலையும் மஹோதரமும் சுவாசகாசமும் அபஸ்மாரமும் தீரும்.

விழுதிச்சாறும் எண்ணெயும் குடித்துவர வாதரோகங்கள் யாவும் தீரும்.

மஹாபிரஸாரிணி தைலம்.

முதியார்கூந்தல், பின்னைவேர், பாதிரிவேர், வில்வவேர், பெருவாகை வேர், பெருங்குமிழம்வேர், சிறுவழுதலைவேர், கண்டங்கத்திரிவேர், நெருஞ்சில்வேர், சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுகுறிஞ்சான், பெருங்குறிஞ்சான், வண்ணக்குறிஞ்சில், வட்டத்திருப்பி, ஈச்வரிவேர், இருமுருங்கைவேர்ப்பட்டை, சீந்தில்தண்டு, ஆயில் புங்கு, மாவிலிங்கம்பட்டை, கொன்றைவேர்ப்பட்டை, சிறுகளாவேர், பேராமுட்டைவேர், சாறடைவேர், மூக்கரட்டைவேர், ஆமணக்கம்வேர், காட்டாமணக்கம்வேர், இலுப்பை, சிறுகல்லுருரி, காடிவேலிவேரும் பட்டையும் பெருகுரும்பை, எருக்கம்வேர்ப்பட்டை, தூதுவளைவேர், ஆதண்டைவேர், குளல் தண்டம்வேர்(?) தொட்டிலாளவேர்(?) உப்பிலிவேர், தேவதாருவைரம், வெட்பாலைப்பட்டை, அழிஞ்சில்பட்டை, அம்பட்டை பேய்ப்புடல், பெரும்புல்வேர், வேளைவேர், சிறுகாஞ்சோரிவேர், செப்புநெருஞ்சில், கருவேப்பிலை, பேய்த்தும்பட்டிவேர், பழுபாகற்கிழங்கு, சேவகனார்கிழங்கு, பாவட்டைவேர், மருக்காரைவேர், இங்குள்வேர்(?) மூங்கில்தழை, செவ்வியம், வெள்ளைக்காக்கணம், கருப்புக்காக்கணம், சங்கம்வேர், மிளகு, தான்றிவேர், விடத்தேரிவேர், செம்மரப்பட்டை, நன்னாரிவேர், இலுகிலுப்பை, நிலவேம்பு, விஷ்ணுகந்தி, அமுக்குராவேர், குடசப்பாலைப்பட்டை, ஆட்டுக்கொம்பு, பாலைமரப்பட்டை, பிடங்குநாரிப்பட்டை, காவேளை, மூக்காவேளை, குதிரை, அவல்(?), திப்பிலி, ஆகாசகருடன் இவற்றை எல்லாம்

இடித்துக்கஷாயமிட்டு, தண்ணீர்விட்டான்சாறு, மீனைத்தக்காளிச்சாறு, தழுதா சாறு, தும்பைச்சாறு, வீழியிலேச்சாறு, ஈயத்தண்டுதின்பால், குப்பை மேனிச்சாறு, தேங்காய்ப்பால், மஞ்சள்சாறு, நொச்சிச்சாறு, புளியிலைச்சாறு, அவுரிச்சாறு; குருட்டிகைச்சாறு, கிலுகிலுப்பைச்சாறு, கஞ்சாங்கோரைச்சாறு, பொடுதலைச்சாறு, இலைக்கள்ளிச்சாறு, செருப்படிப்பூண்டுச்சாறு, திப்பிலிச்சாறு, சாறடைச்சாறு, ஊமத்தன்சாறு, எருக்கஞ்சாறு, சதுரக்கள்ளிச்சாறு, நிலக் கடம்புச்சாறு இவற்றின் கஷாயத்துடன் கூட்டி, ஐந்து எண்ணெய் கூட்டி, வெள்ளாட்டுப்பால் கூட்டி, உளுந்து, கொள், சணப்பம்விதை, இவற்றையும் கஷாயத்தில் கூட்டி, வெள்வெங்காயம் தைலமும் கலந்து, திரிகடுகு, திரிபலை, சாதுர்ஜாதகம் யவக்ஷாரம், பஞ்சலவணம், தாளிசபத்திரி, சாதிக்காய், சாதி பத்திரி, ஜடாமாம்ஸி, கோட்டம், ஆனைத்திப்பிலி, திப்பிலிமூலம், சரிஷம், கொடிவேலிவேர், அதிமதுரம், அரத்தை, சம்பு, தவக்ஷீரம், கண்டுபாரங்கி, கர்கடகசிங்கி, தக்கோலம், கடுகுரோகணி, மஞ்சிஷ்டி, விளங்கம், ஜோதிஷ்ம திவிதை, கார்போகஅரிசி, சீரகத்துவயம், அசமதாகம், குரோசாணி, ஓமம், பெருங்காயம், நன்னாரிவேர், வெண்சிறுகடுகு, வெள்ளிலோத்திரம், தேவ தாரு, அகில், இலாமிச்சம், முடிவாழம் (?) இவற்றை வெள்ளாட்டுப்பாலில் அரைத்துக்கரைத்து, குங்குமப்பூ, கஸ்தூரி, நாகம் இவற்றை அரைத்து, பாகம் வருகிறபோது கூட்டி வடித்து, கிருதபானம், நசியம், அப்யங்கனம், அவாசகு கனுதிகளில் பிரயோகிக்கவும் சுரோணியில் ஏழு நாள் இட்டு எட்டாம் நாள் ஸ்நானம் பண்ணினால் எண்பதுவகை வாதமும் பதின்மூன்றுவகை சன்னி பாதமும் ஹ்ருத்ரோகம், மூலரோகம், பிளவை, விப்புருதி, விருத்தி, குன்மம், துனி, பிரதிதுனி, ஜலகூர்மம் மஹோதரம், சோகை, குஷ்டம், அபஸ்மாரம், தலை காது கண் மூக்குகளைப்பற்றிய ரோகங்கள், மேட்டிரயோனி சம்பந்தமான ரோகங்கள், மேகரோகங்கள், ஊர்த்துவாங்கரோகம், அதோங்கரோகமெல்லாம் தீரும். இந்த தைலத்தில் எருக்கம் பால், கள்ளிப்பால் கூட்டி வடித்துப் பூச, ஸர்வவாதமும் தீரும்.

குறிப்பு :—வாதங்களுக்கு மேற்கூறிய ஔஷதத்தில் கிடைத்தவற்றை மாத் திரம் கூட்டி தைலம் வடிக்கவும். இத்தனை மருந்து எல்லாம் வேண்டுவ தில்லை. முன்னே சொன்ன சாறுகளாவது கஷாயங்களாவது யுக்தி வழி கிடைத்தவற்றைக் கூட்டித் தைலம் செய்து உபயோகிக்கவும். சர்வ வாத மும் தீரும். இந்த யோகத்தை நெய் கூட்டி கிருதம் பண்ணலாம். லேஹ்யமாகவும் பண்ணலாம். வாதங்களுக்கு நாரங்காதி லேஹ்யமாக செய்துகொடுக்க வயிற்றில் வரும் வாதமெல்லாம் தீரும். குக்குல்வ கிருதத்தைப் பண்ணவும் (?). லோகேஸ்வரிரஸத்தை அனுபான விசே ஷத்தில் கொடுக்கவும். இந்த மருந்துகளைக் கஷாயமிடவும். இப்படி வேண் டிய விதம் புத்திகொண்டு செய்யவும். இந்த மஹாபிரஸாரிணி யோகத் திலே கஷாயம், அவுஷதம், தைலம், லேஹ்யம், சுரசம், இப்படி வேண்டிய விதமெல்லாம் செய்யலாம்.

வாதங்களுக்கு பிரத்தியேக சிகிச்சை.

அர்தித முதலான வாதங்களுக்கு தசமூலகிருதம் கொடுக்கவும். பாஹ் யாயாமம் முதலியவைகட்கு மத்யானத்திலே, குத்தி கொம்புவைத்து ரத்தம் வாங்கவும். ஆயாசாவர்த்திக்கு (?) அந்திப்பொழுதில் நரம்பு

தெரித்து, கத்திகொண்டு இரத்தம் வாங்கவும். அட்டைவிட்டு ரத்தம் வாங்கவும். தாண்டாபதனகத்துக்கும் ஆக்ஷேபகத்துக்கும் ஸ்நேக பொட்டண ஒற்றடம், கோமூத்திர வேது செய்யவும். பக்ஷவாதத்துக்கு விரேசனம் கொடுக்கவும். பக்ஷவாதத்துக்கு நரம்பு தெரித்து ரத்தம் வாங்கவும். அவபாஹீகத்துக்கு நசியமிடவும். ஸ்நேஹ பொட்டணம் இடவும். அவுஷதம் கொதிப்பித்து லேபம் பண்ணவும். ஜம்பூசிரஸ் முதலியவற்றிற்கு முழங்கால் சந்து முதலிய தானத்தில் சுண்ணும்பு எருக்கம்பால் வெள்ளாட்டுப்புழுக்கை இவற்றைப் பிசைந்து பூசி நெருப்பில் காய்ச்ச வலி தீரும். கால் கை வீங்கி நொந்தால் சந்துகளுக்கு ரட்சை போடவும். ஊருஸ்தம்பத்துக்கு உப்பிலிவேர்ப்பட்டையை அரிசியுடன் இடித்து புடைத்து பிட்டு இட்டு எண்ணெய் வார்த்துத் தின்ன வாதம் தீரும்.

மருக்காரைவேர்ப்பட்டையையும் அவுரிவேரையும் நைய இடித்து, காயும் நல்லெண்ணெய்யில் அதனைப் போட்டுத் துழாவி இறக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் இட கைகால் முடக்கங்கள் தீரும்.

உளேப்புக்கு.—செந்நாயுருவிவேரையும் தண்டையும்,சிவந்த துராவேளையும் குளிசமாடி அமுக்க, உளேப்பு தீரும். குப்பைமேனிவேரை குளிசமாடி அமுக்க, சுளுக்குப்போகும். அதிபத்தி(?) சூர்ணத்தை விரேசனத்துக்குக் கொடுக்கவும். நாராசரசத்தை(?) விரேசனத்துக்குக் கொடுக்கவும். மற்றும் வயிறு கழியும் யோகங்களேயும் மஹோதர சிகிச்சையிலே சொல்லியிருக்கிற மேகநாத ரஸத்தையும் விரேசனத்துக்குக் கொடுக்கவும். அஞ்ஜனம் : பில்வமூலாதிகளால் அஞ்சனம் இடவும்.

பரங்கிப்பட்டைக் கஷாயம்.—பரங்கிப்பட்டை பலம் 10, சங்கம் வேர்ப்பட்டை பலம் 5, சங்கத்தாரி பலம் 4, நிலவேம்பு பலம் 3, வேப்பம்பட்டை பலம் 2, திப்பிலி காசெடை 3, மிளகு, தான்றிப்பட்டை பலம் 3, சீரகம் காசெடை 3, சதுர்ஜாதகம்,சுக்கு, திப்பிலி மூலம், சவ்வியம், சாதிக்காய், பத்திரி, லவங்கம், கடல்நுரை, அரத்தை மிளகு, கோஷ்டம், சாரடை இவற்றைக் கஷாயமிட்டுக் குடிக்க, சர்வவாதமும் தீரும்.

பாவனே ஓமம்.—இரண்டு படி அசமோதகத்தை ஒரு சட்டியிலே போட்டு தழுதாழைச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு. துளசிச்சாறு, நொச்சிச்சாறு, மனேத்தக்காளிச்சாறு, வெள்ளெருக்கஞ்சாறு, சிறுகுறிஞ்சான்சாறு, பெருகுறிஞ்சான்சாறு, பெரும்புல்லுச்சாறு, திப்பிலிச்சாறு, நிலக்கடம்புச்சாறு, செருப்படிசாறு, இரட்டைப்பேய்மிரட்டிச்சாறு, குருந்தொட்டிச்சாறு, வீழிச்சாறு, பொடுதலேச்சாறு, குப்பைமேனிச்சாறு, சாரடைச்சாறு இவற்றில் ஓமத்தைப் பாவனே செய்து சூரணம் பண்ணி வெந்நீரில் உட்கொள்ள சர்வவாதமும், குக்ஷிரோகங்களும், கை கால் மார்புநோய்களும் மற்றெல்லாமும்தீரும்.

வைக்கிராந்த பஸ்பம்.—வைக்கிராந்தத்தை கொள்ளுக்கட்டுச் சாற்றில் அரைக்கவும். கோமூத்திரத்தில் அரைக்கவும். கோமூத்திரம் கொள்ளுக் கட்டுச்சாறு இவற்றில் தோராயந்திரமாக ஒருநாள் வேகவைத்து

எடுக்கச் சுத்தியாம். அந்த வைக்கிராந்தத்திற்கு பத்திலொன்று கந்தகம் கூட்டி பழுபாகல்கிழங்குச் சாற்றில் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்து வேறு அகலால் மூடி சீலைமண் கொண்டு முழஆழக்குழியில் காட்டெரு முட்டை இடையில் வைத்துப் புடமிட்டு, அப்படி பத்துதரம் செய்ய வைக்கிராந்தம் பஸ்மமாம். இந்த பஸ்பத்தை பழுபாகல் கிழங்குச்சாற்றில் அரைத்து பெருபாகல்கிழங்கை நடுவில் குழியாகத் தோண்டி அதற்குள் வைக்கிராந்த கல்கத்தை வைத்து அதன் நடுவில் குழி செய்து இருபது வராகனெடை வைக்கிராந்தத்திற்கு, ரசம் ஐந்து வராகனெடை விட்டு மேலும் வைக்கிராந்தம் அரைத்துவைத்துமூடி, கிழங்குக்கு மேலும் தோண்டி எடுத்த கிழங்கைக்கொண்டு மூடி, கிழங்குக்கு சீலைமண் செய்து கிழங்கை சட்டிக்குள் வைத்து, வேறு சட்டி கொண்டு மூடி, சட்டி சந்துக்கு மண் பூசிக் காயவைத்து, முழஆழக் குழிக்குள் காட்டுமுட்டையை யிடையில் வைத்துக் கஜபுடமிட ரஸம் பஸ்பமாம். அதை எடுத்து பணவெடை பிரமாணம் உருண்டைபண்ணி வெற்றிலையில் வைத்துத் தின்னவும். சுக்குச் சாற்றில் கொடுக்கவும். பஞ்சகோலம், அரத்தை, பரங்கிப்பட்டை சூர்ணத்தில் உட்கொள்ளவும். சப்தவிம்சதி (?) குக்குலு வடகத்தில் கொடுக்கவும். ஸர்வ வாதங்களும் பித்தம் சிலேஷ்மம் க்ஷயம் காசம் முதலிய ஸர்வ வியாதிக்கும் அனுபானவிசேஷத்தில் கொடுக்கவும்.

வாத சுரோணிதம்.

உஷ்ணமான அன்னங்கள் தேகத்துக்கு விருப்பமான அன்னங்களைப் புசித்தல், நித்திரையில்லாமை, அப்யங்கனம்செய்யாமை, அதிகஸம்போகம் செய்தல், அதிகதூரம்நடத்தல் இவற்றால் வாதம் ரத்த தாதுவில் பிரகோபித்து சந்துகள் தோறும் வீங்கி ரத்தம் கட்டும். முந்தக்கால் பெருவிரல் இவற்றிலும் ரத்தம் கட்டி வீங்கும். பிறகு முழங்கால் சந்துகள், கை சந்துகள், பிடரி எங்கும் வீங்கும்.

வாதசுரோணிதம் ஏழு விதம்.

வாதம் பித்தம் சிலேஷ்மம் மூன்று, தொந்தம் மூன்று, சந்நிபாதம் ஒன்று : என ஏழு விதம்.

வாதாதிகமான வாத சுரோணிதம்.

மஹாநோதலுடன் வீக்கங்கள் கண் நோகும். வீக்கம் துடிக்கும். தும்பி குடைதல் போல் அதிகமாக நோகும். வீக்கம் கருகி மெள்ள ஓரிடம் வீங்க மறுவிடம் வற்றும். தேகம் குளிர்ந்து இருக்கும். கால் கை உடம்பு இவை கயிற்றால் கட்டினாப்போல் பிகுந்துகொண்டு இருக்கும். நீட்ட மூடக்க எடுக்க எழுந்திருக்க கை எடுக்க முடியாது.

பித்த சுரோணிதம்—உடம்பு சந்து வீங்கி, அத்திப்பழம்போலே சிவந்து தொட்டால் மெத்தென்று உஷ்ணமாக சுட்டுக்கொண்டு நெருப்புப் பட்டாப்போல் எரியும். மயக்கத்தோடு உடம்பு சுற்றலுமாக இருக்கும். வியர்க்கும். உணர்ச்சி அற்றுப்போகும். தாகம் எடுக்கும். வீக்கத்தை தொட ஸஹியாது. மகா கனமாக நோகும். சுரம் வரும். வாந்தி விரேசனம் உண்டாகும். தலை, வாய் உலர்ந்து போகும்.

சிலேஷ்ம சுரோணிதம்.—உடம்பு திமிர்த்து பாரித்து, சோம்பலடைந்து எப்போதும் குளிர்ந்து, கூச்சல் கொட்டாவி, சேமுறித்தல் உண்டாகி, உடம்பில் கல்போல் வீக்கம், தினவு, உடம்புவெளிறல், இருமல், வாந்தி, இரவு பகல் நோதல், வீங்கின இடம் ஏறுகிறதும் இறங்குகிறதுமாக இருக்கும்.

ஸந்நிபாத சுரோணிதம்.

மூன்று தோஷங்களுடைய லக்ஷணம் உண்டாயிருக்கும்.

அஸாத்ய லக்ஷணம்.—மயக்கம், உடம்புஅசந்துபோதல், சித்தப் பிரமமாக மரத்துப் போதல், மகாநோதல், இரத்தம்கட்டல், அன்னத்துவேஷம், அரோசகம், சுவாஸம், உடம்புமுடங்கல், உடம்புவெடித்தல், தலைநோய், வயிறுகழிதல், தேஹம்உலர்ந்து போதல், ஹீனஸ்வரம், தாதுக்ஷீணம், பலஹீனம், மந்தாக்னி, சந்துவீக்கம்வாங்காமலிருத்தல் நடுக்கல், கை கால் அசந்து போதல், உடம்பு இளைத்தல் என்பன இருந்தால் அஃது அஸாத்யம்.

வாத சுரோணித சிகிச்சை.

வாதசுரோணிதம் கட்டின இடத்திலே குத்தி அட்டைவிட்டு ரத்தம் வாங்கவும். சிநேக பொட்டணம் ஒற்றவும். மருந்துகள் அரைத்துப் பூசவும். தைலங்களை உடம்புக்கு இடவும், விரேசனத்துக்கு கொடுக்கவும், உள்ளுக்கு பழைய நெய்யில் பண்ணின அவுஷதத்தைக் கொடுக்கவும். 'சந்துகளுக்கு ரக்ஷைபோடவும். சதாவேரிகிருதம், பலாதைலம், கேதகீதைலம் இவற்றை உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் இடவும். வீழிச்சாறும் எண்ணையும் குடிக்கக் கொடுக்கவும். வீழிக்கொம்பை சிறுகநறுக்கி சாலுக்குள் அடைத்து, பூபுடத்தைலம் வாங்கி நல்லெண்ணெய்யுடன் உட்கொள்ள வாதசுரோணிதம் தீரும்.

வீழி, ஆதண்டை, ஊமத்தை இவற்றை இடித்து முறைப்படி ஸ்வேதம் போடவும்.

தசமூலம், ஆதண்டை, குழல்தண்டை, தொட்டிலான்பட்டை, சீந்தில் தண்டு, சிற்றுமுட்டி, பேராமுட்டி, இலாமிச்சம் இவற்றின்வேர், முதியார் கூந்தல், சாரடைவேர், பருத்திக்கொட்டை இவற்றை இடித்துக் கஷாயமிட்டு, தாழம், விழுதுச்சாறு மஞ்சள்சாறு, நீர்முள்ளிச்சாறு, உப்பிலிச்சாறு கஷாயங்களுடன் மேல் சொன்ன சாற்றையும் கூட்டி எண்ணெய், ஆமணக் கெண்ணெய், நெய் அல்லது இவை மூன்றுங் கூட்டிக் கலந்து, பால் கூட்டி சந்தனம், அகில், அதிமதுரம், கோஷ்டம், லவங்கம், இருவேலி, இலாமிச்சம், சாதுர்ஜாதகம், நன்னாரிவேர், தேவதாரு, தக்கோலம், குக்குலு, அரத்தை, குங்கிலியம், இருமஞ்சள், கல்மதம், சதகுப்பை இவற்றை அரைத்துக் கலந்து தைலம் வடித்து பானம் அப் யங்கனம் செய்ய நசியம் விட வாதசிலேஷ்மம், எரிச்சல், தினவு, வீக்கம் இவை தீரும். இதில் காடி கூட்டி வடித்தால் நல்லது. . . . அந்த யோகத்தைக் கிருதம் செய்து. . . கல்மதம் கூட்டிக்கொள்ள வாதசுரோணிதம் தீரும். .... இந்த யோகத்தை விரும்பியபடி மருந்து கஷாயம், லேபம் முதலியன செய்து கொடுக்க வாத சுரோணிதம் தீரும். இது கைகண்டது.

பித்த ரோகங்கள்.

பித்தரோகம் நாற்பது விதம். பித்த ஸ்தானம்—

நாபிராமாஸயஸ்வேதோ வசீகோ ருதிரம் ரஸ :

த்ருக்ஸ்பர்சனஞ்ச பிதஸ்யாநாபி ரத்ர விசேஷத :

என்றபடி இவ்விடத்திலே விசேஷித்து இருக்கும். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை பித்த ஸ்தானங்களாம். தொப்புளண்டை ஆமாசயம் எரிய வயிறு குழப்பிக்கொண்டுவர, உடம்பு கை கால் சர்வமும், எரிச்சலுண்டாகி, தலை சுழற்றிவர, வாய் கசந்து இருக்க, தாகமாக, கோபம்வர, கோபம் வந்தால் கண்கலங்க, சித்தப்பிரமமாக வெகுவாகச் சிரிக்க, உடம்பு வியர்க்க, இப்படிப் பித்தம் அனேக வித அதிகாரம் பண்ணும்.

ஆவிருத பேதங்கள்.

இதிலே ஆவிருத பேதம் இருபத்திரண்டு விதம்—(1) பித்தாவிருதம், (2) சிலேஷ்மவிருதம், (3) ரத்தவிருதம், (4) மாம்ஸவிருதம், (5) மேதஸாவிருதம், (6) அஸ்த்யாவிருதம், (7) மஜ்ஜாவிருத்தம், (8) சுக்கிலாவிருதம், (9) அன்னவிருதம், (10) மூத்திரவிருதம், (11) மலாவிருதம் (12) ஸர்வதாத்வாவிருதம், (13) பித்த பிராணவிருதம், (14) பித்த உதானவிருதம், (15) பித்த வியானவிருதம், (16) பித்த ஸமானவிருதம். (17) பித்த அபானவிருதம் (18) சிலேஷ்ம பிராணவிருதம் (19) சிலேஷ்ம உதானவிருதம், (20) சிலேஷ்ம வியானவிருதம், (21) சிலேஷ்ம சமானவிருதம், (22) சிலேஷ்ம அபானவிருதம் என, பித்தம் சிலேஷ்மம் இவற்றுடன் பிராணாதி பஞ்சவாயுவும் கூடினது பத்து விதம் ஆக ஆவிருதம் இருபத்திரண்டாம். இவை பிரத்தியேக நிதானத்திலே கூறப்பட்டிருக்கின்றன.

த்வக்சோணிதாந்தரே பித்தம் மாம்ஸேமேதோந்தரே கபர் :

அஸ்தி மஜ்ஜாச்ரிதோ வாயுக த்ரிதோஷ : சுக்லஸம்பவ :

வாதஸ்தானம்.

பக்வாசய கடிசந்தி ச்ரோத்ராஸ்தி ஸ்பர்சேந்திரியம்—

ஸ்தான வாதஸ்ய தத்ராபி பக்வாதானம் விசேஷத :

பித்தஸ்தானம்.

நாபிராமாஸ்யஸ்வேதோ வசீசோ ருதிரம் ரஸ :

த்ருக்ஸ்பர்சனஞ்ச பித்தஸ்ய நாபிரத்ர விசேஷத :

ச்லேஷ்மஸ்தானம்.

உர:கண்டசிரக்லோமா பர்வாண்யாமாஸயோரஸ :

மேதோக்ராணஞ்ச ஜிஹ்வா சகபஸ்யஸு தார மூர :

வாய் ஆவிராதம்.

பக்வாயசத்தில் வாபியுரகோபமாய் நாபி....விரல் உயரம் இடப்புறத்திலே இருக்கிற அக்கினியை சூழ்ந்து கொண்டால் உடம்பு நோகும். நடுங்கும். சேமுறிக்கும். தெப்புவரும். தலை கனத்து நோவு கூடி இருக்கும். வயிற்றுக்குள் எரிந்து பின்னர் வாயுகொள்ளும்.

பித்தாவிருதம்.

நாபியண்டை அக்கினிசுவாலை அதிகமாகி பக்கவாசயத்திலே வாயு சூழ்ந்து கொண்டால் வயிறும் உடம்பும் எரியும். தீர்த்த தாகமாம். வயிறு நோகும். உடம்பும் நோகும். சிரோபிரமமாம். பித்தபிரமமாம். உடம்பு திமிர்த்துபோம். வாய் கசக்கும். காரம், உஷ்ணம், புளிப்பு, உப்புப்பொருள் மேல் இச்சையாம். குளுமையான பொருளிலும் இச்சையாம்.

கபாவிருதம்.

மார்பு முதலான ஸ்தானத்திலே இருக்கிற சிலேஷ்மாக்கினியைச் சூழ்ந்து உடம்பு சீயமாய் திமிர்த்துப் பாரித்துக்கொண்டு சோம்பலாக இருக்கும். தீபனம் கூடாது. வயிற்றைச் சுற்றி நோகும். உஷ்ணத்தில் இச்சையாக இருக்கும்.

துவகாவிருதம்.

அன்னத்தை வாயு ஆவரணமாகச் சூழும்போது சூலை கொஞ்சமாக இருக்கும்.

ரத்தாவிருதம்.

ரத்த தாதுவிலே பித்தம் பிரகோபிக்கும். உடம்பு எரிச்சலாகும். மேலே குளிர்ந்த தண்ணீர் வார்த்துக்கொள்ள இச்சையாகும்.

மாம்ஸா விருதம்.

பித்தம் பிரகோபித்து மாம்ஸதாதுவில் சேர, உடம்பு புண்ணுக நோகும். உடம்பு பிடிப்பாக வட்டமாக கல்போலே வீக்கமாக இருக்கும். நாலுவர்ணமாகக் காணும். மேலே கடுகு போலே வெடிக்கும்.

மேதஸா விருதம்.

மேதஸிலே பித்தம் பிரகோபித்தால் உடம்பு மயிர் சிலிர்த்து நடுங்கும். உடம்பு வீங்கும். அரோசமாம்.

அஸ்த்யாவிருதம்.

அஸ்தி தாதுவிலே பித்தம் பிரவேசித்தால் உடம்பு அதிக உஷ்ண மாக இருக்கும். அஃது ஊசியிட்டுக் குத்துகிறப்போல் நோகும். சோம்பல் அடைந்து எலும்புரைகள்தோறும் நோகும். எரிச்சல் உண்டாயிருக்கும்.

மஜ்ஜாவிருதம்.

மஜ்ஜா தாதுவிலே பித்தம் பிரகோபித்தால் உடம்பு சேமுறிக்க கொட் டாவிகொள்ள, தெப்புவர, உடம்பு, நோக கைகால் குத்திக் குடையும்.

சுக்ராவிருதம்.

சுக்ர தாதுவிலே பித்தம் பிரகோபித்தால் இந்திரியம் நஷ்டமாகும். அசனம் பண்ணினால் உடம்பு நோகும். அசனம் ஜீர்ணமான பின்னர் வயிறு நோதல் நிற்கும்.

மூத்ராவிருதம்.

மூச்சு அடிக்கடி விடும். வயிறு ஊதும். தொப்புளுக்குக் கீழ் கனத்துக் கொண்டு இருக்கும்.

மலாவிருதம்.

மலம் அடைத்துக்கொள்ளும், மலாசயத்திலே நோதலும் உண்டாயிருக்கும். அசனம் பண்ணிஞல் வயிற்றில் எரிச்சல் ஆகும். அசனம் நன்ருக ஜீரணியாமல் மலத்திலே அசனப்பருக்கையுடன் வயிறு கழியும்.

ஸர்வதாத்வாவிருதம்.

பித்தம் வாயுவும் கூட பிரகோபிக்கும். அதஞல் இடுப்பு, நடுத்தொடை, உடம்புச்சந்து இவற்றில் நோதல் உண்டாகும்.

பிராணவாய்வாவிருதம்.

இருதயத்திலே இருக்கிற வாயுவை பித்தம் சூழ்ந்தால் சித்தப்பிரமமமாகும். மயக்கம் உண்டாகும். வயிறும் இருதயமும் நோகும். வயிறு ஊதும். நெஞ்சு எரியும். வாந்தி உண்டாகும்.

உதானவாய்வாவிருதம்.

கழுத்திலே இருக்கிற வாயுவை பித்தம் சூழ்ந்தால் சித்தப்பிரமமுண்டாகும. நெஞ்சில், வயிற்றில் எரிச்சல் உண்டாகும். வாய் உலர்ந்து போகும். நெஞ்சு கரகரப்பாக இருக்கும்.

வியானவாய்வாவிருதம்.

ஸர்வாங்கமும் எரிச்சல் காணும், நோதல் உண்டாகும். உடம்பு இளைத்துச் சோர்ந்து வருத்தம் கொள்ளும். சந்துக்குச்சந்து நோதல் காணும்

சிலேஷ்மவாவும் பிராணுதிபஞ்சவாயுக்களுடைய ஸம்ஸர்க்கத்திஞலுண்டான ஆவிருதம்.

ப்ராணவாயுவிஞல் உடம்பு பாரித்து தினவுகூடி சோம்பல் அடைநது தூங்குவது போலே இவற்றின் அசந்து ஆரோசகமாகி வாந்தி உண்டாகும். வாய்நீரூறும். தும்மல், வெள்ளோக்காளம், உப்புசம், இருமல் இவை உண்டாகும்.

சிலேஷ்மமும் உதானவாயுவும் சேர்ந்தால் உடம்பு பாரித்துக்கொள்ளும். அரோசகம், குரலடைப்பு உண்டாகும், தேக வர்ணமும் பலமும் கெடும்.

சிலேஷ்மமும் வியானவாயுவும் சேர்ந்தால் உடம்புச் சந்துகள் தோறும் நோதல் காணும். கடுகி நடக்க முடியாது. நாக்குப் பிடித்துக் கொள்ளும். உடம்பு பாரித்துக்கொள்ளும். ஒரு வேளை நடந்தால் கால் மடங்கி விழும். கால் விலங்கு போட்டாப்போலே தடுமாறும்.

சிலேஷ்மம் ஸமான வாயுவுடன் சேர்ந்தால் உடம்பு வியர்க்கும். ஊமத்தங்காய் தின்றுற்போல் மயங்கிக் காணும்.

சிலேஷ்மம் அபானவாய்வுடன் சேர்ந்தால் மலத்திலே ஆமம் கட்டி விடும். மலம் தங்கித் தங்கி விடும். மலம் விடுகிறபோது ஆசனம் உஷ்ணமாக இருக்கும்.

இரசம் இரத்தம் இவற்றில் ஆவிருதபித்தம் பிரகோபித்தால் பைத்தியாதிகாரமாக இருக்கும். மாம்ஸத்திலும் மேதஸிலும் பித்தம் பிரகோபித்தால் சிலேஷ்ம பித்த லக்ஷணம் உண்டாயிருக்கும்.

இரசத்திலும் மஜ்ஜையிலும் பித்தம் பிரகோபித்தால் வாத பித்த லக்ஷணம் உண்டாயிருக்கும். சுக்கிலத்திலே பித்தம் பிரகோபித்தால் த்ரி தோஷலக்ஷணமுண்டாயிருக்கும்.

பித்தாவிருதத்துக்கு விரேசனத்துக்கு கொடுக்கவும். சீத திரவியங் களைக் கொடுக்கவும். . . . . பண்ணவும். வாதபித்தத்துக்கு உஷ்ண மான திரவியங்களைக் கொடுக்கவும். பலாதைலம், பஞ்சமூலகஷாயம், ஸ்வேதகர்மம், விரேசனகர்மம் பண்ணவும். சிலேஷ்மாவிருதத்துக்கு வாந்திக்குக் கொடுக்கவும்.

கல்யாணகிருதம்.

இளநீர், தண்ணீர்விட்டான்சாறு, கலியாணபூசணிச்சாறு, கருப்பஞ்சாறு, முசுமுசுக்கைச்சாறு, சீந்தில் தண்டுச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, பொன்னுங்கணிச்சாறு, நரபாலைச்சாறு, வெள்ளத்திக்காய்ச்சாறு இவை சரிகூட்டி பால் நெய் கூட்டி, அமுர்தவெள்ளிக்கிழங்கு, நன்னாரிவேர், இலுப்பைப்பூ, நெய்தல், தாமரைக்கிழங்கு, இதன் தாது, அதிமதுரம், கோட் டம், கொத்துமல்லி, சாதிக்காய், குங்குமப்பூ, கற்பூரம், சந்தனம், இலா மிச்சை, முடிவாழம், சண்பகமொட்டு, லவங்கம், சாதுர்ஜாதகம், பூமிசர்க் கரைக்கிழங்கு, நரபாலைவேர், திருநாமப்பாலை, சீரகத்துவயம், திராக்ஷை, கர்ஜூரம், தேவதாரம் இவற்றை அரைத்துக் கரைத்து வடித்து நசியம் விட்டு உள்ளுக்குக்கொள்ள, நாற்பது வகை பித்தம், இருபத்திரண்டு வகை ஆவிருதபித்தம் இவை தீரும்.

நல்லபீர்க்கம்விதையை முலைப்பாலில் அரைத்து நசியம் விட வாந்தி யாகி பித்தம் தீரும்.

ஜீவந்தியதலேகியம்.

நரபாலைவேர், சீந்தில்தண்டு, தசமூலம், சிற்றாமுட்டிவேர், பேரா முட்டிவேர், சிறுகுமிழம்வேர், இலாமிச்சம், முடிவாழம், கந்தம், பூமி சர்க்கரை, திருநாமப்பாலை, பற்ப்பாடகம், முத்தக்காசு, தாமரை, அல்லி, நெய்தல்கிழங்கு, ஓரிலைத்தாமரை, பேய்ப்புடல், அருகம்வேர், விளாம் வேர், வேப்பீர்க்கு, சிறுகீரைவேர், இவற்றைக் காஷாயமிட்டு, நரிபயற்றுச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லகோவைச்சாறு, பொன்னுங்காணிச் சாறு, நீற்றுப்பூஷணிக்காய்ச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, வெள்ளரிக்காய்ச் சாறு, தண்ணீர்விட்டான்சாறு, இளநீர், கருப்பஞ்சாறு, மாதுளஞ்சாறு, கொம்மட்டிமாதுளம்பழச்சாறு, ஆடாதொடைச்சாறு, கற்பூரவல்லிச் சாறு இவையெல்லாம் கஷாயத்துடன் கூட்டி, வெல்லம் நாலுபடி கூட்டி, அதிரச பாகுபதமாகக் காய்ச்சி விழுங்க, சாதுர்ஜாதாகம், அதிமதுரம் இந்துப்பு, சீரகத்வயம். திரிகடுகு, திப்பிலிமூலம், தாளிசம், கொத்து மல்லி, கோஷ்டம். . . . . யவக்ஷீரம், தேவதாரம், சிறுகீரைவேர், முருங்கைப்பூ, பூமிச்சர்க்கரைக்கிழங்கு, திராக்ஷை, கற்ஜூரம், இலுப்பைப்பூ, தாமரைத்தாது இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து பாலில் கலந்து ஆறவிட்டு, தேன்விட்டு கலந்து குடுவையில் எடுத்து உட்கொள்ள, ஸர்வ பித்தம், ஆவிருதபித்தம், ஆமலபித்தம், சிரோபிரமம், சித்தப்பிரமம்,

வாந்தி, எரிச்சல், தாகம், மூர்ச்சை, காமாலை, ரத்தபித்தம், சிலேஷ்மம், எலும்புருக்கி, பெரும்பாடு, சர்வபைத்தியவிகாரம் தீரும். இந்த யோகத்திலே கிருதம் பண்ணவும். இந்த யோகத்திலே தைலம் பண்ண வும். இந்த யோகத்திலே கஷாயம் பண்ணவும். யுக்தியாக உட்கொள்ள லாம். பித்தம் தீரும்.

சிலேஷ்மரோகம்.

இஃது இருபது விதம். அதிகநித்திரை, உடம்பு திமிர்த்து மரத்துச் சோம் பலடைதல், உடம்புபாரித்தல், வாய்நீர் ஊறல், வாய்த்தித்தித்தல், வாயால்எடுத்தல், ஆமாசயத்தில் . . . . . . கல்போட்டாப் போலே இருத்தல், உடம்புகூசுதல், உடம்பு . . . . பருத்தல், கண்ணில் பூளைசார்தல், தும்மல்வந்து மூக்கிலே எரிதல், மூக்கிற்சளி இவைகள் சிலேஷ்ம வகைகள். சுரமுதலான சர்வவியாதிகள் மேலே உஷ்ணம் அதிகமானால் இருமல் காண்பிக்கும். அதற்கு காசத்துக்குச் சொன்ன கல்கம், கஷாயம், தைலம், கிருதம், லேகியம், இவற்றைப் பண்ணவும்.

அதிதூல சிகிச்சை.

பருத்த உடம்பு இளைக்க பரிகாரம்—சிலேஷ்ம பித்தத்திலே உடம்பு பருக்கும். மனசிலே சிலேஷ்ம பித்தமாக அதிசங்கம் பண்ண, வெயில் காலத்திலே வழி நடந்து சஞ்சரிக்க, சுஷ்கதிரவியம், உஷ்ணதிரவி யம், வாதகோபத்ரவியம் இவைகளை புசிக்க தேகம் இளைக்கும்.

பஞ்சகோலம், மிளகு, சிறுதேக்கு, திரிபலம், விளங்கம், அதிவிடையம், பெருங்காயம், திரிக்ஷாரம், இந்துப்பு, சீரகத்துவயம், கொத்துமல்லி இருமஞ்சள், கோஷ்டம், வட்டத்திருப்பி இவற்றைச் சூர்ணம் பண்ணி இவை களுடன், மஹிஸாக்ஷி, குக்குலு, கல்மதம், லோகபஸ்பம் கூட்டி, தேனில் உட்கொள்ள, கொள்ளுக்கட்டுச்சாறுடன் உண்ண, உடம்பு இளைக்கும்.

வேங்கைவயிரம், இலுப்பைவயிரம், பச்சீந்தில்தண்டு, முத்தக்காசு, மாவிலங்கம்பட்டை, பஞ்சகோலம், வட்டத்திருப்பி, காட்டு நாட்டு முருங்கைப் பட்டை, சிற்றுமல்லி, திரிபலை, இவைகளைக் கஷாயமிட்டு, குக்குலு சூர்ணம், கல்மதம் இவைகளைக் கூட்டி உட்கொள்ள, தேன் கூட்டிக் கொள்ள, உடம்பு இளைக்கும். நாற்பது நாள் கொள்ளவும்.

வர்ணதிலேகியம்.

வேங்கை, மாவிலங்கம்பட்டை, காட்டு நாட்டு முருங்கைப்பட்டைகள், தச மூலம், கொடிவேலிவேர், செவ்வியம், சாரட்டைவேர், காட்டாமணக்கம் வேர், காவேளைவேர், கரிசலாங்கண்ணி, நொச்சில், வெட்பாலை, கண்டங் கத்திரி, ஆயில்பட்டை, புங்கம்பட்டை, சிறுகுறிஞ்சான், ஆதண்டை, தொட்டி லான் பட்டை, உப்பிலிப்பட்டை இவற்றை இடித்துக், காஷாயமிட்டு, வெல்லத்தை அதிரசபாகுபதமாகக் காய்ச்சி, பஞ்சகோலம், மிளகு, விளங்கம், குக்குலு, கல்மதம், திரிபலை, திரிக்ஷாரம், வட்டத்திருப்பி, பெருங்காயம், மல்லிப்பூண்டு, சாரட்டைவேர், காஞ்சனம், கடுகுரோகணி, அதிவிடையம், இருமஞ்சள், இவையெல்லாங்கூட்டிச் சூரணம்பண்ணி, லோகபஸ்பம் கூட்டி, பாகில்

துழாவி ஆறவிட்டு தேன் கூட்டி தினம் உள்ளங்கைகொண்டது உட்கொள்ள பருத்த உடம்பு இளைக்கும். வயிற்றிலுண்டான வியாதிகளெல்லாம் தீரும்.

வேங்கைவைரம், சாரட்டைவேர், கொடிவேலிவேர், இருமுருங்கை வேர், தசமூலம், மாவிலிங்கம்பட்டை, சிறுகுறிஞ்சான், ஆயில்பட்டை, புங்கம்பட்டை, ஆதண்டை, உக்கரப்பம்பட்டை, தேவதாரு, மூங்கில்தழை, இவற்றைக் கஷாயமிட்டு, கொள்ளுக்கட்டுச்சாற்றை நல்லெண்ணெயில் கூட்டி, குப்பைமேனிச்சாறு, கொட்டைக்கரந்தைச்சாறு, பொடுதலைச்சாறு, செருப் படிச்சாறு இவற்றைக் கஷாயத்துடன் கூட்டி, பஞ்சகோலம், வெள்ளை வெங்காயம், பெருங்காயம், விளங்கம், கடுக்காய், கடுகுரோஹணி, திரிக்ஷராம், அதிவிடையம், இருமஞ்சள் வட்டத்திருப்பி, கல் மதம், குக்கிலு கூட்டி அரைத்துக் கரைத்து வடித்து கொள்ளுக்கட்டுச் சாறுடன் வர்ஞாதிகஷாயத்திலே கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். அப் யங்கனம் பண்ணவும். சர்வ வாதமும் தீரும். உடம்பு பருத்துப்போம்.

அஸநாதிகணம்.

வேங்கைவைரம், அப்ரகவிருக்ஷம், மருது, ஆயில், கருங்காலி, பெரு வாகை, இருள்விடு(?), ஆட்டுக்கொம்புப்பாலை, செவ்வள்ளிக்கொடி, பனை பாலாசு, அகில், மராமரம்(?), நமை (நளம்)(?), கமுகு, வெட்பாலை, ஆட்டுச் செவிமருந்து(?), குதிரைச்செவிமருந்து (?) இவற்றைக் கஷாய மிட இந்த கணத்தைலம் லேகியங்கள் பண்ண, பருத்த உடம்பு இளைக்கும். வாதத்தில் சரீரம் இளைக்கும். பித்தத்தில் சரீரம் சமனாக இருக்கும். சிலேஷ் மத்தில் உடம்பு பருக்கும். உடம்பு இளைப்பதற்கு, முன்கூறிய சிகிச்சை களையச் செய்யலாம். இளைத்ததேகம் பருக்க, வாதத்திலே தேகம் இளைக்கும். துக்கத்தினால் போஜன ஸௌக்ய மில்லாவிட்டால் உஷ்ணமான திரவியத்தைப் புசித்தால் ஜ்வாராதி தோஷங்களினால் அதி வியாயாமத்தினால் தேகம் இளைக்கும். இறள் பாலிறள் (?), பூசணிக்காய்ச்சாறு, கருப் பஞ்சாறு, தண்ணீர்விட்டான்சாறு, அமுக்கராவேர்ச்சாறு, இளநீர், நட்பாலைவேர், பொன்னுங்காணிச்சாறு, பூமிச்சர்க்கரைக்கிழங்குச்சாறு, இவற்றைக் கஷாயமிட்டுக்கொண்டு பால் நெய் கூட்டி அமுக்கராக் கிழங்கு நிலைப்பனைக் கிழங்கு, பூமிச்சர்க்கரைக்கிழங்கு, சிறுகீரைவேர், சாதுர்ஜாதகம், சீரகத்துவயம், திராக்ஷை, கர்ஜூரம், நன்னாரிவேர், கொத்துமல்லி இவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து நெய் செய்து பருகலாம். உடம்பு பருக்கும். க்ஷயம், பாண்டு, காமாலை தீரும். முயல், மீன், கலை, உடும்பு செம்மறியாடு, ஊர்ப்பன்றி, எருமைப்பால் தயிர் நெய், மனோரம்யமான அன்னம் இவற்றைப் புசித்தால் அத்தியந்த தோஷத்தினாலே உடம்பு பருக்கும். சிலேஷ்மாதிக்கம் மாற வஸ்துவை புசிக்கவும். க்ஷய சிகிச் சைக்கு இப்பிரயோகத்தைப் பண்ணவும்.

உதராவிருதசிகிச்சை.

வாயு ஊர்த்வமுகமாய் மலம்ஜலம் விடாமல் வயிறு அள்ளூ எல்லாம் வாயுவினால் குத்துமென்று முன்னே நிதானம் சொல்லி இருக் கிறது.

அதற்கு காட்டாமணக்கம்வேர், வெள்ளை கருப்புக் காக்கணம்வேர்கள், சிவதைவேர், கிலுகிலுப்பைவேர், ஆமணக்கம்வேர், கொன்றைவேர், நிலாவாரைவேர், புங்கம்வேர், ஆயில்வேர், கொடிவேலிவேர், திரிபலம் கொள், சாரட்டைவேர், வெள்ளைவெங்காயம் இவற்றைக் கஷாயமிட்டு திரிக்ஷாரம், இந்துப்பு பஞ்சகோலம் இவற்றைச் சூர்ணம் செய்து, பெருங் காயம் கூட்டி உட்கொள்ள உதராவிருதம் தீரும். இதற்கு வயிறு கழியா விட்டால் இந்திரவல்லிசூரணத்தைக், காசெடை எரண்டத்தைலத்தில் விட்டு உட்கொள்ள உதராவிருதம், மஹோதரம் இவை தீரும். தழுதாழை இலையை இடித்து வறுத்து ஆசனத்துக்குக் கட்ட நோதல், வீக்கம் இவை தீரும்.

அவிபத்திசூரணம்.

திரிபலை, திரிகடுகு, விளங்கம், சாதுர்சாதகம், முத்தக்காசு, இவை சரி கூட்டி, இதற்கு மூன்றுபடி சிவதை கூட்டி, எல்லாவற்றிற்கும் சரியாக சர்க்கரை கூட்டி வெந்நீரில் உட்கொள்ள வயிறு கழியும். நோவும்தீரும். இஃது அவிபத்தி சூரணம். வெள்ளாட்டு மூத்திரத்திலாவது கோமூத்திரத்திலா வது மேகனுதரஸத்தை உட்கொள்ளவும். பேதியாகும் வஸ்துக்களை உட்கொள்ள உதராவிருத்தம் தீரும்.

சர்மகீலகம்பாலுண்ணி.

பாலுண்ணி மூன்று விதம். வாதம் பித்தம் சிலேஷ்மம் என சர்மகீலகம் மூன்று விதம். மேட்டிரம், நாபி முதலான ஸ்தானங்களிலே உற்பத்தியாம். சிறுகடுகுபோலே பாதி கண்டுபோலும், பாதி பிச்சில மாகவும் இருக்கும். வியானவாயு பிரகோபித்து சிலேஷ்மத்தோடே கூடி மூலத்தினுடைய தோஷத்தினாலே தேஹத்திலே ஆணி அறைந்தாப்போல் ஸ்திரமாக இருக்கும். அதற்கு பாலுண்ணி என்று பெயர். வாத சர்ம கீலகம் கருத்தகல்லுப்போலே இருக்கும். பித்த சர்ம கீலகம் சிவந்து மிருதுவாக இருக்கும். சிலேஷ்ம சர்மகீலகம் வெளுத்துக் கட்டினுப்போலே இருக்கும்.

ஆறும் அத்தியாயம்.

அதிஸாரம், கிரஹணி, விஷூசி.

அதிஸாரம் வாத பித்த சிலேஷ்மாதிகளால் தனித்தனியே ஒவ்வொன்ருகவும், திரிதோஷத்தால் ஒன்றும், பயத்திஞல் ஒன்றும், சோகத்திஞல் ஒன்றும் ஆக ஆறு விதமாகும்.

அதிகமாக நீர் குடித்தல், உலர்ந்தமாம்ஸங்களையும், குருவான வஸ்துக்களையும், தேஹத்துக்கு ஹிதமாகாத வஸ்துக்களையும், நன்ருக பாக மாகாத போஜனங்களையும், எள், அவரை முதலானவற்றையும், மிக உஷ்ணமான திரவியத்தையும் புசித்தல், எண்ணெய், நெய் அதிக மாகப் புசித்தல் வயிற்றிலே கிருமிகள் அதிகமாக விளைதல் இவற்ருல் மூலத்தில் வயிற்றில் ஸப்ததாதுவில் வாய்வு பிரகோபித்து அதஞல் மந்தம் உண்டாகி வாயு மாலாசயத்திலே பிரவேசித்து மலமெல்லாம் ஜலமயமாய் வயிற்றில் திரவமாகவும் நாஞவிதமாகவும் தோன்றி வயிறு கழியும்.

வாதாதிஸாரம்.—வயிறு ஜலமாகக் கழியும். சிறுகச் சிறுகக் கழியும். வயிறு கழிகிறபோது வெகு நேரம் நொந்துகொண்டு கழியும், சத்தம் கேட்கும். ஆஸனம் உஷ்ணமாக இருக்கும். நுரைத்துக் கழியும். வெல்லம்போல் வழும்புபோலும் எண்ணெய்போலும் மலம் கழியும். அடிக்கடி மயிர் சிலிர்க்கும். உடம்பு நோகும். வயிற்றில் எரிச்சல் உண்டாகும். அள்ளுகள் இரையும்.

பித்தாதிஸாரம்.—சிவந்து மஞ்சளித்துப் பச்சென்று ரத்தமாய் வயிறு கழியும்.

சிலேஷ்மாதிஸாரம்.—வெளுப்பாக பொருமலமாக ஆமம் கூடி நூலிழை போல் கழியும். அதிகமாகக் கழியும். நாறும். மலம் ஒருகால் கட்டவும் ஒருகால் அதிகமாகக் கழியச்செய்யும். கீழ்வயிறு கனத்திருக்கும். மலம் கழியாவிட்டாலும் நோதலுண்டாகி எப்போதும் மலம்விட வருவது போல் இருக்கும். உடம்பு திமிர்த்து அரை நித்திரையாக அரோசகமு உண்டாயிருக்கும். சோம்பல், அடிக்கடி மயிர் சிலிர்த்தல், உடம்பு பாரித்திருத்தல், தொப்புள், தலை, ஆசனம், அள்ளைகள் கனத்திருத்தலுண்டாகும்.

ஸந்நிபாதாதிஸாரம்.—திரிதோஷங்களுடைய லக்ஷணமுண்டாயிருக்கும்.

பயாதிஸாரம்.—மனக்கலக்கத்திஞல் வாயு பிரகோபித்து மலத்தைத் திரவமாகச் செய்யும்.

சோகாதிஸாரம்.—வாத பித்தாதி ஸார லக்ஷணமாயிருக்கும்.

அதிஸாரம் ஸாமாதிஸாரமென்றும் அஸரமாதிஸாரமென்றும் இரண்டு வித லக்ஷணம் பெற்று இருக்கும்.

ஸாமாதிஸாரம் ஜலத்தில் மலத்தைப்போட்டால் அஃது அமிழும்.

அஸாமாதிஸாரம் ஜலத்தில் மலத்தைப்போட்டால் மிதக்கும்.

அஸாத்ய லக்ஷணம்.—மாம்ஸ பிண்டம் போலவாவது, மாம்ஸங் கழுவின நீர்போலவாவது, மயிலிறகு சாயையாய் நாலுவர்ணமாக மின்னிக்கொண்டு எண்ணெய், நெய், பால், தயிர், கழுநீர், கொழுப்பு, கள், தயிர்நீர், இலந்தைப் பழச்சாறு, கரித்தண்ணீர், குளிர்ந்தபானகம், சுக்கிலம், தேன், நல்லரதம்போல் கழிய, பெருமலமாக. அதிக நாற்றமுடன் கனமாகவும் சாறுபோலவும் நிணத்துடனும் நூலிழைபோலும் கடுகுபோலும் கழிய, மலத்தை ஈக்கள் மொய்க்க, ஆஸனம் திறந்து சந்துகள் நோக, பலஹீனமாக இருக்க, அன்னத்துவேஷமாக, தாகமாக, சுவாஸமெடுக்க சுரம் கனமாகவர, வாந்தியாகி வயிறும் ஊத, இப்படிக் காணில் அஸாத்தியம்.

கட்டறவை.

கட்டறவை, ரஸசேஷமென்றும் விஸ்பஷ்டமென்றும் தூமமென்றும் விதூமமென்றும் ஆக நாலு விதம். உண்ட அன்னம் ஜீர்ணமாகிறதற்கு முன்னும் பின்னு தலை கனத்துக்கொள்ளும். உடம்பு வியர்க்கும். உடம்பு நோகும். தலைநோய் உண்டாகும். தாகமாம், புளியேப்பமாவது பொரியரிசியேப்பமாவது வரும். படுக்கை கொள்ளாது. வயிறு ஊதும் அள்ளைகள், வயிறு, தொப்புள், தலை, குத்தி நோகும். வயிறு இரையும்.

கிரஹணி.

வயிறு கழிச்சலுக்கு ஏற்ற பரிகாரம் செய்யாது விடினும், அருந்தும் அன்னம் வெகுநேரம் சென்று ஜீர்ணித்தலும், இவற்றால் ஜாடராக்கினி மந்தப்படின் வயிறுபொருமிக் கழியின் அதனைக் கிரஹணி யென்பர். வாதக்கிரகணி, பித்தக்கிரகணி, சிலேஷ்மக்கிரகணி, ஸந்நிபாத கிரஹணி என கிரஹணி நான்கு விதம்.

ஸாமான்ய லக்ஷணம்.—வயிறு எப்போதும் வாயு கொண்டு பசியில்லாமல் இருக்கும். இரண்டுநாள், ஒருநாள் மலம் கட்டுப்பட்டும், மற்றொரு நாள் மலம் கழிந்தும், காணும். புளியேப்பம் வரும். வாயில் நீரூறும். அரோசகம், வாந்தி, தாகம், உடம்பு கட்டிஞுப்போல் இருக்கும். காது அடைத்துக்கொண்டு இரையும். வயிறு அள்ளைகள் இரையும். உடம்பு இளைத்துக் கருகிப்போம். ஜ்வரம் வரும். மயக்கமாகும். தலை நோய் உண்டாகும். உடம்பு, கைகால், கீல்கள், வயிறு, முகம் இவை வீங்கும்.

வாதகிரஹணி.—காது இரையும். அள்ளை, வயிறு, மார்பு, கழுத்து, பிடரி நோகும். நாலுநாளைக்கொருகால் இரண்டு நாளைக்கொருகால் வயிறு எடுத்துப் பெருகும். புளியேப்பம் வரும். பசி தெரியாது. தாஹமாம். உண்ட அன்னம் நன்றாக தேகத்தில் சேராது. வயிறு ஆமம் கூடி நுரையுடன் சப்தித்து வயிறு கழியும். அடிக்கடி சிறுகச் சிறுக மலம் விடும். ஆஸனம் கடுக்கும். இருமல், உப்புசம் உண்டாயிருக்கும்.

பித்தக்கிரஹணி.—மலம் மஞ்சளித்தும் கலந்தும் திரவமாகவும் கழியும். நாற்றமாக வாந்தியாம். மார்பு மிடறு எரியும். வாய் கசக்கும். தாகம், வியர்வை, சோர்தல், மயக்கம் உண்டாகும்.

சிலேஷ்மகிரஹணி.—வாந்தி, அரோசகம், வாய்நீரூறல், இருமல், உப்புசம் உண்டாயிருக்கும். நெஞ்சு பாரித்து கல்லு இட்டு அடைத்தாப் போலே,

இருக்கும். சளிபோல் மூக்கில் நீர் பாயும். கீழ் வயிறு கனத்து இருக்கும். வாய் உப்பு உரைத்தாவது, தித்தித்தாவது இருக்கும். அடிக்கடி உடம்பு மயிர்சிலிர்க்கும். மலம் கழியும். உடம்பு அற இளையாது.

ஸந்நிபாதக்கிரஹணி.—ஸர்வதிரிதோஷலக்ஷணமும் உண்டாயிருக்கும். வாயு, கல்லடைப்பு, குஷ்டம், பிரமேஹம், மஹோதரம், பவுத்திரச் சிலந்தி, மூலம், கிரஹணி இவை எட்டுக்கும் மஹாரோகமென்று பெயர். இவை வேரறக் குணமாகாது. முன்னே அதிஸாரத்தின் அஸாத்ய லக்ஷணம் சொல்லி இருக்கிறது. அந்த அஸாத்ய லக்ஷணமே இதற்கும்.

அதிஸார சிகிச்சை.

அதிசாரத்துக்கு நாலுநாள் சென்றபின் மருந்து கொடுக்கவும். வட்டத் திருப்பி, சிறுகாஞ்சொறிவேர், கோரைக்கிழங்கு இவற்றை இடித்து வறுத்துக் கஷாயமிட்டு ; சாதிக்காய், இலவம்பிசின், திப்பிலி, சுக்கு, அதிவிடையம், அசமதாகம், லவங்கம், புளியம்விதைத்தோல், கழற்பருப்பு இவற்றை வறுத்துப் பொடி செய்து இந்தப் பொடியைக் கஷாயத்தில் காசெடைத் தூவிக் குடிக்க, அதிஸாரம், வயிற்றுநோதல், ஜ்வரம் தீரும்.

தாடிமாதிசூரணம்.—மாதுளையோடு, விளாலுடு, வில்வப்பழத்தின்தசை, இலவம்பிசின், சித்தாப்பூ, அசமதாகம், அதிவிடையம், குடசப்பாலைப்பட்டை, சுக்கு, பீமரப்பட்டை, குராசாணி, ஓமம், வெட்பாலைப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், வெள்ளைலோத்திரம், வெண்கடுகு, சிறுகடுகு, புளியங்கொட்டை மேல்தோல், மாங்கொட்டை, வட்டத்திருப்பி, திப்பிலி, ஜாதிக்காய், முத்தக் காசு, லவங்கம், கழல்பருப்பு இவற்றை உலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணி சட்டியைக் காயவைத்து மூன்று காசெடை சிவக்க வறுத்து தேனிலாவது, வெள்ளாட்டுத்தயிரிலாவது கொடுக்கவும். ஆமாதிசாரம், ரத்தம், வயிறு நோதல், கிரஹணி, மூலம், ஸர்வவிதமான வயிறுக்கழிச்சலும் தீரும்.

அரள்வாதிகஷாயம்.—பீமரப்பட்டை, அதிவிடையம், முத்தக்காசு, மாதுளங்காய், வில்வக்காய், இவையெல்லாம் இடித்து, சிவக்க வறுத்து, பன்னிரண்டு வராகனெடை போட்டு, ஒன்றரைப்படிநீர் விட்டு, எட்டி லொன்றுகக் காய்ச்சிக் குடிக்க, சர்வஅதிசாரமும், சுரமும் தீரும்.

கிரஹணிகஜகேஸரிரஸம்.—ஜாதிலிங்கம் காசெடை 1, ரஸம் காசெடை 1, லோஹபஸ்மம் காசெடை 1, நாபி காசெடை 1, திரிகடுகு காசெடை 1, கொடிவேலி வேர்ப்பட்டை காசெடை 1, ஜாதிக்காய் காசெடை 1, ஊமத்தம் விதை காசெடை 1, வெண்காரம் காசெடை 1, அபினி காசெடை 1, அசமதாகம் இலவம்பிசின் காசெடை 1, லவங்கம் காசெடை 1, இந்துப்பு, கந்தகம், கழல் பருப்பு, அப்ரகம், அதிவிடையம், இவையெல்லாங்கூட்டி, கலுவத்திலிட்டு கஞ்சாதழைச்சாறு ஊமத்தம்வேர்க்கஷாயம் அலரியாதி கஷாயம் வாழைப்பூ நீர், தென்னம்பாளைச்சாறு இவைகளில் அரைத்து மாதுளம் காயில் புடமிட்டு அரைத்ததை, கடலை போலுருண்டைபண்ணி தேனில், வெள்ளாட்டுத் தயிரில், அரள்வாதிகஷாயத்தில் கொடுக்கவும். சர்க்கரையில் கொடுக்க அதிசாரம், கிரஹணி தீரும்.

ஜாத்யாதிவடகம்.—ஜாதிக்காய், வட்டத்திருப்பி, குட்சப்பாலைப்பட்டை, திரிகடுகம், அதிவிடையம், வறட்சுண்டை, இலவம்பிசின், ஓமம், மாங்கொட்டை, லவங்கம், சித்தாதகாம்பூ (?), புளியம்விதைத்தோல், வெண்பூலா, கரும்பூலாப்பட்டைகள், ஆவாரைவேர்ப்பட்டை, விடத்தேரிவேர், நாருக்கொழுந்து(?), இளம்தும்பி(?). . . . . வில்வப்பழத்தசை, மாதுளையோடு, அபினி, கழல்பருப்பு இவை சரி கூட்டி, மாதுளம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து, மாதுளம்காய்விதை வாங்கி அதற்குள் அடைத்து, சீலைமண்கொண்டு புடமிட்டு எடுத்து தயிரில் அரைத்து, சுண்டைக்காய் போலுருண்டை பண்ணி, வெள்ளாட்டுத்தயிரில், தேனில் கொடுக்கவும். அதிசாரம், கிரஹணி, விஷூசி தீரும்.

ஜாத்யாதிவடகம்.—பழுதையம் (?) ஜாதிக்காய் வராகனெடை, வட்டத்திருப்பி, வெட்பாலைப்பட்டை, திரிகடுகம், அதிவிடையம், வறட்சுண்டை, கீழ்க்காய் நெல்லி, இலவம்பிசின், குடசப்பாலைப்பட்டை, இருசீரகம், வசம்பு, ஓமம், முத்தக்காசு, மாங்கொட்டை, நீர்முள்ளிவிதை, லவங்கம், சித்தரச்சாம்பூ (?), தென்னம்பாளை, புளியம்விதைத்தோல், குறுஞ்சான்வேர்ப்பட்டை, வெண்சூரிவேர்ப்பட்டை, ஆவாரம்வேர்ப்பட்டை, விடத்தேரிவேர்ப்பட்டை இவற்றின் . . . . . இளங்காய், வில்வப்பழத்தசை, மாதுளம் ஓடு, விளாம்ஓடு, வெள்ளிலோத்ரம், கழல்பருப்பு, இந்துப்பு, அபினி, வெண்காரம் இவையெல்லாம் சரி கூட்டி, வாழைப்பூச்சாறு, கஞ்சாஇலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இவற்றில் அரைத்து, மாதுளங்காயை உள்ளே குடைந்து விதையை வாங்கி அதில் அரைத்தமருந்தை அடைத்து, மேலும் மூடி சீலைமண்கொண்டு எருமுட்டைகொண்டு புடமிட்டு எடுத்துக்கொள்ளவும். இதை நெய்யிலாவது எண்ணெய்யிலாவது அனுபானமாகக்கொடுக்கவும்.

மாதுளம்காயோடே தயிரைவிட்டு அரைத்து இலந்தைக்கொட்டை போல் உருண்டைபண்ணி உலர்த்தி தேனில், வெள்ளாட்டுத்தயிரில் கொடுக்கவும். சர்வ அதிசாரமும் கிரஹணியும் தீரும்.

பாடாதக்ரஹரீதகீ.—வட்டத்திருப்பி, புங்கம்பட்டை, ஆயில்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, கொளிஞ்சில் சமூலம் முக்க . . . . சமூலம், சாரடைவேர், கருவேப்பிலைவேர், சிறுகாஞ்சொறிவேர்ப்பட்டை, வேளைவேர், பாவட்டைவேர், குடசப்பாலைப்பட்டை, வெட்பாலைப்பட்டை, ... பேய்மிரட்டி இவற்றின் கஷாயம் படி 8 வெள்ளை வெங்காயத் தைலம். . . . . . . பொடுதலைச்சாறு, மோர் படி 2, உப்பு காசெடை 20, இவை யெல்லாம் இரண்டு படியாகக் காய்ச்சவும். அதிவிடையம், அத்திப்பூ, கடுக்காய் இவற்றைக் கறுப்பு நிறமாக வறுத்துக் கொள்ளவும். பஞ்சகோலம், மிளகு, வட்டத்திருப்பி இவற்றை இடித்து வறுத்துக் கொள்ளவும். வசம்பை சுட்டுக் கரியாக்கிக் கொள்ளவும். திரிக்ஷாரம் இந்துப்பு, ஜீரகத்துவயம், சாதிக்காய், லவங்கம், ஓமம், பெருங்காயம், கழல் பருப்பு இவையெல்லாம் சரி கூட்டிச் சூரணம்பண்ணி அந்தக் கஷாயத்தை கூழ்போல் செய்து சூரணம்போட்டு கலந்து இறக்கிவைத்து நல்லெண்ணெய் 2–படி, நெய் 1–படி கூட்டி, பொடுதலைச்சாறு படி 1,

புளியாரைச்சாறு படி 1, பாவட்டையிலைச்சாறு படி 1, சாறணையிலைச் சாறு படி 1, கஞ்சாயிலைச் சாறு படி 1, இவற்றை எண்ணெய்யுடன் கூட்டி பாவட்டம் வேரை கல்கமாக அரைத்துக் கரைத்து பாகமாகக் காய்ச்சி அதற்குள் முன்கூறிய கூழைக் கலந்து அடிபற்றாமல் கிளறிக்கொண்டு அடுப்பிலே வைத்து சுண்டாங்கிப்பதமாக வறுக்கவும். மெழுகு பதம் கண்டு இறக்கிவைத்து 10–நாள் சூரிய புடத்தில் வைத்து எடுத்துவைக்கவும். தினம் நெல்லிக்காயளவு தேனில் புரட்டி வெள்ளாட்டு தயிரில் உட்கொள்ளவும். தேஹம் சஹிக்கிறதறிந்து ஏற்ற அளவு கொள்ள வும். சர்வஅதிசாரமும், மூலக்கிரஹணிகளும், குல்ம சூலைகளும், வாயுக் களும், ஸர்வ வயிற்றுவியாதிகளும் தீரும்.

கீழ்க்காய்நெல்லிப் பிரயோகம்.

கீழ்க்காய்நெல்லித்தழையுருவின கொம்பு சிறுக நறுக்கினது ஒரு செரை, சீரகம் வராகனெடை இவற்றை நெய்யில் சிவக்க வறுக்கவும். கீழ்க்காய் நெல்லியை சிவக்க வறுக்கவும். நகத்தினால் கிள்ளினால் பொடியாய் முறுகிருப்போலே வறுத்து நெய்யில் அரைத்து கூழ்போலே ஆனதுக்குள் ஸேதுபந்தனரஸம் முதலான மாத்திரைகள் கூட்டிக்கொடுத்தாலும் நல்லது. வெறுமனே கொடுத்தாலும் ரத்தாதிசாரம் முதலானவை தீரும். சிறுகத் தின்ன மேலெடுத்த ரத்தக் கழிச்சலும் தீரும். சிறு பிள்ளைகள் வயிற்றுக் கடுப்பும் தீரும்.

வரட்சுண்டை, சீரகம் இவற்றை நெய்யில் சிவக்கக் காயவைத்து வறுத்து அரைத்து நெய்யிற் குழப்பிக் கொடுக்க ரத்தாதிசாரம் தீரும். சாதிக்காயை சிறுகவெட்டி நல்லெண்ணெய்யில் சிவக்க வறுத்து எண்ணெய்யில் அரைத்துகுழப்பி நக்கவும். அதிசாரம் தீரும்.

மிளகு, ஓமம் இவற்றைச் சிவக்க வறுக்கவும். கடுக்காயைக் கருக்கிச் சுடவும். இவற்றுடன் உப்பைக் கூட்டி சூரணம் பண்ணி சட்டியில் விளாங் காயளவு அசனம் போட்டு கர்ஷபிரமாணம் சூர்ணம்சேர்த்துப் குழப்பிப் போட்டு, பெருங்கரண்டி நல்லெண்ணெய் விட்டு, சட்டியை அடுப்பில் வைத்து காய்ச்சவும். எண்ணெய் காய்ந்ததும் மேற்கூறிய குழம்பைப் போட்டு கிளறவும். அது களி போல் ஆகும். அதை கலத்தில் வைத்து உண்ணவும். வயிறுநோதல், ஆமக்கழிச்சல், வயிறு இரைதல் இவை தீரும்.

நெல்லிக்காயளவு கடுகும், உப்பும், நார்த்தம்பழச்சாறுவிட்டு அரைத்து கரண்டியில் வைத்து நாலுகாசெடை நார்த்தம் பழச்சாறு, கரண்டி யில் வார்த்து ஒரு முட்டை நல்லெண்ணெய் விட்டுக் கிளறி, அசனத்தில் பிரதம கபளம் பண்ணவும். வயிறுநோதல், ஆமக்கழிச்சல் இவை தீரும்.

இப்படி சுக்கு மிளகு திப்பிலி ஓமம் இவைகளை உப்புக்கூட்டி, நாரத்தம் பழச்சாற்றில் அரைத்து எண்ணெய் வார்த்து களிபோலே கிளறி பிரதம கபளத்தில் உண்ணவும். நோதல், இரைச்சல் இவை தீரும்.

சேதுபந்தனரஸம்.—அதிவிடையம், வெண்காரம், சாதிலிங்கம் ரஸம், இலவம்பிசின், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, கந்தகம், ஜாதிக்காய், லவங்கம், ஊமத்தங்காய், கழல்பருப்பு, கொடிவேலி வேர்ப்பட்டை, அபினி,

பச்சைக்கற்பூரம் இவை சரி கூட்டி, இதில் பாதி பலகறை பஸ்மமாவது, சங்கு சுட்ட சுண்ணும்பாவது கூட்டவும். அப்ரகம் கூட்டி கலுவத்தில் வைத்து ஊமத்தம் வேர்க்கஷாயத்தில் அரைக்கவும். கஞ்சாத்தழைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவற்றைச் சேர்த்து அரைக்கவும். அரைத்ததை மாதுளங்காயில் வைத்துமண்பூசி வறட்டியால் புடமிடவும். (இல்லாவிடின் வாழைப்பூவி லாவது வைத்துப் புடமிடவும்.) எடுத்ததை வாழைப்பூச்சாறு அருளாதி கஷாயம் (?) அத்திப்பால் இளம்தும்பிக்காய்க்கஷாயத்தில் அரைத்து சிறு சுண்டைக்காய் போலே உருண்டை பண்ணி வெள்ளாட்டுத்தயிரில் கொடுக் கவும்.

கீழ்க்காய்நெல்லியை நெய்யில் வறுத்து அரைத்ததில் வரட்சுண்டையில் வறுத்து அரைத்ததில் சாதிக்காயெண்ணெய்யில் அரைத்து அருளாதி கஷா யத்தில் ஜாத்யாதி தாடிமாதி வடகம் கூட்டி கொடுக்கவும். சர்வஅதிசாரம், கிரஹணி, வயிறுநோதல், இரைச்சல், கடுப்பு, ரத்தக்கழிச்சல், இவை தீரும். இது சேதுபந்தனரசம்.

அழிஞ்சில் சாம்பல்.

அங்கோலமூலத்வக் பஸ்மபுராணசங்க்யயா
பாடாதைவதரோர்பஸ்ம ப்ரத்யேகம் ரவிஸங்கியயா
பூப்பலவல்கலம் தக்தசூர்ணிதம் ரவியங்க்யா
மிச்ரயித்வா துதத்ஸர்வம் ஸ்தாபயேச் சர்ம சராவேதி ?
தத: ஸர்வாதிஸாரேஷு விஷூச்யாம் க்ரஹணீகதே
ப்ரபாஹிணே ஸக்தேஷு மதுநாசாண மாத்ரகம்
த்ருசதுர்வாரகம்தேயம் பத்யம் லகுதரம் ஹிதம்.

அழிஞ்சில்பட்டைச்சாம்பல் காசெடை, வட்டத்திருப்பி, செம்மணிச்சம் பட்டை (?) வேலம்பட்டைசுட்டச்சாம்பல் காசெடை ? இவற்றைக் கூட்டி ஒரு வராகனெடை ஆட்டுத்தயிரிலாவது தேனிலாவது உட்கொள்ள கிரஹணி தீரும்.

பலகரையை ஒட்டிவிட்டு மேலோடு மூடிசீலைமண்பூசி காயவைத்து கஜபுடமிட்டு எடுத்து கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி புடமிட்டு இப்படி மூன்று தரம் செய்ய பஸ்மமாம். வராடிக பஸ்மம், காசெடை ரஸம் காசெடை, சாதிலிங்கம் காசெடை நாபி காசெடை, வெண்காரம் காசெடை, யவக்ஷாரம் காசெடை, கெந்தகம் காசெடை, இந்துப்பு காசெடை, அப்ரகம் லோகபஸ்மம் இவை ஒவ்வொன்றும் காசெடை, இவற்றை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து உருண்டையாக உருட்டி வாழைப்பூவில் புடம் வைத்து மூடி, கட்டிமண்பூசி சட்டிக்குள் வைத்து மடக்கிட்டு ஓரத்துக்கு மண் பூசி காயவைத்து கஜபுடமிட்டு ஆறின பின் எடுத்து கலுவத்தில் வைத்து கஞ்சாத்தழைச் சாற்றில் அரைத்து சுண்டைக்காய் போலே உருண்டைபண்ணி தேனிலாவது வெள்ளாட்டுப்பாலிலாவது அனு பான விசேஷங்களிலாவது கொடுக்க, கிரஹணி, அதிசாரம், மந்தாக்கினி, வயிறு நோதல், வயிறு கழிதல், சீதக்கழிதல் இவை தீரும்.

வேறொருவிதம் :—நல்ல பலகரையை முன்னே சொன்னபடி பஸ்மம் பண்ணவும். சங்கை மடக்கில் சுட்டு அதை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்து கஜபுடமிட்டு பஸ்மம் பண்ணவும். பலகரை பஸ்ப

வராகனெடை 50, ரசம், சாதிலிங்கம், நாபி, வெண்காரம், யவக்ஷாரம், ஸத்தி க்ஷாரம், கந்தகம், இந்துப்பு, அப்ரகம், லோகபஸ்மம் இவை ஒவ்வொன்றும் வராகனெடை 5 இவற்றை எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்து ஒன்றாக உருண்டை பண்ணி கொடுக்கலாம்.

சங்கபஸ்மத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து கல்கத்தைப் பூசி உலர்த்தி மடக்கில் வைத்து மடக்கிட்டு, மூடி, சீலை மண்கொண்டு கஜ புடமிட்டு ஆறவிட்டு எடுத்து சங்கபஸ்மம் கலுவத்தில் வைத்து கஞ்சாத்தழைச்சாறு விட்டு அரைத்து சுண்டைக்காய்போலுருண்டை பண்ணி, உலர்த்தி, உண்டையைத் தேன், ஆட்டுத்தயிர்விட்டு, பேய்மிரட்டி பழுதையம் (?) காவேளைச் சுட்ட கஷாயம் இப்படி அனுபான விசேஷத்தில் கொடுக்கவும். கர்வமான வயிறு கழிச்சல் எல்லாந் தீரும்.

விஷூசி நீர்ப்பாடு.

நீர்ப்பாடு ஐந்து விதம் :—அவை வாதம், பித்தம், சிலேஷ்மம், ஸம்ஸர்க்கம், ஸந்நிபாதம் என்பனவாம். இந்த ஐந்தும் அலசகமென்றும் தண்டகாலஸக மென்றும் இரண்டு விதமாகவும் சொல்லப்படும்.

நீர்ப்பாட்டுக்குக் காரணம். வயிறு அறியாமல் அன்னகாதகளை உண்டவனுக்கு துர்ப்பலமாய் மந்தாக்கினிபட்டு மலம் நன்றாக விடாமல் பசியில்லாப் பசியில் உண்டவனுக்கு வாதாதிதோஷங்கள் பகவாசயத்திலே பிரவேசித்து அன்னத்தை சீரணம் பண்ணவொட்டாமல் பக்கவாசயத்திலே முள்ளிட்டுப் பரப்பினாப்போலே வயிறு அள்ளைகள் இரையும். நெஞ்சிற்கும் கீழ் வயிறுக்கும் வசிப்போட்டாப்போலே குனிய நிமிர வொட்டாமல், வயிறு செம்மிப் பிகுந்துகொண்டு வாந்தி விரேசனம் காணும்.

அலசகம் மலத்தோடேகூடி மாக்கரைத்தாப்போலும் மாம்பழச்சாறு போலும் நாழிகைக்கு ஒருதரம் கழியும். அடிவயிறும், அள்ளைப்புறமும் முள்பரப்பினாப்போலே இருக்கும். தண்டாலசகம் வாயிலே அதிகமாக எடுக்கும். வயிற்றில் கம்பரிசிநீர் போலும், குடமுடைந்தது போலும், நாலுபடி, இரண்டு படி வீதம் கழியும். அடிக்கடி கழியும். உடம்பெல்லாம் ஊசியிட்டுக் குத்துகிறாப்போல் நானாவிதமாக நோகும். மஹாதாகம், கால் கை 'இசிவு வாங்கும். ஒருநாள் இரண்டுநாள் நில்லாமலும் போகும். வயிற்றில் மஹாஉபத்திரவம் பண்ணும். இதற்கு தண்டாலசகமென்று பெயர்.

விஷூசியின் அஸாத்யலக்ஷணம் விடிய பத்து நாழிகைக்கு எடுக்கும். வாந்தியாவது வயிறுவது குடமுடைத்தாப்போல அதிகமாக எடுக்கும். பின்னர் உடனே நிற்கும். பின்பு மேலும் கீழும் நொந்து வயிறு ஊதிக்கொண்டு வயிற்றுக்குள் முள்ளிட்டுக் குத்துகிறாப்போலே நோகும். வயிற்றிலே மஹாஉபத்திரவம் பண்ணும். உடம்பை சோரப்பண்ணும். உடம்பு மயங்கிவரும். கால் கை குளிர்ந்துபோம். முகம்வியர்வை காணும். மஹாதாகமாம். சிலபேருக்கு நானாவர்ணமாக வயிறு கழியும். பல் உரைகட்டினாப்போலே இருக்கும். உதடு வீங்கி கறுத்து இருக்கும். கால் கை நீட்டமுடக்க எழுந்திருக்க முடியாது. படுத்த இடத்திலே இராமல் பலவிதமாகத்

திரும்பும். கண் குழி விழுந்து சிவந்திருக்கும். குடல் இடிய விழும். சில பேருக்கு கைகால் மரம் போட்டாப்போலே அசைக்கமாட்டாமல் விழுந்து கிடக்கும். மஹாதாஹமெடுக்கும். குடத்து நீர் சொரிந்தாப்போலே வியர்த்து சொரியும். உடம்பு அல்லித்தண்டுபோல் குளிர்ந்துபோம். பிரமமாக வார்த்தை வரும். நெஞ்சு தொய்ய தலைவேதனை யுண்டாகும். வாந்தி இல்லாமல் இருக்கும். வேறு சிலபேருக்கு மூக்கு, கைகால் குளிர்ந்து இருக்கும். வயிறு நில்லாமல் நீராய் பெருகும். அஃது அஸாத்யம் 30 முதல் 60 நாழிகைக்குள் கொல்லும்.

விஷூசீ சிகிச்சை.

கோஷ்டம், அதிவிடையம், பஞ்சகோலம், வட்டத்திருப்பி, காவேளை, வசம்பு, ஓமம் இவற்றை ஒரு சட்டியிலே போட்டு ஒருபடி நீர்விட்டு மூடி நாலிலொன்ருக வற்றக்காய்ச்சி இரண்டு பணவெடை பெருங்காயம் கூட்டிக்குடிக்க விஷூசீ, வயிறுநோதல் இவை தீரும்.

வெல்லவாந்தழை(?) ஒருபிடி குறுக நறுக்கி சிவக்க வறுத்து இரண்டு படி நீர் விட்டு அதில் உப்பு ஓமம் இரண்டு காசெடை, கணம் புல்லுக்கதிர் சுட்டசாம்பல்நாலுகாசெடை, வசம்புசுட்டசாம்பல் காசெடை, வட்டத் திருப்பி சுட்ட சாம்பல் கசெடை, சுக்கு 2-காசெடை, ஒவ்வொன்று போட்டு எட்டிலொன்ருகக் காய்ச்சி, காசெடைபொறித்தவெண்காரம் லவங்கம் காசெடை கூட்டிஉட்கொள்ள விஷூசீ, தாகம் இவை தீரும்.

விளாவிலை ஒருபிடி, சீலையில் பொட்டணம்கட்டி ஒருபிடி, நெற் பொரியும், வில்வக்கட்டைஅரைத்தசந்தனம் நெல்லிக்காயளவு, சுக்கு இரண்டு வராகனெடை, இவற்றை இரண்டுபடி நீரில்போட்டுக் கஷாயமிட்டு அந்தக் கஷாயத்தை வடிகட்டிக் கொடுக்கவும். விஷூசீ, வாந்தி, தாகம் இவை தீரும்.

கணம்புல்லுக்கதிரை சட்டியிலிட்டு, உப்பு கூட்டிக் கருக்கி ஒரு படி நீர் விட்டு கஷாயம் காய்ச்சி இரண்டு காசெடை வெந்தயமாவது வில்வக் காயாவது தென்னம்பாளையாவது கருக்கி சுட்டு இவற்றைக் கஷாயமிட்டு நேக அரைத்த காசெடை மருந்தும், ஒருசெரை கஷாயத்தில் கலந்து கொடுக்கவும். விஷூசீ தீரும்.

மூக்கரட்டைவேரை நெருப்பில் வாட்டி மோரில் அரைத்துக் கொடுக்க விஷூசீ தீரும்.

இளநீரை மேல்சீவி ஒரு வெந்நீரில் (?) நாலு காயை போட்டு வேக வைத்து எடுத்து ஆறினபின் அதனை வெட்டி நீர்வாங்கி, லவங்கம் (துருத்து ?) காசெடை, பொரித்த வெண்காரம் காசெடை, கூட்டிக்கொடுக்க விஷூசீ, தாகம், உடம்பெரிப்பு இவை தீரும்.

காலில் இசிவு வாங்கினால் இரண்டு குதியிலும் அறிவாளைக்காயப் போட்டு அரிவாளைப் (பிடங்கிலே ?) பிரம்ஹரந்திரத்திலே சூடேருந்தனையும் வைக்க ஸர்வவாயுவும் உடம்புநோதலும் உப்புசம், விக்கல், வயிறு ஊதல் நோதல் யாவும் தீரும். குதியிலே அவசியம் ரக்ஷை போடவும்.

வாந்திக்கு வில்வமூலாதி அஞ்சனம்.

வில்வவேர், உரைத்தசந்தனம், துளசி, இளம்புங்கம்விதை, கிரந்தி, தகரம், தேவதாரு, சந்தனம், திரிபலை, திரிகடுகு, மனோசிலை, வெண்காரம், மரமஞ்சள் இவை சரிகூட்டி வெள்ளாட்டுமூத்திரத்தில் அரைத்து உருண்டை பண்ணி கண்ணில் பயிற்றம் பருப்பு அளவு இட, விஷூசீ, பாம்பு, தேள், மற்று முள்ள விஷக்கடிகள், ஜ்வரம், பூதப்பிரேதங்கள் இவை விட்டு ஓடும்.

காடிச்செகம்.

நாலுபடி காடியைக் காய்ச்சி சாம்பலைக் காடியில் கொட்டி கிளறி கீழே கொட்டி அதன்மேல் எருக்க இலையைப் பரப்பி அதன்மேலே வயிற்றை வைத்து படுத்துக்கொண்டு வயிறு அள்ளைகள் எங்கும் காய்ச்ச வயிறு நோதல், வயறுஇரைச்சல் இவை தீரும்.

முசுமுசுக்கையிலைச்சாறு ஒரு சேர், அரிசிக்குப் பதம் பிடித்து அந்த அரிசியை இரண்டு படி நீரில் போட்டு, காசெடை உப்பும் போட்டு, கஞ்சி காய்ச்சிக் குடிக்க வாந்தி தீரும்.

விஷாரிரஸம்.

கந்தகம்காசெடை, பொரித்தவெண்காரம், சாதிக்காய், லவங்கம், அபினி, திரிகடுகு இவை ஒவ்வொன்றும் வரானெடையை கலுவத்தில் வைத்து கஞ்சாயிலைச்சாறு வார்த்து அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து குன்றிபோலுருண்டை பண்ணி சர்க்கரையிலாவது தேனிலாவது முன்னே சொன்ன மருந்துகளிலாவது கொடுக்க விஷூசீ தீரும்.

மாதுளங்காய்க்குள் விஷூசீ ரஸம் வைத்து மண்பூசி காயவைத்து எருமுட்டையில் புடமிட்டு எடுத்து, அம் மாதுளங்காயை அரைத்து உருண்டை பண்ணவும். இந்த உருண்டையை அனுபானத்தில் கொடுக்க விஷூசீ தீரும்.

ஈரவெங்காயத்தைத் துவைத்து இரண்டு படி சாறெடுத்து, காய்ச்சி உடம் பெல்லாம் பூச, உடம்பு குளிர்ந்து போதல், மாருட்டமாகப் புரளுதல், கை கால் இசிவு வாங்குதல், அடிக்கடிவியர்த்தல், மற்றும் விஷூசீயினுல் தேஹத்தின்மேல் தோன்றும் உபத்திரவமெல்லாம் தீரும்.

விழிஇலையைத் துவைத்து நீர்விட்டுப்பிசைந்து சாறு இரண்டுபடி காய்ச்சி உடம்புக்குலேபிக்க ஈர வெங்காயத்துக்குச் சொன்னபடி உபத்திரவ மெல்லாம் தீரும்.

திருஷ்டி தோஷ சிகிச்சை.

ஓர் ஆள் சாப்பிடுவதை வேறு ஒருவன் குறித்துப் பார்த்து இச்சித்து உமிழ் நீரை விழுங்கினுல் போஜனம் பண்ணினவனுக்கு திருஷ்டி தோஷம் உண்டாகும். வயிற்றிலே வியாதி வரும். வயிறு ஊதிக்கொள்ளும். மந்தாக் கினியாகும் அன்னம் ஜீர்ணமாகாது. புளியேப்பம் வரும். வயிறு நோகும். வயிறு இரையும் அன்னத்துவேஷமாகும். தேஹம் இளைத்துப்போகும். உடம்பு கருகிப் போகும். பலஹீனமாகும்.

இதற்கு, முதலிலே தானுண்ட வஸ்துவை முன்பு பார்த்தவனுக்கு போஜனம் பண்ணிவைக்கவும். பிராமமண போஜனமும் பண்ணிவைக்கவும். புக்தஞ்ஜராதிவடகம்(?) பண்ணி பக்ஷிக்கவும்.

வெள்ளைக்காக்கணம்வேர், திரிகடுகு, சாரணைவேர், கடுகுரோகணி, வெண்காரம் இவை சமன் கூட்டி அரைத்து வெந்நீரில் கழற்கொட்டைப் பிரமாணம் கொடுக்க விரேசனமாம். அதிகமாகக் கழிந்தால் ஆவாரம்வேர்பட்டையை மோரில் அரைத்துக் குடிக்க வயிறு நிற்கும். ஒட்டரை, திரிகடுகு, கழல்பருப்பு, இந்துப்பு, திரிபலை, சாரட்டைவேர், செவ்வியம், கொடிவேலிவேர், திப்பிலிமூலம், காடியிலாவது ஜலத்திலாவது கஷாயமாகக் காய்ச்சிக் குடிக்க திருஷ்டிதோஷத்தினுல் வந்த உகஸகாஜீர்ணுதி தீரும்(?).

திருஷ்டி மந்திரம்.

அகஸ்த்யம் கும்பகர்ணம்ச மஞ்ச படபாநலம் ஆஹாரபரிணுமார்த்தம் ஸ்மரா மிஸவ் ருகோதரம் பவஜீர்ணே வாதாபே. இந்த மந்திரத்தைச் சொல்லி தொப்புளைத்தொட்டு மந்திரிக்கவும். நாட்டுக்கோழி காட்டுக்கோழி கருங்கோழி வெண்கோழி இந்த நான்கு கோழிகளையும் பிட்டுக் கல்லைத் தின்று, கல்லைஅறுத்து மண்ணைத்தின்று, மண்ணை அறுத்து, நெல்லைத் தின்று, நெல்லை அறுத்து, நாலுகோழியும் இறையாண்ற்போல குப்பை அவிந்தாற்போலே அவி அவி ஓங்காளி ஓம் பிடாரி ஓம் நம சிவாய ; இந்த மந்திரத்தைச் சொல்லி விபூதி தொட்டு வயிற்றை மந்திரித்து காத்திரி தோஷம் (?) திருஷ்டி தோஷம் வயிறு நோதல் தீரும்.

ஏழாம் அத்தியாயம்.

(பிளவை : விப்புருதி.)

பிளவை.

பிளவைப் பத்து விதம்—இது பிரமேஹத்தினலே உற்பத்தியாகும். அவை சராவிகை, கச்சபிகை, ஜாலினி, வினதை, அலஜீ, மஸூரிகை, ஸர்ஷபிகை, புத்திரிணி, விதாரிகை, வித்திரதி என்பனவாம். மேகத்துக்கு ஏழு வேகமுண்டு. ஏழாம் வேகத்திலே பிளவை தோன்றும். ஸந்திகளிலும் மர்மஸ்தானங்களிலும் தோன்றும். சுற்றி உயர்ந்துகொண்டு நடுக் குழிந்து கருத்து நோவோடுகூடி வீக்கமாயிருக்கும். வீக்கம் எடுத்தவுடனே ஜலம் பஹுவாக இறங்கும். தாஹமெடுக்கும்.

சராவிகை :—வீக்கம் மடக்கு கவிழ்ந்தாற்போல் இருக்கும்.

கச்சபிகை. :—வீக்கம் துடியாது. ஆமை முதுகுபோல் லக்ஷணம் பெற்று வீக்கமுடன் இருக்கும்.

வினதை ஜாலினி:—வீக்கம் அதி நோவோடே கிலேசப்படுத்தும். முதுகிது. மூலைமார்பு இவற்றுள் எங்காவது தோன்றும். மேல் சிறுத்து அடிப்பாகம் பெருத்து கருத்து இருக்கும்.

அலஜி :—வீக்கம் சிவந்து எரிச்சலுடன்கூடி இருக்கும். தாஹமெடுக்கும். மயக்கமாகும். இ·.து உச்சந்தலையிலே தோன்றும்.

மஸூரிகை :—நெஞ்சில் வீக்கம் தோன்றும். கல்லுப்போல சிறுகத் தோன்றும்.

ஸர்ஷபிகை :—இது நெஞ்சிலே தோன்றும். சிறுக வீங்கி சுற்றிலும் கடுகுபோல் கண்ணிடும். அதிகம் நோகும். சீக்கிரத்திலே கொல்லும்.

புத்திரிணி :—வீக்கத்தின் முகம் சேமாவுரல்புப்புரைபோலே கண்ணிடும்.

விதாரிகை:—இருளிக்கிங்குப்போலே வட்டமாக கடினமாக வீக்கம் இருக்கும்.

வித்திரதி :—ஸ்தனங்களிலே சந்துகளிலே தோன்றும். ஓரிடத்திலே தோன்றினல் நாலாறுவிடம் வீக்கம் தோன்றும். இந்தப் பிளவை வாத பித்த சிலேஷ்மங்களிலே எந்த தோஷம் அதிகமாக இருக்கிறதோ அந்த தோஷத்தின் குணம் அதிகமாகக் காண்பிக்கும்.

இவை மர்மஸ்தானங்களில் முதுகில் நெஞ்சில் தோளில் ஆசனத்தில் உச்சியில் கால்கைவிரல்களில் புருவத்தில் தோன்றின் அஸாத்யம். அதிகமாக குழி விழ விரைணத்துக்குள்ளே விரணம் உண்டாகி தாஹம் அதிகமாகி ஜ்வரம் கனமாகி பிரமம் மூர்ச்சை வர, விக்கல், ஸ்வாஸம், மஹா வேதனை உண்டானல் அவையும் அஸாத்தியம்.

பஞ்சநிம்ப குக்குலு கிருதம்.

வேப்பம்பட்டை, சீந்தில்தண்டு, ஆடாதோடை, பேய்ப்புடல், கண்டங்கத்தரி இவை ஐந்தும் ஒவ்வொன்றும் 10-பலம் எடுத்து இடித்து எட்டொன்றுகக் கஷாயம் செய்து, கஷாயத்துக்கு 4-இல் ஒன்று நெய்கூட்டி, வட்டத் திருப்பி, விளங்கம், தேவதாரு, கண்டதிப்பிலி, திரிக்ஷாரம், திரிகடுகம், மஞ்கள், மரமஞ்சள், சதகுப்பை, செவ்வியம், கோஷ்டம், வாலுளுவை, ஓமம், வெட்பாலேயரிசி, கொடிவேலிவேர், கடுகுரோகணி, வசம்பு, திப்பிலிசமூலம் மஞ்சிட்டி, அதிவிடையம், ஜீரகத்துவயம், ஏலரிசி, தேவதாரம் இவை அரைத்து வடித்து அந்த நெய்யை, காயவைத்துக் சுத்திபண்ணின குக்குலு பலம்–5 இடித்து வறுத்து நேகஅரைத்து நெய்யில் கரைத்து ஏலரிசி, கோட்டம், தேவதாரு இவற்றை இடித்து, சூரணம் பண்ணி கிருதத்தில் கலந்து கொள்ள பிளவை ஸர்வவாயுக்கள் குஷ்டம், நரம்புப்புண், பவுத்ரச் சிலந்தி, வயிற்றிலுண்டாகும்புழுக்கள், மூலரோகம், க்ஷயம், சுவாச காசம், சோபை, பாண்டு, வம்மதாத்திரயம்(?) விப்புருதி, வாதசுரோணிதம் தீரும்.

ஆல், அரசு, அத்தி, வஞ்சி, இருளி(?) அழிஞ்சிப்பட்டை, திரிபலை, ஆவாரை வேர் இவற்றைக் கஷாயமிட்டு நல்லெண்ணெய் 4-படி, ஏலம், குந்திருக்கும் பிசின், கோஷ்டம், சமுத்திரப்பச்சை, இலாமிச்சம், முடிவாழம், கம்பிப்பிசின், நகம், குக்குலு, குங்கிலியம், திருவட்டம், பிசின்(?) போளம், தேவதாரு, அகில், தாமரைத்தாதுவும் கிழங்கும், ஜடாமாம்ஸி, கச்சோலம், சாதிக்காய் இவற்றை அரைத்துக் கரைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் இட, பிளவைப்புண், எரிச்சல், தாஹம், சர்வமேஹங்கள், நீரிழிவு இவை தீரும்.

இந்திரக்ஷீரத்ருமதைலம்.

விளாம்பிசின், விடத்தேரிப்பிசின், பொரிசிலப்பிசின்(?) கருங்காலிப்பிசின், வேலம்பிசின் இவற்றை எண்ணெய்யில் பொரித்து, தேனில் உட்கொள்ள பஹுமூத்திரமும் மேகமும் தீரும்.

பருத்திக்கொட்டையை பஞ்சுபோல் இடித்து பிளவைக்குள் வைத்துக் கட்ட, பிளவையில் ஆணிகள் பிடுங்குண்டுபோம். தினமும் அரசம்பட்டைக் கஷாயத்தில் விரணத்தைக் கழுவவும். பிறகு செம்புண் கட்டினுல் வெண்பூலா இலையைக் கட்டவும். புண்ணுரந்தழையும்(?) அரசம்பட்டை கஷாயத்தில் கழுவவும்.

ஸோமரோகம்.

சோகத்தினுல் வமிதாள(?) கனமான கிருஷியினுல் பிறந்த இளேப்பினுல் அதிகஸ்திரீஸம்போகமானுல், மருத்தீட்டினுல், அன்னபானம் பசி வேளேக்குக் கொள்ளாவிட்டால் தேகத்தில் வாதாதி தோஷம் தாதுக்களிலே பிரகோபித்து தேஹத்தில் ஜ்வராதிகளே உண்டாக்கும். அதனுல் உடம்பு நோகும். தொப்புள் தலே நோகும். ஜலம் நானுவர்ணமாக விடும். உடம்பு நடுக்கம் கொள்ளும். வாய் உதடு உலர்ந்து போகும். தலே நோகும். ஈனவாக்காயிருக்கும். உடம்பு சக்தி கெடும். ஷட்ரஸத்தை புஜித்தாலும் நாக்குக்கு ருசி தெரியாது. திருப்தியையும் அடையாது. தாஹமுண்டாயிருக்கும்.

தேஹம் க்ஷீணித்து சந்திரன் போலே வெள்ளுத்துப்போகும். நடுவு கண்டச் சதையும் நோகும். இதற்கு சோமரோக மென்று பெயர்.

வாழைக்கிழங்குச்சாறு, தண்ணீர்விட்டான்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, சீந்தில்தண்டுச்சாறு இவை கூட்டி நெருஞ்சில்வேர், சிற்றேலம், தாமரைத் தாது, அமிர்தவள்ளிக்கிழங்கு, சாதுர்ஜாதகம், லவங்கம், த்ருஷிலம் (?) சந்தனம், நன்னாரிவேர், இலாமிச்சம், முடிவாழம், திராக்ஷை, கர்ஜூரம், அதிமதுரம், பூமிசர்க்கரைக்கிழங்கு இவற்றை அரைத்துக் கரைத்து நெய்கூட்டி வடித்து உட்கொள்ள, சோமரோகம், க்ஷயரோகம், தாஹதாபம், மேகம், சோபம், ரக்தபித்தம், எலும்புருக்கி இவை தீரும்.

சதாவேரிலேஹ்யம்.

தண்ணீர்விட்டான்சாறு, நெல்லிக்காய்சாறு, இளநீர், கருப்பஞ்சாறு, இவைகூட்டி சர்க்கரைப் போட்டு அதிரஸபதம் பாகுபோலே காய்ச்சி நெரிஞ்சில்வேர், நிலப்பனைக்கிழங்கு, திரிபலை, சதுர்ஜாதகம், அமிருதசர்க்கரை, தாமரைத்தாதுவும், பூவும், ஓரிதழ்த்தாமரை, தேவதாரு, திரிகடுகு, அதிமதுரம், இலாமிச்சம், முடிவாழம், சந்தனம், இலுப்பைப்பூ, ஜீரகத்துவயம் அரேணுகம், திராக்ஷை, கர்ஜூரம், குங்குமப்பூ, பூமிச்சர்க்கரை, அமுர்த வள்ளிக்கிழங்கு, சாதிக்காய், பாலைவேர், திருநாமப்பாலைவேர், நன்னாரிவேர் இவையெல்லாம் சூரணம் பண்ணி பாகில்கலந்து ஆறவிட்டுத் தேன்விட்டு பல்லாயிலே எடுத்து உட்கொள்ள சோமரோகம், க்ஷயம், ரத்தபித்தம், எலும்புருக்கி, ஸர்வ உன்மாதம், பைத்தியம் இவை தீரும்.

மூத்திராதிஸாரம்.

சோமரோகம் முற்றினால் மூத்திராதிஸாரமாம். . . . வாக சில மூத்திரம் இறங்கி தேஹம் நொந்தால் உடம்பெல்லாம் கண்டு கடிலையாகக் கிளம்பி உடம்பு வறண்டு வெளுத்து ஜலம் விடுகிறது. ஆட்டுக் கோமயம் போல நாறும் . . . தாஹதாபம்கூடி இப்படி தேஹம் க்ஷீணித்து அனேக உபத்திரவத்தைப் பண்ணும்.

பனம்பழம் முளைக்கப்போட்ட இளங்கிழங்கு, கர்ஜூரம், வாழைப்பழம், அதிமதுரம், சர்க்கரைத்தேனும் பாலுடன் அரைத்துக் குடிக்க மூத்திராதி சாரம் என்ற சோமரோகம் தீரும்.

உளுந்தால் பண்ணின பக்ஷணங்கள் கோயி(?) முதலான பாயசாதிகள் நல்ல ஷட்ரசத்தோடே புஜிக்கவும். மூத்ராதிஸாரம் என்ற ஸோமரோகம் தீரும். சுஷ்கான்னத்தை வர்ஜிக்கவும்.

தேற்றான்கொட்டையை சிறுகச்சிறுக கத்தரித்து ஊறப்போட்டு கல் உரலில் இடித்துப் பாலுடன் கூட்டி எண்ணெய் வார்த்து நீர்சுவர வறுத்து எண்ணெய்யுடன் உட்கொள்ள மூத்திரக்கிரிச்சிரம் தீரும்.

பிருங்காமலக தைலம்.

கருசலாங்கண்ணிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, இளநீர், வாழைக்கிழங்குச் சாறு, தண்ணீர்விட்டான்சாறு, இளநீர், நீர்பூசனிக்காய், சீந்தில்தண்டுச் சாறு, பொன்னாங்கண்ணிச்சாறு, இவைசரிகூட்டி சாற்றிற்குப் பாதி எண்ணெயைக் கூட்டி, அதிமதுரம், லவங்கம், திரிகடுகு, சதுர்ஜாதகம், சந்தனம்,

வெள்ளைலோத்திரம், மஞ்சள், மரமஞ்சள், அரேணுகம், தேவதாரம், கோஷ்டம், சடாமாம்ஸி, கடுகுரோகணி, தாமரைத்தாது, வட்டத்திருப்பி, திரிபலை, கொத்துமல்லி இவை சரிகூட்டி எண்ணெய்க்கு எட்டிலொன்று அரைத்துக் கரைத்து பால்கூட்டி, காய்ச்சிவடித்து உச்சந்தலைமுதல் உள்ளங் கால்வரை இட, சிரோரோகம், நாஸிகாரோகம், கர்ணரோகம், உடம்பெரிதல், உள்ளங்கால், உள்ளங்கை, கண்ணெரிச்சல், உடம்பில் காணும் கண்டுகழலை, இருச்சிரம் மேகம் இதனால் உண்டான ஏனைய வியாதிகளெல்லாம் தீரும்.

அரக்கெண்ணெய்யால் சோமரோகம் என்ற மூத்ராதிசாரம் தீரும்.

விளாம்பிசின், இலவு, வேம்பு, கருங்காலி, இருவேல், விடத்தேரி, இதன் பிசின், இருமஞ்சள், தேற்றான்கொட்டை, திரிபலை, கலைக்கொம்பு, புளியங் கொட்டைத்தோல், வாகைப்பிசின், வில்வக்காய்க்கூண்டு, அதிமதுரம், பூமிசர்க்கரைக்கிழங்கு, அமுர்தசர்க்கரை, வெள்ளைக்குன்றி, சந்தனம் சிலா சித்து, காந்தப்பிரகம், பருத்திக்கொட்டை இவற்றைக் கட்டுக்கொடி, கஷாயத் துடன் அரைத்து உருண்டை பண்ணி, தேனில் உட்கொள்ள பஹு மூத்திரங்கள் தீரும்.

விப்புருதி.

உஷ்ணமான திரவியங்களை தீக்ஷ்ணமான திரவியங்களை சுஷ்கமான திரவியங்களை புசித்தல், அதனால் தேஹத்தில் அனல் பிறந்து அந்த அனலில் சிலேஷ்மதோஷமுண்டாய், ரச ரத்த மாம்சம், மேதை, அஸ்தி, நரம்பு இவைகளில் தோஷம் பிரகோபித்து அந்த தோஷத்தினாலே அடிப்பாதங் கொண்டு சற்றும் அசையாமல் மஹாவேதனையோடேகூடி வட்டமாக வீக்கம் தோன்றும். ஜ்வரம் வரும்.

விப்புருதி ஆறு விதம்.—அவை வாதம், பித்தம், சிலேஷ்மம், ஸந்நி பாதம், இரத்தம், க்ஷதம் என்பனவாம். அன்றியும் ஸ்தன விப்புருதி என்றும் ஒன்றுண்டு.

மேலே வரும் விப்புருதி வட்டமாக உன்னதமாக நோவோடே வீங்கும். உள்ளே வரும் விப்புருதி தொப்புளிலே, தொப்புளுக்குக்கீழே வயிற்றுக் குள்ளே, மார்புக்குள்ளே, அபானத்திலே, மற்றும் வாய்வு சஞ்சரிக்கின்ற இடத்திலே, மஹாகனமாக புற்றுப்போலே குல்மம்போலே இருக்கும். விப்புருதி கண்டவுடனே எரிச்சலும் தாஹமும் தேஹத்தில் அலகு ஊன்றினால் போலே இருக்கும்.

வாதவிப்புருதி.—வீக்கம், அதிநோதல், கறுத்திருத்தல், மெள்ள முக மிடுதல், மெள்ள சீழ்க்கொள்ளுதல். வயிறு ஊதுதல், துடித்தல், இரைத்தல் என்பன காணும்.

பித்தவிப்புருதி.—வீக்கம் சிவந்து தாமிரச்சாயைப்பெற்று கருமை கொண்டு வீக்கம் இருக்கும். எரிச்சல், மயக்கம் காட்டும். தாஹமாம். வீக்கம் கடுகிக் காண்பித்து சீக்கிரமாகத் திரண்டு உருண்டையாகும்.

சிலேஷ்மவிப்புருதி.—வீக்கம் வெளுத்து தினவுடன் கூடி இருக்கும். குளிர் இருக்கும். கல்போல் மெள்ள வீக்கம் காண்பித்து மெள்ளத்

திரண்டு உடையும். மெள்ள சீழ் கொள்ளும். சேமுறிக்கும். உடம்பு குளிர்ந்து கூசியும் காணும். அரோசக அன்னத்துவேஷம் இருக்கும். ஓரிடம் மாறி வேறோரிடம் காண்பித்து ஓடிக்கொண்டு திரியும்.

சன்னிபாதவிப்புருதி.—தேகத்துக்குள்ளே வீக்கம் வீங்கினாலும் தேகத்துக்கு மேலே வீங்கினாலும் வாத பித்த சிலேஷ்மம் இந்த மூன்று வியாதியின் குணம் காட்டும்.

இரத்தவிப்புருதி.—இரத்தக்கோளாறால் உண்டாகும். கருத்தும் சற்று வெளுத்தும் காட்டும். சிறு கொப்புளங்கள் காணும். அதிகவலி, அழற்சி ஜ்வரம் இவை காணும்.

க்ஷதவிப்புருதி.—சஸ்திராதி காயத்தினாலே உண்டாகும். கழிஆட்டம் அதிகவழிநடை இவற்றால் உடம்பு நொந்து ரத்தம் கட்ட அதனால் பித்தாதிதோஷம் தாதுக்களிலே பரவ வீக்கம் உண்டாகும். பித்தவிப்புருதி லக்ஷணம் கூடியிருக்கும். அதிகமாக நோகும். எரிச்சல், கனஉபத்திரவம் கூடியும் இருக்கும்.

ஸ்தனவிப்புருதி.—பிள்ளை பெற்றவளுக்காவது கர்ப்பிணிக்காவது முலைப்பால் தோஷத்தினால் வாதாதிகள் பிரகோபித்து முலைவீங்கி வீக்கம் காணும். பிள்ளையில்லாதவளுக்கு முலைக்குத்து இல்லை.

விப்புருதிக்கு மருந்து.—விப்புருதி காண்பித்த உடனே மருந்து களைப் பூசவும் மருந்தூண்டி தரி விளக்கை (?) கொண்டு அனல் காட்டவும். கொம்பினாலே ரத்தம் வாங்கவும்.

காட்டுமுருங்கப்பட்டை, நல்லமுருங்கப்பட்டை, உப்பிலிப்பட்டை, புங்கம்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, சாறடைவேர், அமுக்கராவேர், ஆயில்பட்டை, மாவிலிங்கம்பட்டை, சேவகனார்க்கிழங்கு, செவ்வரலிவேர்ப்பட்டை, இவற்றை சதுரக்கள்ளிச்சாற்றிலாவது கோமூத்திரத்திலாவது அரைத்துக் கொதிப்பித்து வீக்கத்துக்குப் பூச, வீக்கம் காய்ந்துபோகும்.

எருக்கம்பாலை வீக்கத்துக்கு அடிக்க வீக்கம் கரையும். புனரித்தண்டு நறுக்கி வீக்கத்துக்குக் கட்ட வீக்கம் கரையும்.

வாணதிகணத்தை கஷாயமிட்டு திரிகடுகு குக்கிலு கூட்டிக்கொள்ள தேகத்துக்குள்வரும் விப்புருதி தீரும்.

மூக்காவேளைவேர், செங்கத்தாரிவேர்ப்பட்டை, வெள்ளைக்காக்கணவேர், இவற்றைப் பசுவின் பாலில் அரைத்துக்குடிக்க வயிறு கழியும்.

வயிறு அதிகமாகக்கழிந்தால் ஆவாரைவேர்ப்பட்டையை மோரில் அரைத்துக் குடிக்கக் கொடுக்கவும். மோரும் சோறும் உண்ணவும். வயிறு கழிதல் நிற்கும். வயிற்று விப்புருதி உடையும். பிறகு குக்கிலு இருதம் பண்ணிக்கொள்ள புண்ணாறும்.

குருட்டிகையிலையும் வெள்ளுள்ளியும் புழுங்கலரிசியுடன் இடித்துப் பிட்டவித்துத் தின்ன, வயிற்று விப்புருதி உடையும்.

புழுங்கலரிசியில் கள்ளிப்பால் கூட்டி அரைத்து எண்ணெய்யில் அடை சுட்டுத் தின்ன, வயிறு கழியும். வயிற்று விப்புருதி தீரும்.

வயிறு அதிகமாகக் கழிந்தால், ஆவாரைவேர்ப்பட்டையை மோரில் அரைத்து நெல்லிக்காயளவு உட்கொள்ள வயிறு நிற்கும். வாந்தியானால் சர்க்கரையைத் தின்னவும். நெல்லிமுள்ளியை மோரில் அரைத்து உட்கொள்ள வயிறு நிற்கும்.

புனரித்தண்டுச்சாறும் சிற்றாமணக்கெண்ணெயும் கல்லுப்பும் கூட்டி தக்க, வயிற்று விப்புருதி உடையும்.

மாவிலங்கம்பட்டை, சிறுகுறிஞ்சான்சமூலம், பெருங்குறிஞ்சான், தண்ணீர்விட்டான்கிழங்கு, கொடிவேலிவேர், வீழித்தழை, பம்பந்துராய், வில்வவேர், ஆட்டுக்கொடிப்பாலைப்பட்டை, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, ஆயில், புங்கம்பட்டை, தழுதாழைவேர், முன்னைவேர், காட்டுமுருங்கை, வேர், நாட்டுமுருங்கைவேர், தர்ப்பைவேர், ஆதண்டைவேர், சாரட்டைவேர், திரிபலை, அமுக்கராவேர், வேப்பலகு, இவற்றை இடித்துக் கஷாயமிட்டு, திரிபலை, கல்மதம், இந்துப்பு, பெருங்காயம், பஞ்சகோலம், குக்கிலு, இவற்றைச் சூரணம் பண்ணி, கஷாயத்தில் கலந்து குடிக்க, வெளியில் வந்த விப்புருதியும் உள்ளே வந்த விப்புருதியும் தீரும்.

முலைக்குத்துக்கு.—அதிமதுரம், எள்ளு, அரத்தை, மஞ்சள், நன்னாரி வேர், இவற்றை உத்தாமணிச்சாறு, சஹதேவிச்சாறு இவற்றில் அரைத்துப்பூச முலை வீக்கம் வற்றும்.

ஆலம்பட்டை, அரசம்பட்டை, அத்திப்பட்டை, ஆவாரப்பட்டை இவற்றை அரைத்து கொதிப்பித்துப் பூச முலை வீக்கம் வற்றும்.

மருதம்பட்டையும் தழையும், உத்தாமணிச்சாறு, க்ஷீரவிருக்ஷத்தின் பட்டை இவற்றைக் கஷாயமிட்டு நெய்கூட்டி. அதிமதுரம், மரமஞ்சள், நன்னாரிவேர் இவை கூட்டி அரைத்து வடித்துச் பூச, முலைக்குத்து, விரணம் இவை ஆறும். இவற்றை ஆமணக்கெண்ணெய் முதலானவற்றில் பண்ணி புண்ணுக்குத் திரிபோட, புண்ணாறும்.

நெய்யை முலையில் தடவி மந்திரிக்கவும்.

மந்திரம் :—இந்திரன் தங்கை மந்திரிகுமாரி, முலைக்குத்து வலித்து முறையோவென்றருள், உறையிலிருந்து உண்டைவனை வாங்கி, இலைக்கடை வெட்டி முலைக்குத்திப் போட்டேன், முலைக்குத்துவேதனை முலைக்கண்ணாலே போக ஸ்வாஹா.

முலைக்குத்துக்கு, எண்ணெய்தடவி சீப்பிலே மந்திரிக்க : இந்திரன் தங்கை மந்திரி, குமாரி வலமுலை வலித்து வாரா நின்றாள், இந்திரன் செக்கில் எண்ணெய்கொண்டு, இறையவன் கையில் சீப்பு வாங்கி, மந்திரம் விட்ட மஹரிஷி பேர்சொல்லி ஓதினேன், விரைந்து இரைந்து காடு திரிந்து, பால் சுரந்திட ஸ்வாஹா.

எட்டாம் அத்தியாயம்.

அண்டவாதம்.

வாதவிருத்தி, பித்தவிருத்தி, சிலேஷ்ம விருத்தி, ரத்தவிருத்தி, மேதோ விருத்தி, மூத்ரஜவிருத்தி, ஆந்திரவிருத்தி என அண்டவாதம் எழு விதம்.

ஹேது :—வாதப்பிரகோபமான திரவியங்களைப் புஜித்தல், சீதஜலத்தில் நெடுநேரமிருத்தல், பார்மானசுமைசுமத்தல், குதித்தல், தூரவழி நடத்தல், அச்வாரோஹணம், கஜாரோஹணம் பல காலம்செய்தல், ஸ்த்ரீஸம்போகம், பஹுவாகப் பண்ணுதல், இவற்றால் வஸ்தியில் உஷ்ணவாயு பிரகோபமாகி விருஷணம் வீங்கும். நோகும். துடிக்கும். நாளுக்குநாள் பருக்கும். கனமாக இருக்கும். இரையும். வயிறு ஊதும்.

வாதவிருத்தி.—வாயு பூர்ணமாகத் துருத்திபோல் இருக்கும். உஷ்ண மாக நோகும்.

பித்தவிருத்தி.—விருஷணம் அத்திப்பழம்போல் இருக்கும். விருஷணம் எரிச்சலுடன் உஷ்ணமாக இருக்கும்.

சிலேஷ்ம்விருத்தி.—விருஷணம் குளிர்ந்து இருக்கும். பாரமாகவும் கனமாகவும் இருக்கும். தினவு உண்டாகும். சிறுக நோகும்.

ரத்தவிருத்தி.—விருஷணங்கறுத்து எரிச்சலும் நோதலும் கூடி பித்தவிருத்திலக்ஷணம் பெற்று இருக்கும்.

மேதோவிருத்தி.—சிலேஷ்ம விருத்திபோலும் பனம்பழம்போலும் இருக்கும்.

மூத்திரஜ விருத்தி.—தோல்பையிலே நீரை நிரப்பினதுபோல் உஷ்ண மாக இருக்கும். நோதலோடு மிருதுவாக இருக்கும்

ஆந்திரவிருத்தி.—விதை இரண்டும் வீங்கும். தொப்புளுக்கும் மேட்டி ரத்துக்கும் நடுவே ஒரு புறமாக வீங்கும். நடக்க முடியாது. ஜ்வரம் வரும். வயிறு ஊதும். வீக்கத்தைக் கையில் அமுக்கினால் கலகலவென்று சத்தம் போடும். வயிற்றுக்குள்ளும் வீக்கம் காண்பிக்கும். வீக்கம் கல் போலே இருக்கும். அள்ளை, நரம்பை இழுத்து வாங்கும்.

விருத்தி சிகிச்சை.

கொட்டைக்கரந்தைப்பட்டை, வட்டைகூறும் எருமை (?) ஆட்டாங் கொடி (?) வட்டதுத்தி, முக்கொற்றன், இவற்றை வறுத்து இடித்து வதக்கிக் கட்ட, எட்டுக்காதம் விட்டோடும்.

கொட்டைக்கரந்தையினிளம்தழை ஒரு பிடி அரிந்து பிண்ணாக்குடன் ஒரு செறங்கை வெங்காயமும் போட்டு புழுக்கி எண்ணெய் வார்த்துத் தின்ன வெளிமூலம் தீரும்.

கொட்டைக்கரந்தைக்கு கோழிப் பலியிட்டுப் பிடுங்கி தலைபக்கம் அறுத்து உள்ளே குறித்து வளியனை சிறுநீர் பெய்யச்சொல்லி சிறுநீர் சிந்தாமல் உரியைக்கட்டி சட்டிக்குள் வைக்க அந்த சிறுநீர்வற்றினுல் அவன் வளி வற்றும்.

சேவகனார்கிழங்குநடுவருமல் பிடுங்கி கீழ்மேலாகக் கட்டி வளியனை சிறுநீர் பெய்யச் சொல்லி ஊறவைத்து அதில் தூவி வைக்கவும். அஃது உலரும்போது வளிவற்றும்.

ஊசிமல்லிகைவேரை மேல்தோல் சீவி, உள்ளிமிளகு கூட்டி வெந்நீரில் அரைத்து எட்டுநாள் உட்கொள்ள வயிற்றுவலி, குடல்முறுக்கிவலித்தல், விதையேறல் இவை இறங்கல் தீரும்.

பாட்டு.

முதியார் கூந்தல் கொடிவேலி முருங்கைப் பட்டை குளவிந்தம்
கொதியாய் வெந்த கழல்பருப்பு கொள்ளுங் காணச் சாறுடனே
விதியால் வந்த விதைவாதம் வெறுமை கொண்ட வேசியைப்போல்
குதியா தாகில் புத்தகத்தைக் கொடுப்பேன் நதியில் விடுப்பேனே.

முதியார் கூந்தல் கொடிவேலி முருங்கைப்பட்டை கழல்பருப்பு
புதிதாய் அன்னம் சாரட்டைவேர் போத இங்கு தான் கூட்டி
உரியாய் வெந்த நீர்தன்னை ஊதிக் குடிக்க வல்லீராய்
விதியால் வந்த குடல்வாதம் வெறு டேபோம் கண்டீரே.

வத்தல் தேங்காய் வசம்புள்ளி வசியா மணக்கம் விதையெள்ளு
சித்தந் திகழும் சிறுகடுகு சிறியா மணக்கு வேப்பெண்ணெய்
ஒத்திப் போட குடல்வாதம் ஓடி ஒளித்துப் போகாட்டால்
சித்தன் நானு மல்லன்மகா தேவ ராணை பொய்யல்ல.

காட்டுப்பன்றித் தோல்உரித்து கோவணம் போல் கட்ட வளி தீரும். பச்சோந்தித் தோல் வாங்கி கிரியையில் கோவணத்துக்குள் வைத்து விதை மறையக் கட்ட, வளி வற்றும். மூஞ்சூருத்தோல் கிரியையில் வாங்கி கோவணத்துக்குள் வைத்துவிதைமறையக் கட்ட வளி வற்றும்.

உள்ளி ஆமணக்கெண்ணெய்.

உள்ளி ஆமணக்கெண்ணெய், முடக்கொற்றன், பேராமுட்டிவேர், ஆமணக்கம்வேர், முருங்கைவேர், புனல்முருங்கைவேர், சாறடைவேர், பாவட்டைவேர், ஆயில்பட்டை, புங்கம்பட்டை, கல்கோவைக்கிழங்கு, கோவைக் கிழங்கு, கொடிவேலிவேர், கள்ளிவேர், இலைக்கள்ளிவேர், பாவட்டைவேர் உகாவேர், மாவிலிங்கம்பட்டை, ஆட்டுக்கொடிப்போலைப்பட்டை, ஆதண்டை சமூலம், சிறுகுறிஞ்சான், பெருங்குறிஞ்சான், காட்டாமணக்கு, ஆட்டாங் கொடி, பிரண்டைவேர், மருள்வேர், காட்டுக்கருணை, நிலாவரை, முதியார் கூந்தல், கள்ளிமுதிப்பட்டை, இவற்றை இடித்துக் கஷாயமிட்டு, நொச்சிச் சாறு, பாவட்டைச்சாறு, வீழிச்சாறு, கொட்டைக்கரந்தைச்சாறு, சாரட்டைச்

சாறு, இவற்றைக் கஷாயத்துடன் கூட்டி, சிற்றுமணக்கெண்ணெய், பால், எண்ணெய்க்கு எட்டிலொன்று சதுரக்கள்ளிப்பால் கூட்டி, கழல் பருப்பு, பெருங்காயம், வெள்வெங்காயத்தோல் படி அரை வசம்பு கொடிவேலி வேர், இந்துப்பு, திரிகடுகம், ஓமம், இருசீரகம், யவாக்ஷாரம், திரிபலை, சிவதை, சித்தவாங்கிழங்கு(?) ஆகாசகருடன்கிழங்கு, கிளிமூக்குக்கிழங்கு, செங்கத் தாரிப்பட்டை இவற்றை அரைத்துக் கரைத்து வடித்து உள்ளுக்குக் கொள்ள குடல்வாதம், மஹோதரம், குன்மம், உதிரவிருத்தி இவை தீரும்.

கழல்தழையை வறுத்துக் கட்ட வளி தீரும். மெருகக்கிழங்கைச் சூரணம் பண்ணி காடியில் கொதிப்பித்து வளியில் தடவ வளி வற்றும்.

சுகுமார ரஸாயனம்.

சாரணைவேர் பலம் 50, தசமூலம் ஒவ்வொன்றும் பலம் 10, அமுக்கரா வேர் பலம் 10, தர்ப்பைவேர் பலம் 10, ஆதண்டை, மாவிலிங்கை, குறிஞ்சா கொடிவேல், ஆட்டுக்கொடிப்பாலை, கண்டங்கத்தரி, புங்கு ஆயில், முருங்கை, புனல்முருங்கை, பாவட்டைவேர் இவற்றைக் கஷாயமிட்டு வீழிச்சாறு, பாவட்டையிலைச்சாறு, சாரட்டைச்சாறு, தண்ணீர்விட்டான்சாறு இவைகூட்டி வெல்லம் படி அதிரஸபாகு பதமாகக் காய்ச்சி அந்தப் பாகில் சிற்றுமணக் கெண்ணெய் படி 4, நெய் படி $\frac{1}{2}$ கூட்டி பாகில் துழாவி பஞ்சகோலம் ப்ரதக் 2 பலம், மிளகு 2 பலம், பெருங்காயம் 1 பலம், இந்துப்பு 1 பலம், வெள்வெங்காயம் $\frac{1}{2}$-படி(?) கழல் பருப்பு 1-படி(?) யவக்ஷாரம் பலம் $\frac{1}{2}$, அதி மதுரம், கர்ஜூரம், திராக்ஷை 1 பலம், சீரகத்துவயம் 1 பலம், கற்கடகசிங்கி, திரிகடுகம் திரிபலை, தாளிசபத்திரி இவை வகைக்கு பலமாக இடித்து சூரணம் பண்ணி பாகில் கலந்து பல்லாவில் எடுத்துக்கொள்ள குடல்வாதம் விப்புருதி குன்மம் மூலம் யோனிரோகம் சர்வவாதம் சோபை மகோதரம் ப்லீஹம் உதாவாதம் இவை தீரும்.

வேறொரு முறை.

நரிப்பயறு, தாழைச்சாறு, சிறுகொற்றுசாறு, வீழிச்சாறு, கழற்கொடிச்சாறு சாதிக்காய். சாதிபத்திரி இவை எல்லாம் இருபங்கு வெள்வெங்காயம் நாலு பங்கு வெள்ளைக்குங்கிலியம் சாரணைவேர் சிற்றுமணக்கெண்ணெயில் வடித்து உள்ளுக்கும் கொண்டு மேலுக்கும் இட அண்டவாதம் தீரும்.

சிறுகொற்றான், கழற்கொடிதாழை இவற்றை வதக்கி எண்ணெயைத் தடவிக்கட்டவும்.

ஸூதசேகர ரஸம்.

ரஸம், லோஹபஸ்பம், தாம்ரபஸ்பம், வெண்காரம், நாவி, ஊமத்தை விதை, கந்தகம், சங்கபஸ்பம், சதுர்ஜாதகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கச்சோலம், வில்வவிதை, இவை எல்லாம் சமபாகம் நிறுத்துக்கொண்டு கரிசலாங் கண்ணிச்சாற்றில் அரைத்து உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி மூங்கில் குழாயில் அடைத்து தானிய புடத்தில் வைத்து தேனில் உட்கொள்ள வும். இதனால் ஆமபித்தம், வாந்தி, சூலை, பித்தகாசம், பித்தகிரஹணி, அதிசாரம், ராஜயக்ஷ்மா முதலியவை தீரும்.

கந்தக ரஸாயனம்.

கடுக்காய், தான்றிகாய், நெல்லிக்காய், மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், சித்திரமூலம், லவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், சீரகம், கந்தகம் இவை ஒவ்வொன்று வராகனெடை 3, இவற்றைச் சூரணம் செய்து அதனோடு அதன் சமஅளவு சர்க்கரை சேர்க்கவும்.

அப்பிரகம், சுண்டை, முசுட்டைவிரை, பூனைக்காலிவிரை, நீர்முள்ளி விதை, கருசலாகண்ணி, சணப்பவிதை, கஞ்சாவிதை, முருங்கைவிதை, மூங்கில்விதை, உளுந்து; எள், கொடிவேலிவேர்ப்பட்டை, எலவசந்திவேர் பட்டை(?) அமுக்கராக்கிழங்கு, சாறடைவேர்ப்பட்டை, நெருஞ்சில்வேர், பூமிசர்க்கரை, தண்ணீர்விட்டான்கிழங்கு, நன்னாரிவேர், நிலப்பனங்கிழங்கு, ஆடாதோடை, வேர்ப்பட்டை, அதிமதுரம், கோஷ்டம், வெந்தயம், இலவம் பிசின், ஓமம், கொத்துமல்லிவிதை, நாகபலை, பூலாங்கிழங்கு, சாதிக்காய் சாதிபத்திரி, லவங்கம், இந்துப்பு, கண்டுபாரங்கி, கற்கடகசிங்கி, சாரைப்பருப்பு, கசகசா, மிளகு, திப்பிலி, சீரகம்; கருஞ்சீரகம், லவங்கப்பட்டை, பத்திரி, ஏலம், நாகப்பூ, ஆனைத்திப்பிலி, பேரீச்சம்பழம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கஞ்சா, இவற்றைப், பொடிசெய்து சூரணம் இரண்டு பங்கும் சர்க்கரை இரண்டு பங்கும் தேன் ஒரு பங்கும் கலந்து வைத்துக்கொண்டு சாப்பிடவும்.

முந்திரிப்பழம் இலை மருந்து [அபின் (?)] ஊமத்தைவிதை, ஏலரிசி, சமுத்திரசோகிவிதை, குரோசாணி, ஓமம், கஞ்சாப்பொடி, பச்சைக்கற்பூரம், இவையெல்லாம் சமபாகம் எடுத்து கஞ்சாவிலைச்சாற்றில் பதினைந்து நாழிகை அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டைபண்ணி இரண்டு குளிகை தேனி லாவது சர்க்கரையிலாவது உட்கொள்ளவும்- வீரியமுண்டாம். சுக்கிலஸ்தம் பனம், மூலம்கிராணி, அதிசாரவாதம் இவை போம்.

தேற்றான்கொட்டை, கிராம்பு, முள்ளி, சிறுபீளைவேர், பொன்னாங்காணி வேர் இவை எல்லாம் ஒக்கக்கொண்டு பொடிசெய்து மாக்குள்ளே [பால் (?)] போட நெய்யாகும். ஆவாரையிலைச்சாற்றை பசுவின்பாலில் குடிக்கவும். மேலுக்கும் பூசவும். வசம்பு கூட்டிக் கலந்து நாபியிலும் காதிலும் விட்டு உச்சந்தலையிலும் தேய்த்து இறக்கிப் போடவும் * * * * வெண்காரம், மனோசிலை * * * வார்த்து அரைத்து செப்பு வட்டி யில் வார்த்து பலியிட்டுப் பிடுங்கி வறு. இடிந்த வாயை (?) வெள்ளி கட்டி பெருந்தழையை வசம்பு கட்டி வெள்ளி கட்டினதை தலைகீழாக அசனம் கட்டவும். குளிசம் பாவட்டம்வேர், ஆவாரைவேர் கிழக்கு போகும் வேரைப்பிடுங்கி குளிசமாடி அசனம் * * * * * * * * * * * ஒட்டத்துக்கு குடமுருட்டிவேர், உப்பிலிவேர் வடக்கே போகும் வேரை உலர்த்திச் சூரணம் பண்ணி மோரில் போடத் தயிராம். ஒட்டத்துக்கு குட முருட்டிவேர், உப்பிலிவேர் வடக்கே போகும் வேரை குளிசமாடி அரையில் அடக்கிக்கொண்டு ஓட ஓடலாம்.

வெள்ளைக்காவேளைவேர் குளிசமாடி வாயில் * * * * ஓடவும். மாவிலிங்கம் ரசம்—நாபி—கந்தகம் 3 ஊமத்தம் விதை 3 திப்பிலி சுக்கு

மிளகு 9 வாழைத்தண்டு அதன் பூச்சாறு வார்த்தரைத்து உளுந்து மருவாதி * * * இஞ்சிச்சாறு, சுக்குச்சாற்றில் கொடுக்கவும். வெற்றிலைச் சாற்றில் கலந்து கொடுக்கவும்.

சஞ்சீவிரஸம்.

வாதசுரத்துக்கு நாபி 1, சாதிலிங்கம் 1, திப்பிலி 1 சுக்கு இவை எல்லாம் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து சிறுபயறு அளவு உருண்டைபண்ணி வெந்நீரில் கொடுக்கவும். இதற்குத் தி * * * விதையிலை தண்ணீரில் காய்ச்சித் தழை எடுத்துவிட்டு அதில் அரிசிபோட்டு கஞ்சிகாய்ச்சி குடிக்கவும்.

தேனீ கடியாமல்.

கஞ்சாங்கோரைச் சாற்றை உடம்பில் தடவிக் கொண்டு தேன் அழிக்கவும்.